விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 மாசி 21 செவ்வாய்க்கிழமை (05.03.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 076

## திருக்கேதீஸ்வரத்தில் சிவராத்திரி வளைவு உடைத்தமை கத்தோலிக்கர்களை தலைகுனிய வைத்துள்ளது

### யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் கடும் கண்டனம்



(யாழ்ப்பாணம்)

எமது இந்து மத சகோதரர்களின் மிகவும் பழமை வாய்ந்த சரித்திரப் பிரசித்தி பெற்ற திருத்தலமாக விளங்குகின்ற திருக்கேதீஸ்வர ஆலய வீதியில் அமைக்கப்பட்டிருந்த வளைவு ஒரு கத்தோலிக்க குருவின் வழிகாட்டலில் கத்தோலிக்க மக்களால் சேதமாக்கப்பட்ட நிகழ்வு பற்றி ஊடகங்களில் வெளியான செய்திகள் எமக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளது.

கத்தோலிக்கர் என்ற வகையில் நாம் வெட்கித் தலைகுனிவதோடு எமது வன்மையான கண்டனத்தையும் தெரிவிக்கின்றோம் என யாழ்ப்பாண மறை மாவட்ட குருமுதல்வர் ப.யோ.ஜெபரட்ணம் தெரிவித்துள்ளார். (விரிவான செய்தி 8ம் பக்கம்)

## சிவராத்திரி வளைவு உடைத்தமைக்கு செஞ்சொற் செல்வர் கடும் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

திருக்கேதீஸ்வர ஆலய நுழைவாயில் வளைவு கிறிஸ்தவ பாதிரியார் தலைமையில் உடைக்கப்பட்டமை சைவ சமய மக்கள் மனதை காயப்படுத்தியதுடன் அதிர்ச்சியடைய வைத்துள்ளது என தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். (விரிவான செய்தி 8 ஆம் பக்கத்தில்...)



## புதிய பட்ஜெட் பாராளுமன்றில் இன்று சமர்ப்பிப்பு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான, ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் இன்று 23

## திருக்கேதீஸ்வரத்தில் பல இலட்சம் பக்தர்கள் பங்கேற்று வழிபாடு



24

## நெல்லியடிப் பகுதியில் மாவாப் பாக்குடன் ஒருவர் கைது

(கரணவாய்)

நெல்லியடி நகரில் மாவாப் பாக்குடன் நடமாடிய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டதாக 24

# மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் உடைத்த வளைவை உடனே அமைக்குக

## மன்னார் நீதிமன்றம் அதிரடி உத்தரவு



(மன்னார்) திருக்கேதீஸ்வர ஆலய நுழைவாயிலில் அகற்றப்பட்ட வரவேற்பு வளைவினை மீண்டும் தற்காலிகமாக அமைத்து எதிர்வரும் நான்கு நாட்களுக்கு வைக்குமாறு மன்னார் நீதிமன்றம் நேற்று திங்கட்கிழமை அதிரடியாக உத்தரவிட்டுள்ளது.

(23-ம் பக்கம் பார்க்க...)

## படையினர் வசமுள்ள காணிகளை துரிதமாக விடுவிக்க வேண்டும்

### யாழ். கட்டளைத் தளபதியிடம் ஆளுநர் கோரிக்கை




(யாழ்ப்பாணம்)

யாழில் படையினர் வசமுள்ள தனியார் காணிகளை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்துமாறு வடக்கு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் கோரியுள்ளார்.

யாழ்.மாவட்ட 24

## முள்ளிவாய்க்காலில் நடந்த இனப்படுகொலைக்கு நீதி கோரி ஜெனிவாவில் ஆர்ப்பாட்டம்




23

## வடக்கு மாகாணத்தில் பொலிஸ் பயிற்சி கல்லூரி அமைப்பதை துரிதப்படுத்துக

### - ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தமிழ்மொழி பேசும் பொலிஸ் உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் நடவடிக்கை மற்றும் வடக்கு மாகாணத்தில் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியை அமைக்கும் பணிகளைத் துரிதப்படுத்து 23

## முள்ளிவாய்க்காலில் விடுதலைப்புலிகளின் இலக்கத்தகடுகள் மீட்பு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவில் இறுதி யுத்தம் நடைபெற்ற இடத்தில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் 23

## வரும் 19ஆம் திகதி வடக்கு, கிழக்கில் பூரண ஹர்த்தாலுக்கு அழைப்பு

### உணர்வுபூர்வமாக பங்களிக்குமாறு கோரிக்கை

(மட்டக்களப்பு)

வடக்கு மற்றும் கிழக்கில் கடையடைப்பு போராட்டத்திற்கு காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் அழைப்பு விடுத்துள்ளனர்.

இந்த போராட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அன்றைய தினம் இடம்பெறும் கவனயீர்ப்பு பேரணியிலும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளனர்.

இந்த போராட்டம் தொடர்பாக நேற்று திங்கட்கிழமை மட்டக்களப்பு புகையிரத வீதியில் உள்ள இணையம் அலுவலகத்தில் கிழக்கு மாகாண வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் அமைப்பு ஊடகவியலாளர் 23

## யாழ். வலிகாமம் வடக்கில் இராணுவத்தினர் வசமிருந்த 20 ஏக்கர் காணிகள் விடுவிப்பு




10

IBC தமிழ்

NOBLE INTERNATIONAL
Papers Lanka (Private) Limited

## Accounts Assistance

Noble international Papers Lanka (Pvt) Ltd is a paper manufacturing company located in industrial estate Achuvely Jaffna.The company was established in 2014 and presently is a significant paper manufactures in Sri Lanka.

We are looking for the suitable candidate who is having the following qualifications

*The ideal candidate should be:*

- Fully qualify in AAT or HNDA or equaling other qualification.
- Minimum one year relevant experience.
- Candidates with excellent written and spoken English and aCredit for English Language and Mathematics at G.C.E O/L's;
- Below 26 years of age as at 10th March 2019.

**Those who meet the specified criteria should send application letter with CV and e-mail to :** noblehrm5@gmail.com on or before 10th March 2019

(C-5690)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சத்தியமூர்த்தி மகேஸ்வரி



புதுக்குடியிருப்பு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சத்தியமூர்த்தி மகேஸ்வரி 01.03.2019 அன்று காலமானார்.

அன்னார் புதுக்குடியிருப்பு றோ.க.வித்தியாலய ஆசிரியரும் முன்னாள் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை ஆசிரியரும் ஆவார்.

அன்னார் காலஞ்சென்ற இராசேந்திரம் (நற்குணம்) - இலட்சுமி ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம் - தவமணி ஆகியோரின் அன்பு மருமகளும், சத்தியமூர்த்தி (குமரன்ஸ் புத்தகசாலை) அவர்களின் அன்பு மனைவியும், பகீரதன் (பிரான்ஸ்), துர்த்திகா (அவுஸ்திரேலியா), கீர்த்திகா (இராமநாதன் நுண்கலைக் கல்லூரி), சதுர்சன் (பல்கலைக் கழக புகுமுக மாணவன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், நிமல்ராஜ் (அவுஸ்திரேலியா) அவர்களின் அன்பு மாமியாரும், பேரின்பநாயகம் (தவம்), காலஞ்சென்ற கனகம்மா, தங்கமலர், செல்வநாயகம் (ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்) அழகநாயகம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற லோகநாயகம், கேதீஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வச்சந்திரன், அமுதா, கனேஸ்வரி, சிவபாதசுந்தரம், காலஞ்சென்ற விக்கினேஸ்வரன், பரமேஸ்வரி (ஆசிரியர் - புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), வசந்தி (ஆசிரியர் - மன்னா கண்டல் அ.த.க. பாடசாலை), சரத் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (05.03.2019) செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக புதுக்குடியிருப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-5691)

புதுக்குடியிருப்பு, 4ஆம் வட்டாரம். தகவல் : குடும்பத்தினர்

# கண்ணீர்க் காணிக்கை



அமரர் திருமதி

## மகேஸ்வரி சத்தியமூர்த்தி

எமது பாடசாலையின் தமிழ்ப் பாட ஆசிரியர் பேரன்புக்குரிய அமரர் *திருமதி மகேஸ்வரி சத்தியமூர்த்தி* அவர்கள் 01.03.2019 அன்று இறைபதமடைந்த செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன் அவரின் குடும்பத்தின் துயரில் பங்கு கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள்**
**மு/புதுக்குடியிருப்பு றோ.க. வித்தியாலயம்.**

(7739)

## அருணாசலம் சிதம்பரநாதன் (சொக்கர்)

(ஓய்வு பெற்ற பிரதம எழுதுவினைஞர், பெருந்தெருக்கள் திணைக்களம்)



மல்லாகத்தை பிறப்பிடமாகவும் புத்தூர் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் சிதம்பரநாதன் 04.03.2019 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் - கண்மணிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவகுரு - நல்லம்மா தம்பதியினரின் ஆசை மருமகனும், இராசம்மாவின் அன்புக்கணவரும், ரமணன் (கொழும்பு), பாலசுதர்சினி (லண்டன்), நிரஞ்சன் (கொழும்பு), ஸ்ரீகரன் (Metropolitan Office Pvt Ltd) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுபாசினி, பாலமுரளி, இராஜரூபினி, பாதுஷா ஆகியோரின் ஆசை மாமனாரும் சௌமியா, கோசிகன், ருஷாந், ருபீஷினி, மிதுஜன், பிரவீஷ், ஜசீந்தன், அவந்திக்கா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான தம்பிஐயா, மகேஸ்வரி, செல்வராணி பரமேஸ்வரி, இராமநாதன் மற்றும் புவனேஸ்வரி, ஞானேஸ்வரி, புஸ்பராணி, இரங்கநாதன், பவளராணி, சிவலிங்கநாதன் ஆகியோரின் அருமைச் சகோதரரும், சுப்பிரமணியத்தின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 07.03.2019 வியாழக்கிழமை அன்று காலை 9.00 மணியளவில் புத்தூர் வடக்கில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரதடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-5692)

புத்தூர் வடக்கு, புத்தூர். 021 205 8888 தகவல் : குடும்பத்தினர்

# திருக்கேதீஸ்வரத்தில் சிவராத்திரி வளைவு உடைப்பையடுத்து அனைத்து மத பிரதிநிதிகள் குழு அமைக்க ஆளுநர் முடிவு

## பிரச்சினையை சுமுகமாகத் தீர்க்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

இந்து குருக்கள் சபையின்தலைவர்சிவஸ்ரீ கேவீகே. வைத்தீஸ்வரக் குருக்கள் ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனை நேற்று முற்பகல் ஆளுநர் அலுவலகத்தில் சந்தித்தார்.





இந்தச் சந்திப்பின்போது வடமாகாணத்தில் மதங்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் மற்றும் வடமாகாணத்தில் இந்துக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட்டது.

மேலும் மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற சம்பவம் தொடர்பிலும் கவனம் செலுத்திய ஆளுநர் இந்த பிரச்சினையை முடிவிற்கு கொண்டுவரும் நோக்கில் அனைத்து மதங்களினுடைய பிரதிநிதிகள் குழுவொன்றை ஸ்தாபித்து கலந்துரையாடல்களை மேற்கொள்வதனூடாக இந்த பிரச்சினையை சுமுகமாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்தக் குழுவில் இந்து மதத்தை சேர்ந்த மூன்று பேர். கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த மூவர். பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர், அரச அதிபர் சார்பில் ஒருவர் மற்றும் பொது அமைப்பை சேர்ந்த ஒருவர் உள்ளடங்கலாக மொத்தம்ஒன்பது பேர் கொண்ட குழு ஸ்தாபிக்கப்படும் என்று ஆளுநர் தெரிவித்தார்.

இதன்போது சிவஸ்ரீ கே.வீ.கே. வைத்தீஸ்வரக் குருக்களால் இந்து ஒளி சஞ்சிகை மற்றும் நந்திக் கொடி ஆகியன ஆளுநரிடம் கையளிக்கப்பட்டன.

இந்த சந்திப்பில் ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்து கொண்டார். (இ)

### "பிரிவினையை ஏற்படுத்த தீய சக்திகள் ஊடுருவல்"

# மதவாதத்தைத் தூண்ட வேண்டாம்

# பொறுப்புணர்ச்சியுடன் செயற்படுங்கள்

## சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி.கோரிக்கை

(மன்னார்)

**மதவாதத்தைத் தூண்டும் செயற்பாடுகளைத் தவிர்த்து அனைவரும் பொறுப்புணர்ச்சியுடன் செயற்பட வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.**

மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற அசம்பாவிதம் தொடர்பாக நேற்று திருக்கேதீஸ்வர கோயில் நிர்வாகத்தினருடனும் மாந்தை பங்கு தந்தையிடமும் தனித்தனியாக சம்பவஇடத்துக்குசென்றுஉண்மை நிலவரங்களைக் கேட்டறிந்து கொண்டார்.

அதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இது போன்ற சம்பவங்கள் இனிமேலும் நிகழாதிருக்கவும் முரண்பட்ட இரு மதத்துக்கிடையில் ஒரு சந்திப்பை மேற்கொண்டு இதைச் சுமுகமாகத் தீர்க்க அனைவரும் முன்வரவேண்டும்.

இச்சம்பவங்களால் எமது இனத்தில் அரசியல் இலக்குகள் திசை மாறிச் செல்ல நாம் ஒருபோதும் அனுமதிக்க போவதில்லை என சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

வன்முறைகளால் எந்த விதமான ஒரு தீர்வையும் நாம் அடைந்துவிட முடியாது. அனைவரும் பொறுமையாக பொறுப்புணர்ச்சியுடன் செயற்பட முன்வரவேண்டும்.

இதை பயன்படுத்தி பல



தீய சக்திகள் நாசகார வேலைகளில் ஈடுபடுவதற்கு முன் வருவார்கள்.

ஆகவே எமது இனத்தின் முறுகலை சுமுகமர்க பேசி அல்லது சட்டத்தை நாடி ஒரு முடிவிற்கு நாம் அனைவரும் வரவேண்டும்.

இது தொடர்பாக இந்து கலாசார அமைச்சர் என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டறிந்து கொண்டார்.

தமிழ் மக்களுக்கிடையில் பிரிவினையை ஏற்படுத்தி இதில் குளிர்காய பல தீய சக்திகள் எமக்குள் ஊடுருவியுள்ளன.

ஆகவே அனைவரும் பொறுப்புணர்ச்சியுடன் மதங்களை மதித்து செயற்படுமாறு கேட்டுக்கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-285)


## BA, B.Com, BBA (MEDIUM TAMIL)

### இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம், ஒலுவில் (வெளிவாரி)

- மேற்படி பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
- A/L இல் கலை,வர்த்தகம்,தொழில் நுட்பம்,கணிதம்,விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் மூன்று பாடம் சித்தியும் பொது வினாவிற்கு (COMMON GENTRAL MARKS) 30 புள்ளிகளுக்கு மேற்பட்டவர்கள் விண்ணப்பிக்க தகுதியுடையவர் ஆவர்.
- A/L 2017 ஆம் ஆண்டும் இதற்கு முன்னர் பரீட்சை எடுத்தவர்களும் விண்ணப்பிக்க முடியும்.
- இக் கற்கை நெறிகளினது கால எல்லை மூன்று ஆண்டுகள் ஆகும்.
- பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக செய்து தரப்படும்.
- **பதிவு முடிவு திகதி: 25.03.2019** (C-5689)

புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

விபரங்களுக்கு:
T.P.No: 021 222 8148, 077 846 9721, 077 607 1954, 077 314 4762



## சேவைநலன் பாராட்டு




திரு. தம்பையா பாலசண்முகநாதன் B.Sc, PGDE, SLTS - I

(பழைய மாணவன் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)

**ஆசிரிய சேவையில்**

01. தி/சேனையூர் மத்திய கல்லூரி,மூதூர்:17.10.1988- 31.05.1990
02. தி/ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி: 01.06.1990- 31.12.1992
03. யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி: 01.01.1993 -19.10.2017
04. யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி: 20.10.2017 - 04.03.2019

இந்து அன்னையின் புதல்வனாய் ஆசிரியப் பணிதனில் முடிசூடி
இன்று இனிதாய் கடந்ததுவே ஆண்டுகள் மூபத்து.
மாணவர் கல்விதனில் சிறப்புறப்பணி செய்து
அகவையது ஆறுபத்து கழித்திட்ட மணிவிழா நாயகனே பாலா!
உம் சேவைதனைப் பாராட்டி அகம் மகிழ்ந்து வாழ்த்துகிறோம்

(C-5684)

ஆசிரியர் கழகம், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

# இந்தியாவுக்கு பதிலடி ஆஸி., ரெடி

## ஒரேஞ்ச் நகரில் இன்று 2ஆவது மோதல்

அவுஸ்திரேலியா - இந்தியா அணிகள் மோதும் இரண்டாவது ஒருநாள் போட்டி இன்று நடக்கிறது. இதில் இந்திய அணிக்கு அவுஸ்திரேலியா பதிலடி கொடுக்கும் என நம்பப்படுகிறது.

இந்தியா சென்றுள்ள அவுஸ்திரேலிய அணி ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது.

ஹைதராபாத்தில் நடந்த முதல் போட்டியில் வென்ற இந்தியா 1-0 என தொடரில் முன்னிலை வகிக்கிறது.

இரண்டாவது போட்டி ஒரேஞ்ச் பழத்திற்கு பெயர் போன நாக்பூரில் இன்று நடக்கிறது.

உலக கிண்ணத் தொடருக்கான வெற்றிக் கூட்டணியை தொடர்ந்து தேடி வருகிறது இந்திய அணி. மூன்றாவது ஆரம்ப துடுப்பாட்ட வீரர், இரண்டாவது விக்கெட் காப்பாளர் என இருவரது இடம் மட்டும் இன்னும் உறுதியில்லாமல் உள்ளது.

ஆரம்ப துடுப்பாட்டத்தில் ஷிகர் தவான் தொடர்ந்து தடுமாறுவதால் இன்று லோகேஷ் ராகுல் வாய்ப்பு பெறலாம். ரோகித் சர்மா, அணித் தலைவர் ஹோலி இருவரது ஓட்ட வேட்கை தொடர்வதால் இந்திய அணி நல்ல ஓட்டஎண்ணிக்கையை எட்டும் என நம்பலாம்.

நான்காவது இடத்தில் வரும் அம்பதி ராயுடு இன்று மீண்டு வர வேண்டிய கட்டாயத்தில் உள்ளார். அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான ஒருநாள் அரங்கில் தொடர்ந்து நான்கு அரைச் சதம் அடித்த 'சீனியர்' தோனி, கேதர் ஜாதவ் இருவரும் இணைந்து முதல் போட்டியில் சிறப்பான வெற்றி பெற்றுக் கொடுத்தனர்.

**மூன்று வெற்றி**

இந்தியா - அவுஸ்திரேலிய அணிகள் நாக்பூரில் மூன்று போட்டிகளில் மோதின. இந்த மூன்றிலும் இந்திய அணி வெற்றி பெற்று ஆதிக்கம் செலுத்துகிறது.

◈ 2011 உலக கிண்ணத் தொடரில் அவுஸ்திரேலிய அணி இங்கு நியூசிலாந்தை வென்றது.

இவர்களது கூட்டணி தொடர்ந்தால் மற்றொரு வெற்றி எளிதாகும். பின்வரிசையில் விஜய் ஷங்கர், ஜடேஜாவின் துடுப்பாட்டம் இன்னும் சோதிக்கப்படவில்லை. ஹர்திக் பாண்ட்யா இடத்தில் களமிறங்கிய 'சகல துறை வீரர் விஜய் ஷங்கருக்கு இன்று அக்னிப் பரீட்சைதான். ஒருவேளை இவ ருக்குப் பதில் இன்று ரிஷாப் பன்ட் களமிறங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

**பந்துவீச்சு எப்படி**

பந்துவீச்சைப் பொறுத்தவரையில் மொஹமட் ஷமி மிரட்டுகிறார். 2017 சம்பியன்ஸ் டிரொபி தொடருக்குப் பின் ஒரு போட்டியில் அதிக ஓட்டங்கள் (10 ஓவரில் 60 ஓட்.,) விட்டுக் கொடுத்த பும்ரா இன்று சுதாகரித்துக் கொள்வார் என எதிர்பார்க்கலாம்.

சுழலில் ஓட்டங்களை கட்டுப்படுத்தினாலும் ஜடேஜா விக்கெட் வீழ்த்தவில்லை. குல்தீப் யாதவ் எதிர்பார்த்தபடி பிரகாசிக்கிறார். இன்று சகால் களமிறங்குவாரா என பொறுத்திருந்து காணலாம்.

**பின்ச் சோகம்**

அவுஸ்திரேலிய அணிக்கு அணித் தலைவர் பின்ச் 'போர்ம்'தான் பெரும் சோகமாக உள்ளது. 'ரி20' தொடரில் 0, 8 என ஏமாற்றிய இவர், முதல் போட்டியில் 'டக்' ஆனார். இன்று எழுச்சி பெற்றால் நல்லது என நிர்வாகம் நினைக்கிறது. கவாஜா, மக்ஸ்வெல், ஸ்ரொய்னிஸ், ஹேண்ட்ஸ்கோம்ப் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த முயற்சிக்கலாம்.

வேகப்பந்து வீச்சில் குல்டர் நைல், கம்மின்ஸ் கூட்டணியுடன் அன்ட்ரூ ரை இணைவார் எனத் தெரிகிறது. சுழலில் ஹோலியை நான்கு முறை வீழ்த்திய உற்சாகத்தில் உள்ளார் அடம் ஷாம்பா.



பயிற்சியினபோது ஆஸி..யின் மக்ஸ்வெல்

**சாதகம் யாருக்கு**

நாக்பூர் மைதானத்தில் இரண்டாவதாக துடுப்பாட்டம் செய்யும் அணிகள் அதிகம் வென்றன. இங்கு நடந்த 8 போட்டிகளில் 6ல் இரண்டாவதாக களமிறங்கிய அணி வெற்றி பெற்றது.

**ஆடுகளம் எப்படி**

நாக்பூர் ஆடுகளம் துடுப்பாட்டத்துக்கு சாதகமாக இருக்கும் என்றாலும் போகப் போக மந்தமாக இருக்கும். இதனால் சுழல் வீரர்கள் திறமையை வெளிப்படுத்தலாம்.

**மழை வருமா?**

இரண்டாவது போட்டி நடக்கவுள்ள நாக்பூரில் மதியம் வானம் தெளிவாக இருக்கும், மழை வர வாய்ப்பு இல்லை. வெப்பநிலை அதிகபட்சம் 33, குறைந்தபட்சம் 24 டிகிரி செல்சியஸ் வரை இருக்கும்.

# பெடரர் 100



வெற்றிக் கிண்ணத்துடன் ரோஜர் பெடரர்

டுபாய் ஓபன் பைனலில் வெற்றி பெற்ற சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், ஏ.டி.பி., டென்னிஸ் அரங்கில் தனது 100ஆவது சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

ஐக்கிய அரபு எமிரேட்சில் (யு.ஏ.இ.,) டுபாய் ஓபன் டென்னிஸ் சம்பியன்ஷிப் தொடர் நடந்தது. இதன் ஒற்றையர் பிரிவு பைனலில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், கிரீசின் ஸ்டெபானஸ் டிசிட்சிபாஸ் மோதினர்.

ஒரு மணி நேரம், 9 நிமிடம் நீடித்த போட்டியில் அபாரமாக ஆடிய பெடரர் 6-4, 6-4 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணம் வென்றார். இது, ஏ.டி.பி., அரங்கில் பெடரர் வென்ற 100வது பட்டம். ஏற்கெனவே அமெரிக்க வீரர் ஜிம்மி கானர்ஸ் அதிகபட்சமாக 109 முறை கிண்ணம் வென்றுள்ளார். பெண்கள் பிரிவில் அமெரிக்காவின் மார்டினா நவரத்திலோவா (167) அதிக பட்டம் கைப்பற்றி உள்ளார். தவிர இது, டுபாய் ஓபனில் பெடரர் கைப்பற்றிய 8ஆவது (2003-05, 07, 2012, 2014-16, 2019) பட்டம்.

**100 எப்படி**

இதுவரை 20 கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றுள்ள பெடரர், ஏ.டி.பி., பைனல்ஸ் தொடரில் 6, மாஸ்டர்ஸ் தொடரில் 27 முறை கிண்ணம் வென்றுள்ளார். தவிர, ஏ.டி.பி., 'வேர்ல்ட் டூர் - 500' அந்தஸ்து பெற்ற தொடரில் 22, 'வேர்ல்ட் டூர் - 250' அந்தஸ்து பெற்ற தொடரில் 25 முறை சம்பியன் பட்டத்தை கைப்பற்றி உள்ளார்.

**18 வயதில்...**

கடந்த 2001ல் மிலன் (இத்தாலி) நகரில் நடந்த தொடரில் பிரான்ஸ் வீரர் ஜூலியன் பாட்டரை வீழ்த்தி முதன்முறையாக கிண்ணம் வென்றார் பெடரர். அப்போது பெடரருக்கு வயது 18. தற்போது இவருக்கு 37 வயதாகிறது.

**நடாலுக்கு எதிராக**

ஏ.டி.பி., பைனலில் ஸ்பெயின் வீரர் ரபெல் நடாலை வீழ்த்தி அதிகபட்சமாக 10 முறை கிண்ணம் வென்றுள்ளார் பெடரர். இவர், அமெரிக்காவின் அன்டி ரோடிக் (7 முறை), செர்பியாவின் நோவக் ஜோகோவிச் (6), பிரிட்டனின் அன்டி முர்ரே (5) ஆகியோருக்கு எதிராகவும் பைனலில் அதிக வெற்றியை பதிவு செய்துள்ளார்.

**சொந்த மண்ணில் ஆதிக்கம்**

சொந்த மண்ணான சுவிட்சர்லாந்தின் பசல் மற்றும் ஜேர்மனியின் ஹாலே நகரில் நடந்த தொடர்களில் ஆதிக்கம் செலுத்திய பெடரர் அதிகபட்சமாக தலா 9 முறை கிண்ணம் வென்றுள்ளார்.

இதேபோல விம்பிள்டன், டுபாய் ஓபனில் தலா 8 முறை சம்பியன் பட்டத்தை கைப்பற்றிய பெடரர், அவுஸ்திரேலிய ஓபன், சின்சினாட்டி ஓபனில் தலா 7 முறை கிண்ணம் வென்றுள்ளார்.

1ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1994 - 06 - 30



மறைவு 2018 - 02 - 14

அமரர் நிரோசா பாஸ்கரன்

நிஜமாய் மாறிய கனவு நீ...
கனவிலும் இழக்க முடியா உறவு நீ...
நிஜத்திலும் கனவிலும் நாங்கள்
தேடும் உள்ளம் நீ...
கனவுகள் கலைந்த போதும்...
கண்ணில் நீர் நிறைந்த போதும்...
உணர்வுகள் உடைந்த போதும்...
உள்ளத்தில் உன் உருவம்
மட்டும் உடையவில்லை...
வலி இல்லாத நினைவுகள்
மனதில் நிலைப்பதில்லை...
வலி பெற்ற நினைவுகள்
மனதை விட்டு மறைவதில்லை
என்றும் உன் நினைவுகளுடன் வாழ்கின்றோம்

10 வீட்டுத்திட்டம்
மாயவனூர், வட்டக்கச்சி.

(C-5693)

குடும்பத்தினர்

# திருக்கேதீஸ்வர மத வன்முறைச் சம்பவம் தமிழருக்கு வெட்கக்கேடு! சாபக்கேடு!

## இந்து விவகார அமைச்சர் மனோ காட்டம்

(கொழும்பு)

சிவராத்திரியை முன்னிட்டு திருக்கேதீஸ்வர ஆலய வீதி என அறியப்பட்ட வீதியில் அமைக்கப்பட்ட பெயர் வளைவு மத வன்முறையாளர்களால் உடைத்து நொறுக்கப்பட்டதும், அவ்வேளையில் அங்கு எழுப்பப் பட்ட கோஷங்களும் ஒட்டுமொத்த தமிழினத்தையுமே வெட்கக்கேட்டுக்கும், சாபக்கேட்டுக்கும் உள்ளாக்கியுள்ளது.

தமிழர் ஒற்றுமையை கேள்விக்கும், ஏனைய இனத் தோர் மத்தியில் கேலிக்கும் உள்ளாக்கியுள்ள இந்தச் சம்பவம் நெருக்கடியையும் ஏற்படுத்தியுள்ளது. அமைதிக்கு வழிகாட்ட வேண்டிய மதத் தலைவர்கள், வன்முறைக்குத் தலைமை தாங்குவதை கடுமையாக கண்டிக்கின்றேன் என இந்து சமய விவகார அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.



மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ள மடு தேவாலயம் தமிழ்க் கத்தோலிக்கர்களால் பாதுகாக்கப்படும் கத்தோலிக்க தலம் என்பது போன்று, அதே மாவட்டத்தில் அமைந்துள்ள திருக் கேதீஸ்வர ஆலயம், தமிழ் இந்துக்களால் பாதுகாக் கப்படும் பாடல்பெற்ற இந்துத் தலம் என்பதும் அறியப்பட வேண்டும். இரு தரப்புக்களும், இந்த அடிப்படை உண் மையைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இதை மீறும் எந்தவொரு அடாவடி நடவடிக்கையையும் ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

முதலில் சிவராத்திரி உற்சவம் சிறப்பாக இடம் பெற வேண்டும். அதற்குரிய பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட வேண்டும். இரண்டாவது, உடைக்கப்பட்ட தற்காலிக வளைவு தூக்கி நிறுத்தப்பட வேண்டும். மூன்றாவது, மத வன்முறையில் ஈடுபட்டவர்கள், 5ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட வேண்டும் என நேற்று முன்தினம் இரவு மன்னார் பொலிஸ் தலைமையக அதிகாரி ரத்நாயக்க, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரீநாத் பெரேரா, பிரதி பொலிஸ்மா அதிபர் அபேவிக்கிரம ஆகியோருடன் பேசி பணிப்புரை வழங்கியுள்ளேன்.

இந்த விவகாரத்தில் நேரடியாகத் தலையிடுமாறு மன்னார் மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோரைத் தொலைபேசியில் அழைத்து கூறியுள்ளேன்.

சிவராத்திரியை அடுத்து, விரைவில் திருக்கேதீஸ்வர ஆலயத்துக்கு நேரடியாக வந்து சகல தரப்பினரிடமும் கலந்து பேசி பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை நான் பெற்றுத் தருவதாக திருக்கேதீஸ்வர ஆலய அறங்காவலர்களிடம் உறுதியளித்துள்ளேன் என தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம் பாடு, இந்து சமய விவகார அமைச்சர் மனோ கணேசன் மேலும் தெரிவித்தார். (இ-9)



# மரண அறிவித்தல்

## திருமதி ராதாராணி சந்திரகாந்தன்



யாழ்.புலோலி தெற்கு உபய கதிர்காமத்தை பிறப்பிடமாகவும், சவுதி அரேபியாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட ராதாராணி சந்திரகாந்தன் 25-02-2019 அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிவகுரு நாதன் மகேசு தம்பதியரின் அன்பு மருமகளும்,

சந்திரகாந்தனின் அன்பு மனைவியும்,

சுகந்தினி, சிவகண்ணன், செந்தூரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும்,

நாகேந்திரராசா, ரதிராணி ஆகியோரின் சகோதரியும். சதாசிவம், காலஞ்சென்ற சரவணபவன், இலக்குமிதேவி, சிவதேவி, சிவராசன் பத்மநாதன், ஈஸ்வரி, ஜீவா, நந்தினி, கீதா ஆகியோரின் மைத்துனியும், யசோதரன், பிரணவி, மாதினி ஆகியோரின் மாமியாரும், ராகேஷ், ராகிதா, ரக்ஸிதா ஆகியோரின் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 07/03/2019 காலை 6.30 மணிக்கு திகிரி, புலோலி வடகிழக்கு, பருத்தித்துறையில் ஆரம்பித்து தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு தகவல்:
076 573 0204, 077 432 0946 குடும்பத்தினர்.

(சி-5685)


## இராசி பலன்

**மீனம்** — எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்ல விதமாக நடைபெறலாம், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், சயனக்குறைவுகள் ஏற்படலாம்.

**மேடம்** — ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், வருமானம் அதிகரித்து வளம் காணும் நாள்.

**இடபம்** — சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத் தோன்றும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், செய் தொழில் மேன்மையுண்டு.

**மிதுனம்** — தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கும்பம்** — இறைவழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், விரயங்கள் கூடும் நாள், போசன சுகமுண்டு, சான்றோர்களின் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள்.

| | | | |
|---|---|---|---|
| | செவ் | | ராகு |
| சூரி, சந், புத | இராசி பலன் கிரகநிலை சந்திராஷ்டமம் பூசம்-ஆயிலியம் | | |
| சுக் | | | |
| சனி, கேது | குரு | | |

05.03.2019
மாசி 21, செவ்வாய்க்கிழமை
சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு
சதுர்த்தசி முன்னிரவு 8.02 மணிவரை
அவிட்டம் பிற்பகல் 4.10 மணிவரை
சுபநேரம் 10.56 - 12.26 மணிவரை
இராகுகாலம் 3.26-4.56 மணிவரை.

வளவன்

**கடகம்** — நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை ஏற்படலாம், மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும் நாள், கவலைகள் தீர கடவுளை வழிபட வேண்டிய நாள்.

**மகரம்** — அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**சிம்மம்** — தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**தனுசு** — வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், வியாபார விருத்தியுண்டு, நீண்ட நாளைய பிணக்குகளில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்** — நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்** — கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், நிதிநிலை உயர்ந்து நிம்மதி காணும் நாள், வளர்ச்சி கூடும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி** — கொடுக்கல்- வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்ள முற்படுவீர்கள், மறைமுகப் போட்டிகள் மாறும், தொழில் மேன்மையுண்டு, போசன நன்மையுண்டு.

# கொடியேற்றம்

நவாலி ஸ்ரீநாக ராஜ ராஜேஸ்வரி அம்பாள் திருக்கோவில் திவ்ய பிரமோற்சவம் நாளை 6 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பதினைந்து நாட்கள் நடைபெறும்.

இதில் தேர்த்திருவிழா 19 ஆம் திகதியும் தீர்த்தத் திருவிழா 20 ஆம் திகதியும் இடம்பெறவுள்ளன. (5)

ௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐ

புன்னாலைக்கட்டுவன், ஈவினை மதுரையம்பதி அருள் மிகு ஸ்ரீ மீனாட்சியம்பாள் திருக்கோவில் வருடாந்த உற்சவப் பெருவிழா நாளை மறுதினம் 7 ஆம் திகதி ஆரம்பமாகி பதினைந்து நாட்கள் நடைபெறும். இதில் 20 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 21 ஆம் திகதி பங்குனி உத்தரத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (5)

ௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐ

யாழ்ப்பாணம், கச்சேரி நல்லூர் வீதி பாணன்குளம் நாச்சி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பதினைந்து நாட்கள் நடைபெறும்.

இதில் தேர்த்திருவிழா 22 ஆம் திகதியும் தீர்த்தோற்சவம் 23 ஆம் திகதியும் இடம்பெறும். (5)

# சிவராத்திரி விடுமுறை

(யாழ்ப்பாணம்)

சிவராத்திரி தினத்தில் விரதமிருந்த வர்த்தக ஊழியர்கள் நன்மை கருதி இன்று 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அனைத்து வர்த்தகர்களும் தமது வர்த்தக நிலையங்களை மூடி அவர்களுக்கு விடுமுறை வழங்குமாறு யாழ்ப்பாண நகர வர்த்தகர்களை யாழ். வணிகர் கழகம் கேட்டுக் கொண்டுள்ளது. (5)




# நல்லூரில் திருவள்ளுவர் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் முன்னெடுக்கும் திருவள்ளுவர் விழா எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.சிவகணேசன் புடைவையகத்தின் ஆதரவில் இடம்பெறும் இவ்விழா யாழ்.தமிழ்ச்சங்கத் தலைவர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் முதன்மை உரையை வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் ஆற்றுவார். சிறப்பு நிகழ்வாகத் தமிழகத்தின் பிரபல பேச்சாளர் இலக்கியச்சுடர் த.இராமலிங்கம் தலைமையில் பட்டிமண்டபம் இடம்பெறும்.

இதில், சிந்தையின் செழுமைக்குப் பெரிதும் வழிகாட்டும் குறட்பாக்கள் அடங்கியிருப்பது அறத்துப் பாலிலா? பொருட்பாலிலா? என்ற பொருளில் இடம்பெறும்.

இப்பட்டிமண்டபத்தில் பேராசிரியர் தி.வேல்நம்பி, சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல், விரிவுரையாளர் கு.பாலசண்முகன், தமிழகப் பேச்சாளர் த.திருமாறன், லோ.துஷிகரன், ஜீவா.சஜீவன் ஆகியோர் வாதிகளாகவும் பிரதிவாதிகளாகவும் பங்கேற்கவுள்ளனர். (5)

# வீட்டுத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டல்





தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் யாழ்.ஆனைக்கோட்டை உயரப்புலம் ஜே/132 கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள வறிய மக்களுக்கு வழங்கப்பட்ட ஏறக்குறைய 90 குடும்பங்களுக்கான வீட்டுத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வான அடிக்கல் நாட்டல் நிகழ்வு நேற்று முன்தினம் உயரப்புலம் ஜே/132 கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குட்பட்ட கிராம சக்தி அமைப்பின் தவிசாளர் சி.பாரதன் தலைமையில் நடைபெற்றது.

இதில் தேசிய லொத்தர் சபையின் தலைவி திருமதி. சியாமளா பெரேரா மற்றும் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் ம.சண்முகலிங்கன், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் உதவி பொறியியலாளர் நாகேஸ்வரன் மற்றும் மானிப்பாய் பிரதேச சபை உப தவிசாளர் ஆ.சி.கணேசவேல், யாழ். பல்கலைக்கழக முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி க.சிவராஜா, கலாநிதி மோகன், உயரப்புலம் உத்துங்க விநாயகர் ஆலய பரிபாலன சபை தலைவர் க.தர்மராஜா ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டனர். (5)

# கொக்குவில் இந்து ஆரம்பப்பாடசாலை செயற்பட்டு மகிழ்வோம்-நிகழ்வு நாளை

(யாழ்ப்பாணம்)

யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா இன்று 5 ஆம் திகதி நடைபெற விருந்தது. தவிர்க்க முடியாத காரணத்தினால் நாளை 6 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணியளவில் நடைபெறும் எனவும் மாணவர்கள் அனைவரும் காலை 7 மணிக்குப் பிந்தாமல் வருகை தருமாறும் கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார். (5)

# மூக்குக் கண்ணாடி வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

சமுர்த்தி வங்கியினால் தெரிவு செய்யப்பட்ட 137 பயனாளிகளுக்கு மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை சிறுப்பிட்டி சமுர்த்தி வங்கியில் முகாமையாளர் எஸ். கௌரிமலர் தலைமையில் இடம்பெற்றது.

கோப்பாய் பிரதேச தேசோதய சபை ஏற்பாட்டில் இடம்பெற்ற இந் நிகழ்வில் கோப்பாய் பிரதேச தேசோதய சபைத் தலைவர் இ.மயில்வாகனம், ஸ்ரீராம் ரெக்ஸ் உரிமையாளர் மற்றும் கண் பரிசோதனை நிபுணர் த.தவநேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். (5-10-134)

# 'சட்டவிரோத மண் அகழ்வு' சம்பந்தப்பட்டவர்கள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் இரவு நேரங்களில் சட்டவிரோத மண் அகழ்வு இடம்பெறுவதாகப் பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது, மணியம் தோட்டம், உதயபுரம், அரியாலை ஆகிய பகுதிகளிலுள்ள வெளிநாட்டில் வசிப்பவர்களுக்குச் சொந்தமான காணிகளிலும் ஆட்கள் நடமாட்டம் இல்லாத பகுதிகளிலும் இரவு 10 மணிக்கு பின் மணல் அகழ்வு இடம் பெறுவதாகத் தெரிவித்தனர். சட்டவிரோத மண் அகழ்வு தொடர்ந்து இடம் பெறுமானால் எதிர்காலத்தில் குறித்த பகுதிகளுக்குள் கடல் நீர் உட்புகக் கூடிய வாய்ப்புக்கள் அதிகரிக்குமென மக்கள் தெரிவித்துள்ளனர்.

ஆகவே இவ் விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் அக்கறையுடன் செயற்பட்டு மண் அகழ்வைத் தடுத்து நிறுத்துமாறு பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை வைத்துள்ளனர். (5-10)

# பொதுக்கூட்டம்

தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரிவு பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் 18 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் தெல்லிப்பழை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் தலைவர். ரி.எம்.செல்வராசா தலைமையில் நடைபெறும். (5)

# ரௌடிகள் அட்டகாசம் பொலிஸ் நிலையம் அமைக்க

## வரணி மக்கள் கோரிக்கை

கொடிகாமம் பொலிஸ் நிலையப் பிரிவிற்குட்பட்ட வரணிப் பகுதியில் அண்மைய நாட்களாக ரௌடிகளினதும் சமூக விரோதிகளினதும் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது. இதனால் பொது மக்கள், வியாபாரிகள், பாடசாலை மாணவர்கள், வாகனச் சாரதிகள் பெரும் அச்சத்திற்குள்ளாகியுள்ளனர்.

குறிப்பாக அண்மைய காலமாக இரு கிராமத்து இளைஞர் குழுக்களுக்கு இடையே கோஷ்டி மோதல் இடம்பெற்று வருகின்றது.

இதன் எதிரொலியாக கடந்த வாரம் வடவரணிப் பகுதியில் வரணி இயற்றாலை இளைஞரது மோட்டார் சைக்கிளை அடித்து நொறுக்கி தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர். இளைஞன் தப்பியோடியமையால் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. இதனைத் தொடர்ந்து இரு கிராமத்து இளைஞர்களும் மாறி மாறி மோதல்களில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் வாள்கள் மற்றும் இரும்புக் கம்பிகள், பொல்லுகள், கூர்மையான ஆயுதங்களுடன் பல மோட்டார் சைக்கிள்களில் வந்து மக்களை அச்சுறுத்துவதுடன். வீதியால் செல்லும் வாகனங்களையும் மறித்து சோதனையிடுகின்றனர்.

தட்டிக்கேட்போரைத் தாக்குவதுடன் கொலை செய்து விடுவோம் எனவும் மிரட்டுகின்றனர். அத்துடன் பொதுச் சொத்துக்களையும் அடித்து நொறுக்கி சேதப்படுத்துகின்றனர். இதனால் பொதுமக்கள் பெரும் பீதியுடனேயே தமது தேவைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது.

அச்சம் காரணமாக வியாபாரிகள் நேரத்திற்கு தமது கடைகளை பூட்டிவிட்டு வீடு செல்கின்றனர். இரவு வேளைகளில் வாகனச் சாரதிகள் மாற்றுப் பாதையின் ஊடாகவே செல்ல வேண்டியுள்ளது.

பாடசாலை செல்லும் மாணவர்கள், தனியார் வகுப்புக்குச் செல்லும் பிள்ளைகளும் இதனால் பெரிதும் அச்சப்படுகின்றனர்.

எனவே இது தொடர்பாக பொலிஸாருக்கு உடன் தெரிவித்தாலும் அவர்கள் உரிய நேரத்திற்கு வருவதில்லையெனவும் ரௌடிகள் தப்பிச் சென்ற பின்பே நேரம் தாழ்த்தி வருவதாகவும் மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

எனவே வரணிப் பகுதியில் பொலிஸ் நிலையம் ஒன்றினை அமைக்குமாறு பொதுமக்கள் வட மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-103)



யாழ்.நகர் கிழக்கு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி கணனிமயப்படுத்தப்பட்டு சமுர்த்திப் பயனாளிகளுக்கு யாழ். மாவட்டத்தில் முதன் முறையாக அச்சிடப்பட்ட பாஸ் புத்தகங்களை வழங்க ஆரம்பித்துள்ளது. அண்மையில் முன்னாள் யாழ்.பிரதேச செயலர் பொ.தயானந்தன் முதலாவது பாஸ் புத்தகம் வழங்கி ஆரம்பித்து வைத்தார்.

# 'காசம் களையும் காலமிது' மாணவர்களுக்கான போட்டி

(யாழ்ப்பாணம்)

உலக காசநோய் தினத்தை முன்னிட்டு (மார்ச் 24) வட இலங்கை காசநோய்த் தடுப்பு சங்கம் நடத்தும் பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகள் இரு பிரிவுகளில் நடைபெறவுள்ளன.

இதில் கீழ்ப் பிரிவு 6,7, 8, 9, 10 ஆம் தரங்களையும் மேற்பிரிவு 11, 12, 13 ஆம் தரங்களையும் உள்ளடக்குகின்றது.

இப்போட்டியில் கவிதை, கட்டுரை, ஓவியம் என்பன "காசம் களையும் காலமிது" என்னும் தலைப்பில் அமைய வேண்டும் எனவும் ஆக் கங்கள் எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டுமென வும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (5)



யா/நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் ஆரம்ப கற்றல் வள திறப்பு விழா கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந் நிகழ்வில் ருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, யாழ்.கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.பால்ராஜ், கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ந.சிவனேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# 51 நாள் பிரதமர் பதவியால் நானும் பாதிப்படைந்தேன்

## மகிந்த கவலை



(அநுராதபுரம்)

ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி முதல் 51 நாட்கள் இந்நாட்டின் பிரதமராக இருந்து அரசாங்கத்தை கொண்டு சென்ற சந்தர்ப்பத்தில் தனக்கு அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டதாக முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய எதிர்க்கட்சி தலைவருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே மகிந்த ராஜபக்ஷ இதனை தெரிவித்தார்.

இவ்வாறு அசாதாரண சூழ்நிலையை எப்போது ஏற்படுத்தினாலும் அதற்காக ஒருபோதும் கவலைப்படபோவதில்லையென அவர் தெரிவித்தார்.

ஆனாலும் இந்நாட்டை செழிப்படைய செய்வதற்கும் மக்களின் வாழ்க்கையை சிறந்த முறையில் அமைப்பதற்கும் தொடர்ச்சியாக போராடுவேன் என மகிந்த ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.

இதேவேளை முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ எதிர்வரும் வெள்ளிக்கிழமை, முதலாவதாக அரசியல் மேடையில் ஏறப்போவதாக ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் கண்டியில் எதிர்வரும் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள பாரிய பொதுக்கூட்டத்திலேயே கோத்தபாய ராஜபக்ஷ, தனது அரசியல் பயணத்தை ஆரம்பிக்க போவதாக அக்கட்சியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை எதிர்வரும் 26 ஆம் திகதி மகிந்த தலைமையில் பாரிய கூட்டமொன்று நடைபெறவுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இன,மத நல்லுறவைச் சிதைக்க இடமளிக்கப் போவதில்லை

## டக்ளஸ் எம்.பி.உறுதி

(கொழும்பு)

மதங்களுக்கிடையில் மட்டுமல்ல இனங்களுக்கிடையில் இருக்கும் நல்லுறவையும் சிதைப்பதற்கு நாம் இடமளிக்கப் போவதில்லை. அவ்வாறான சம்பவங்களையும் நாம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. அந்தவகையில் இலங்கைத் தீவில் அனைத்து மதங்களைச் சேர்ந்த மக்களும் சம உரிமை பெற்றவர்களாக பேதங்களற்று வாழவேண்டும் என்பதே எமது விருப்பமும் நிலைப்பாடும் ஆகும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி.தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது நாடு தமிழர், முஸ்லிம்கள், சிங்களவர்கள், பறங்கியர்கள் ஆகிய அனைத்து இன மக்களும் சொந்தமென்று கூறி உரிமையோடு வாழவேண்டிய நாடு. இந்துக்களும், கிறிஸ்தவர்களும், இஸ்லாமியர்களும், பௌத்தர்களும் சகோதர மக்களாக ஒன்றிணைந்து மகிழ்ச்சியுடன் மனித நேயத்துடன் வாழவேண்டிய மதசார்பற்ற நாடு. இனங்களையும் மதங்களையும் பிரதேசங்களையும் மனித நேயமே ஒரு நாடு என்ற வகையில் ஒன்று சேர்க்கின்றது. ஆனால் அரசியல் மட்டும்தான் அவற்றைப் பிரித்து வைக்கிறது.

இந்த நாட்டில் அனைத்து மதங்களுக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாகும். இதை நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தியும் வருவதுடன் அவ்வாறான நல்லிணக்கத்திற்கு பல முயற்சிகளையும் நாம் கடந்த காலங்களில் மேற்கொண்டிருந்திருக்கின்றோம்.

தமிழ் பேசும் மக்களின் பெயரால் தமிழ் பேசும் மக்களையே தினம் தினம் பல்வேறு பிரச்சினைகளுக்கு உள்ளாக்கிவரும் எமது தேசத்தில் இந்துக்களின் சிறப்பு மிக்க வழிபாடு நடைபெறும் இத்தருணத்தில் நடந்தேறியுள்ள திருக்கேதீஸ்வரர் ஆலயத்தின் வளைவு இடித்தழிக்கப்பட்டமை மற்றும் திருக்கோணேஸ்வரர் ஆலய சிவலிங்கம் உடைக்கப்பட்டமை ஆகியன துரதிர்ஷ்ட வசமானதொன்றாகும் என்றே கவலையடைகின்றேன்.

மதத்தால் வேறுபட்டாலும் பேசும் மொழியாலும் வாழும் நிலத்தாலும் ஒன்றுபட்டவர்களே தமிழ் பேசும் மக்கள். அந்தவகையில் இந்தச் சம்பவம் நடைபெற்றதற்கான உண்மைகள் கண்டறியப்பட்டு அதற்கான தீர்வு காணப்படவேண்டும். இதற்கான முயற்சிகளை அரசியல் சாரா வகையில் முன்னெடுத்து இந்துமதத்தினது புனிதத்தன்மை பாதுகாக்கப்படுவதுடன் கத்தோலிக்க மத மக்கள் மீது சுமத்தப்படும் பழிகளுக்கும் தெளிவு பெற்றுக்கொடுத்து மதங்களுக்கு இடையே ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

கிறிஸ்தவர்களது பைபிளோ, பௌத்தர்களின் மஹாவம்சமோ, இஸ்லாமியரின் குரானோ மற்றும் இந்துக்களின் பகவத் கீதையோ நல்லிணக்கத்தையும் சமத்துவத்தையும் தனித்துவத்தையும் வலியுறுத்தி நிற்கின்றன என்பதை அனைவரும் மனதில் கொள்ள வேண்டும். அந்தவகையிலேயே நாமும் இன நல்லிணக்கத்தையும் மத நல்லிணக்கத்தையும் வலியுறுத்தி அதற்காக அயராது உழைத்து வருகின்றோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


## தேவை

புத்தளத்தில் தங்கியிருந்து தோட்ட வேலை, மாடுகள் பராமரித்தல் போன்ற வேலைகளை செய்வதற்கு தனிநபரோ அல்லது கணவன்-மனைவியாகவும் ஆட்கள் தேவை. முன்னாள் போராளிகள் அல்லது அநாதரவான நடுநிலை வயதான நபரோ, குடும்பம் விரும்பத்தக்கது.

077 731 9426


# கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் கொடுப்பனவுகள் ஜனாதிபதியால் நிறுத்தம்

(கொழும்பு)

கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்ப னர்களுக்கு வழங்க வேண்டிய இரண்டு இலட்சம் ரூபாய் கொடுப்பனவுகள் ஜனாதிபதியால் நிறுத்தப்பட்டுள்ளன. இதனை நாடாளுமன்ற உறுப்பினர்கள் உறுதி செய்துள்ளனர்.

2018 ஒக்டோபர் 26ஆம் திகதியில் இருந்து இந்த தொகை கிடைக்கவில்லை என்று அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இதன்காரணமாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (இ-7)


PEOPLE'S BANK

## தங்க நகை ஏலவிற்பனை அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.01.2018 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் 16.03.2019 (சனிக்கிழமை), 17.03.2019 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய திகதிகளில் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் | நகை மீளெடுப்பதற்கான இறுதி திகதி | ஏல விற்பனை நடைபெறும் இடமும் திகதியும் |
|---|---|---|---|
| யாழ்.ஸ்ரான்லி வீதி | கொக்குவில் (நாவலர் வீதி) மானிப்பாய் | 15 . 03 . 2019 | 16.03.2019 (சனிக்கிழமை) 17.03.2019 (ஞாயிற்றுக்கிழமை) யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளை |
| தெல்லிப்பளை | மல்லாகம் காங்கேசன்துறை | | |
| யாழ்.பிரதான வீதி | உரும்பிராய் | | |
| ஊர்காவற்றுறை | -- | | |
| நெல்லியடி | -- | | |
| அச்சுவேலி | புத்தூர் | | |
| சங்கானை | பண்டத்தரிப்பு | | |
| சுன்னாகம் | கோப்பாய் அளவெட்டி | | |
| சாவகச்சேரி | கைதடி | | |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி | | |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி கல்வியங்காடு | | |
| யாழ்.கன்னாதிட்டி | இணுவில் | | |
| பருத்தித்துறை | புலோலி | | |
| கொடிகாமம் | -- | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப்போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

உதவிப் பொது முகாமையாளர் (பதில்)
மக்கள் வங்கி,
பிராந்திய தலைமையகம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே.இல:
021 222 2601/ 021 222 8602
தொலை நகல் : 021 222 2602
ஈ-மெயில்: jafrho@peoplesbank.lk

(C-5579)



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 16 செவ் 8 இல்
உயரம்: 6'1"
தகைமை/தொழில்:CCNA IT support, Computerised Security System ,UK
எதிர்பார்ப்பு: பட்டதாரி/Professional Qualified
தொ.இ: B/887

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: அனுசம் 2
கி.பா: 25செவ் 4 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:HNDA, London
எதிர்பார்ப்பு: வெளிநாடுPR
தொ.இ: B/904

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: அத்தம் 4
கி.பா: 61 செவ் 8 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: B.Scபட்டதாரி, அபிவிருத்திஉத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு:A/L
தொ.இ: B/917

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்:கேட்டை 2
கி.பா: 9
உயரம்: 5'9"
தகைமை/தொழில்:A/L, France
எதிர்பார்ப்பு: வெளிநாடு PR
தொ.இ: B/952

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 16செவ் 2 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:B.Com பட்டதாரி, அபிவிருத்திஉத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு:அரசதொழில்
தொ.இ: G/2863

பிறப்பு: 1966 இந்து
நட்சத்திரம்: மூலம் 4
கி.பா: 15
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு:விவாகரத்துவிரும்பதக்கது
தொ.இ: G/2876

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: பூரம் 1
கி.பா: 65 செவ் இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:O/L
எதிர்பார்ப்பு:அரசதனியார் சொந்தவியாபாரம்
தொ.இ: G/2886

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்:அச்சுவினி 1
கி.பா: 54
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு:வெளிநாடு
தொ.இ: G/2900

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# திருக்கேதீஸ்வரத்தில் சிவராத்திரி வளைவு அகற்றம் கத்தோலிக்கர்களை தலைகுனிய வைத்துள்ளது

## யாழ்.மறைமாவட்ட குருமுதல்வர் கடும் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

எமது இந்து மத சகோதரர்களின் மிகவும் பழைமைவாய்ந்த, சரித்திரப் பிரசித்திபெற்ற திருத்தலமாக விளங்குகின்ற திருக்கேதீஸ்வரம் ஆலய வீதியில் அமைக்கப்பட்டிருந்த வளைவு ஒரு கத்தோலிக்க குருவின் வழிகாட்டலில் கத்தோலிக்க மக்களால் சேதமாக்கப்பட்ட நிகழ்வு பற்றி ஊடகங்களில் வெளியான செய்திகள் எமக்கு ஆழ்ந்த அதிர்ச்சியையும், கவலையையும் ஏற்படுத்தியுள்ளன. கத்தோலிக்கர் என்ற வகையில் நாம் வெட்கித் தலைகுனிவதோடு எமது வன்மையான கண்டனத்தையும் தெரிவிக்கின்றோம் என யாழ்ப்பாணம் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ப.யோ. ஜெபரட்ணம் தெரிவித்துள்ளார்.

தமது சிவராத்திரி விழாவை அனுஷ்டிக்கும் தருணத்தில் நடந்த இத்தகாத நிகழ்வினால் மனமுடைந்து காணப்படும் இந்து மத சகோதரர்களுக்கு எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கின்றோம். எல்லா மதங்களையும், மதித்தவர்களையும் அன்பு செய்யவேண்டும், மதிக்கவேண்டும் என்றுதான் கத்தோலிக்க திருஅவை எமக்கு போதிக்கிறது.



இந்நிலையில் இச்செயலை எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாது. தமிழர்களாகிய நாம் மதவேறுபாடுகளின்றி சகோதரத்துவத்தில் வளரவேண்டியது மிகவும் இன்றியமையாததாக இருக்கும். இந்நிலையில் இப்படியான வேண்டத்தகாத நிகழ்வுகள் எதிர்காலத்தில் நடைபெறாது இருக்கவும், நடைபெற்ற செயலுக்கு பிராயச்சித்தம் செய்யவும் சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டுமென்று விநயமாகக் கேட்டுக்கொள்கிறோம்.

இயேசுவின் வாழ்வாலும் போதனையாலும் நாம் பெற்றுக்கொண்ட அன்பு, மன்னிப்பு, விட்டுக்கொடுப்பு, தியாகம், புரிந்துணர்வு, சகோதரத்துவம், குழுமவாழ்வு ஆகிய எமது கத்தோலிக்க மதத்தின் அடையாளங்களை நாம் இழந்துவிடாமல் பாதுகாப்போம். இப்படியான நிகழ்வுகளால் எமது கத்தோலிக்க மதத்தின் பரிசுத்த தனத்துக்கு ஏற்படும் களங்கங்களுக்காக நாம் மனம் வருந்தி பிராயச்சித்தம் செய்யவேண்டும்.

தவிர்க்கமுடியாத காரணங்களால் மதங்களுக்கிடையே அவ்வப்போது ஏதாவது கருத்துவேறுபாடுகள் ஏற்படும் பட்சத்தில் ஆரோக்கியமான பேச்சுவார்த்தைகள் மூலமாக அவற்றை தீர்த்துவைக்க முயற்சிசெய்யவேண்டுமேயொழிய வன்முறைகளிலும், அடாவடித்தனங்களிலும் ஈடுபடவே கூடாது என அவர் மேலும் அறிவுறுத்தியுள்ளார். (இ-7)

# மதவாதத்தைத் தூண்டும் செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்

## சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு வலியுறுத்து

கடந்த வாரம் இலங்கையின் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் மதவாத மக்கள் விரோத செயற்பாடுகள் இடம்பெறுவது அதிகரித்துள்ளமையை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது என அண்மைய மத வன்முறைகள் தொடர்பாக சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அவ்வமைப்பின் தலைவர் க. ஆனந்தக்குமாரசுவாமி, இணைச் செயலாளர்கள் ச. தனுஜன், அ. சீவரத்தினம் ஆகியோரால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில், ஏற்கனவே, ஆக்கிரமிப்பு நோக்கத்துடன் திட்டமிட்ட வகையில் பௌத்த மதத்தவர்கள் எவரும் வசிக்காத பகுதிகளிலும், ஏனைய மத வழிபாட்டுத் தலங்களுக்கு உள்ளேயும் புத்தர் சிலைகளைக்கொண்டுவந்து வைக்கின்ற செயற்பாடுகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. அதேநேரம், சில இடங்களில் புத்தர் சிலைகளைச் சேதப்படுத்தும் செயற்பாடுகளும் அரங்கேற்றப்படுகின்றன.

இவற்றின் தொடர்ச்சியாக, சைவ சமயத்தவர்களால் புனித நாளாகக் கொண்டாடப்படும் சிவராத்திரி தினம் நெருங்கும் வேளையில், மிகவும் புகழ்பெற்ற திருத்தலங்களாக அனைத்து மதத்தவர்களாலும் அடையாளப்படுத்தப்படும் திருகோணமலை திருக்கோணேச்சரம், மன்னார் திருக்கேதீச்சரம் ஆகிய ஆலயங்களுக்கு அண்மையில் வைக்கப்பட்டிருந்த சிவலிங்கம் மற்றும் வரவேற்பு வளைவு ஆகியன விசமிகளால் சேதப்படுத்தப்பட்டுள்ளமை வன்மையான கண்டனத்திற்குரிய செயல்களாகும்.

இத்தகைய செயற்பாடுகளைத் திட்டமிட்ட வகையில், தொடர்ச்சியாக மேற்கொள்வதனூடாக, மதவாதத்தைத் தூண்டி, மக்களைப் பிரித்தாள நினைக்கின்ற சமூக விரோதச் சக்திகளை மக்கள் இனங்கண்டு நிராகரிப்பதோடு, அவர்களுக்கு எடுபிடிகளாகச் செயற்படுவோரை எதிர்த்து நின்று விரட்டியடிக்கவும் வேண்டும் எனச் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு கேட்டுக்கொள்கின்றது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

### திருக்கேதீஸ்வரத்தில்

# சிவராத்திரி வளைவு உடைப்புக்கு ஆறு.திருமுருகன் கடும் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

திருக்கேதீஸ்வர ஆலய நுழைவாயில் வளைவு கிறிஸ்தவ பாதிரியார் தலைமையில் உடைக்கப்பட்டமை சைவ மக்கள் மனதை அதிரவைத்துள்ளது என தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் அமைக்கப்பட்ட அலங்கார சிவராத்திரி வளைவை கத்தோலிக்க பாதிரியார் தலைமையிலான குழுவினர் மதவெறியோடு தகர்த்தெறிந்தமை கண்டிக்கத்தக்க விடயம்.

குறித்த சம்பவம் தொடர்பில் யாழ்., மன்னார், மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் எதிர்காலத்தில் சமய ரீதியான அடாவடித்தனங்கள் இடம்பெறாமல் இருக்க தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டுமெனவும் அவர் மேலும் கேட்டுக்கொண்டுள்ளார். (இ-10)

# திருக்கேதீஸ்வர அலங்கார வளைவு உடைப்புக்கு சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் கண்டனம்

திருக்கேதீஸ்வர ஆலய அலங்கார வளைவு கத்தோலிக்க மதகுருமார்கள் முன்னிலையில் தமிழ் கத்தோலிக்க மக்களால் உடைக்கப்பட்டது மிகவும் வேதனை தரும் செயலாகும். தமிழ் மக்கள் நிலைப்பாட்டில் இது பெரிதும் பின்னடைவாகும்.

சிவராத்திரி புண்ணிய நாட்களில் புண்ணிய தலங்களில் இவ்வாறான வேதனைகளை தமிழ் மக்கள் தொடர்ந்து சந்திக்கிறார்கள்.

திருக்கேதீஸ்வரத்தில் பல ஆயிரம் மக்கள் சிவராத்திரி தினத்தில் சிவதரிசனத்திற்காக கூடுவர். பல நாடுகளில் இருந்தும் யாத்திரிகர்கள் கூடுவர்.

இச் சமயத்தில் இவ்வாறான நிகழ்வு அனைத்து தமிழ் இந்துக்களையும் மிகவும் பாதிக்கும் செயலாகும் என சர்வதேச இந்து குருமார் ஒன்றிய தலைவர் கலாநிதி து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள் தெரிவித்துள்ளார்.

உலகநாடுகளில் இருந்தும் பலர் இச்செய்தியை அவதானித்து தம் வேதனைகளையும் தெரிவித்துக் கொண்டு இருக்கின்றனர்.

தமிழர்களின் ஒருபகுதியினர் ஆ ண்களும் பெண்களும் சேர்ந்து மதத் தலைவர்கள் முன்னிலையில் இவ்வாறு செயற்பட்டது மிகவும் அநாகரிகமான செயலாகும்.

நாம் ஏனைய மதங்களை மதிக்க வேண்டும். அதனையும் பேணவேண்டும். அப்படி செய்யாவிடினும் மிதிக்காமல் ஆயினும் இருப்போம். இது இந்துக்கள் பண்பு. திருக்கேதீஸ்வரத்தில் நிகழ்வுற்ற இச்செயல் குறித்து இந்து குருமார் ஒன்றியம் தமது வருத்தத்தைத் தெரிவித்துள்ளது.

தமிழ் அமைச்சர்கள், இந்து கலாசார அமைச்சர், குறிப்பாக தமிழ் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் இது விடயம் குறித்து மிகவும் காட்டமான நடவடிக்கை எடுப்பார்கள் என இந்துக்கள் எதிர் பார்க்கிறார்கள்.

அவர்கள் உடன் நடவடிக்கையாக ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட தலைவர்களுடன் தொடர்புகொண்டு செயற்படுவார்கள் எனத் தமிழ்ச் சமூகம் எதிர்பார்க்கிறது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ

# திருக்கேதீஸ்வரம் சிவராத்திரி வளைவு உடைப்பு சைவத்தமிழர்களை கடும் வேதனைக்குள்ளாக்கியுள்ளது

## இலங்கை இந்துசமயத் தொண்டர் சபை கண்டனம்

(யாழ்ப்பாணம்)

எமது புனித திருத்தலமான திருக்கேதீஸ்வரம் சிவராத்திரி வளைவு உடைப்பு சைவத்தமிழர்களை கடும் வேதனைக்கும் விசனத்துக்கும் உள்ளாகியுள்ளது. உடனடியாக ஆயர் உள்ளிட்ட கிறிஸ்தவ மதத் தலைவர்களும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும் தலையிட்டு உடைத்த வளைவை மீள் நிர்மாணம் செய்து வழங்க வேண்டியது மத நல்லிணக்கத்திற்கான அத்தியாவசிய தேவைப்பாடாகும்.

மேலும் பூர்வீக சைவ சமய வழிபாட்டுத் தலமும் தமிழர்களின் மரபுரிமை அடையாளமும் இலங்கை முழுதும் சைவர்கள் சிவராத்திரிக்கு ஒன்று கூடும் உன்னத சிவத்தலத்தின் நாலா புறம் நந்திக் கொடிகளையும் இறை சிவனின் பதாகைகளையும் காட்சிப்படுத்தும் சைவத் தமிழர்களின் உரிமையை எவரும் கேள்விக்குள்ளாக்கி கேவலமான செயலை செய்ய முடியாது.

தமிழர் தாயகத்தின் இதர பகுதிகளில் சைவர்கள் எத்துணை பெருந்தன்மையுடன் ஒரு சில குடும்பம் வசித்தால் கூட அவர்களின் வழிபாட்டு உரிமைகளை மதிப்பதோடு வீதிதோறும் காட்சிப்படுத்தியுள்ள சொரூபங்களை பெருமனதோடு கடந்து செல்வதை இவர்கள் பின்னால் இருந்து இயக்குபவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஆதலினால் இன்று ஏதிலிகளாக்கப்பட்டுள்ள மன்னார் சைவர்களின் வழிபாட்டு உரிமைக்கு ஏற்பட்டுள்ள பங்கம் நிவர்த்திக்க தவறும் பட்சத்தில் பூர்வீக சைவத்தமிழர்களின் மனக்காயம் வரலாற்றில் மனவடுவாக மாறும் அபாயம் தவிர்க்க முடியாததாகிவிடும்.

ஆகவே சம்பந்தப்பட்ட தரப்புகள் உடனடியாக நல்லெண்ணத்தை செயலில் காட்டி சைவர்களின் உன்னத வழிபாட்டு நாளான சிவராத்திரியை சிறப்பாக அனுட்டிக்க உதவுவதோடு உடைக்கப்பட்ட வளைவினை சம்பந்தப்பட்டவர் சீர்செய்து பகிரங்கமாக மன்னிப்புக் கோரவேண்டும். இல்லையேல் இது ஒரு மாறாவடுவாகவே இருக்கும் என்பதனை சம்பந்தப்பட்ட தரப்பு புரிந்து கொள்ள வேண்டும் என்பதனை கடுமையாக தெரிவித்துக்கொள்கின்றோம் என இலங்கை இந்துசமயத் தொண்டர் சபை விடுத்துள்ள கண்டன அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (இ-7)

# இந்துக்களின் இதயங்களில் இருள் நீங்கி நல்வாழ்வு வாழ ஜனாதிபதி வாழ்த்து



(கொழும்பு)

ஒரே மனித குடும்பத்தின் சொந்தங்களாகிய நாம் கொண்டிருக்கும் தனித்துவ அடையாளங்களுக்கு அப்பால் ஆன்மீகம் என்ற நிலையில் அனைவரும் ஒரே மனித குடும்பமாக இணைந்திருக்க முடியும் என்பதே மானிடத்துவத்தின் மகிமையாகும். அந்த மானிடத்துவத்தை அலங்கரிக்கும் ஆபரணங்களாகவே கலாசாரங்கள் அமைகின்றன. அந்த வகையில் மதம் என்பது அந்தக் கலாசாரத்தின் அத்திபாரமாகும் எனக் கூறலாம்.

தற்கால அதிவேக சமூகத்தினால் ஏற்படுத்தப்படுகின்ற மன அழுத்தம் காரணமாக முன்னொருபோதும் இல்லாத அளவில் இந்த சமூகம் ஆன்மீக ஒழுக்கத்தை நாடிச் சென்று கொண்டிருக்கின்றது. ஏனெனில் தியானமே மனிதனை ஆன்மீக ரீதியில் பக்குவப்படுத்தும் வழியாக அன்று தொட்டு இருந்து வருவதே அதற்குக் காரணமாகும். உலக வாழ் இந்து மக்கள் தமது முதன்மைப் படைப்பாளியாக கருதும் சிவபெருமானுக்காக நித்திரையை தவிர்த்து உண்ணாவிரதம் இருந்து தியானத்தின் மூலம் தமது ஆன்மீக ஒழுக்கத்தை அடைவதற்காக செயற்படும் ஒரு மத ரீதியான புனித நாளாகவே சிவராத்திரி விரதம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

நமது தாய் நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் வாழ்ந்து வருகின்ற இந்து பக்தர்களின் அந்த ஆன்மீக பிரார்த்தனை நிறைவேறி அவர்களின் வாழ்க்கை நல்வழிப்படும் பட்சத்தில் அது அவர்களுடன் இணைந்து வாழும் ஏனைய சமூகத்தவர்களின் வாழ்க்கையிலும் ஒளியேற்றுவதாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

அத்தோடு அது மதங்களுக்கிடையிலான நல்லிணக்கத்திற்கும் வழிவகுக்கும். ஆகையால் இந்தச் சிவராத்திரி தினத்தை ஒட்டி ஏற்றப்படும் தீபத்தினால் உலகத்தின் இருள் நீக்குவதைப் போன்றே உலக வாழ் இந்து மக்களின் இத யங்களில் இருள் நீக்கி ஒளி பெற்று நல்வாழ்வு வாழ எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (இ-7)

# கலாசார பல்வகைமையின் பெறுமதியை அறிய சிவராத்திரி வழிவகுக்கும்-பிரதமர் வாழ்த்து



(கொழும்பு)

இன, மத, கலாசார பல்வகைமையின் அழகு மற்றும் பெறுமதியை அறிந்துகொள்வதற்கு மஹா சிவராத்திரி தினம் வழிவகுக்கும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்துக்களால் மகா சிவராத்திரி விரதம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

அதனை முன்னிட்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"ஞான ஒளியூடாக ஆன்மீக விடுதலை கிடைக்க வேண்டும் என்ற பிரார்த்தனையுடன், உலகம் முழுவதும் இந்து சமய மக்கள் ஒன்றிணைந்து வெகு விமரிசையாகவும் மிகுந்த பக்தியுடனும் மஹா சிவராத்திரி தினத்தைக் கொண்டாடுகின்றனர்.

சிவபெருமானை வழிபடுவது இந்து மக்களின் சமய வழிபாடுகளில் முக்கிய இடத்தைப் பெறுகிறது.

சிவபெருமானின் பிரதிபலிப்பாக இயற்கை கருதப்படுவதுடன், அனைத்து உயிர்களினதும் பிறப்பிடம் சிவபெருமான் எனவும் இந்து பக்தர்கள் நம்புகின்றனர்.

உலகிற்கு உயிர்ப்பினை வழங்குகின்ற, மனித வாழ்வினை வளப்படுத்துகின்ற சிவபெருமானுக்கு மிகவும் விருப்பமான இந்த இரவில், அனைவரும் ஒன்றாக விரதமிருந்து, இரவு முழுவதும் கண் விழித்துப் புண்ணிய கருமங்களில் ஈடுபட்டு சமயச் சடங்குகளை நிறைவேற்றுவதன் மூலம் ஆன்மீக விடுதலை கிடைப்பதாகக் கருதப்படுகிறது.

மஹா சிவராத்திரி தினத்தை மிகுந்த பக்தியுடன் கொண்டாடும் சகோதர இந்து மக்களுக்காகப் பிரார்த்திப்பதுடன், ஆன்மீக விடுதலை மூலம் சாந்தி, சமாதானம் நிலைபெற வேண்டும் என வாழ்த்துகிறோம்" என தெரிவித்துள்ளார். (இ-7)

# வரவு-செலவுத் திட்டம் தொடர்பில் இன்னும் இறுதித் தீர்மானமில்லை

## மகிந்த அமரவீர தெரிவிப்பு



(கொழும்பு)

இன்று சமர்ப்பிக்கப்படவுள்ள 2019 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எந்தவிதமான இறுதித் தீர்மானத்தையும் இன்னும் மேற்கொள்ளவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் இன்று சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு - செலவுத் திட்டத்திற்கு சுதந்திரக் கட்சியின் ஆதரவு குறித்து வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தரப்பு வரவு - செலவுத் திட்டத்திற்கு தாம் ஆதரவளிக்கப் போவதில்லை என தமது நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளனர். அவர்களது தரப்பிலும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை காணப்படுகின்றது. அதேவேளை மக்கள் விடுதலை முன்னணியும் இந் நிலைப்பாட்டிலேயே உள்ளதாக அறியமுடிகின்றது.

எனவே வரவு - செலவுத் திட்டத்திற்கு ஆதரவளிக்கின்றமை குறித்து சுதந்திர கட்சி தீர்க்கமாக சிந்தித்து தீர்மானங்களை முன்னெடுக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதிக்கு ஆதரவாகவே செயற்படுவோம்-ரோஹித

(கொழும்பு)

வரவு-செலவுத் திட்டத்தில் ஜனாதிபதிக்கான நிதி ஒதுக்கீட்டு சட்ட மூலத்தை தோற்கடிக்கவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித் துள்ளனர். இவ்விடயத்தில் நாங்கள் அனைவரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவிற்கு ஆதரவாக செயற்படு வோம் என பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

2019 ஆம் ஆண்டுக் கான வரவு- செலவுத் திட்டம் இன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவுள்ளது. 2015 ஆம் ஆண்டு தொடக்கம் அரசாங்கம் 4 வரவு- செலவுத் திட்டங்களை சமர்ப்பித்து வெற்றி கண்டுள்ளது. ஆனால் வரவு- செலவுத் திட்டத்தில் வழங் கப்பட்ட வாக்குறுதிகள் எதுவும் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை.

இன்று சமர்ப்பிக்கப்படும் வரவு- செலவுத் திட்டம் அரசாங்கத்தின் இறுதி அரசியல் அத்தியாயத்தினை உறுதிப்படுத்தும். பாராளுமன்றத்தில் ஆளும் தரப்பினரை விட எதிர்த் தரப்பினருக்கே தற்போது அதிக பெரும்பான்மை காணப்படுகின்றது. இந்நிலையில் அரசாங்கம் வரவு-செலவுத் திட்டத்தை வெற்றி கொள் வது பாரிய சவால் மிக்கதா கவே காணப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# குறை'களை' பதிகம் 27

## மனதில் மதத்தைக் களைவோம் நிலத்தில் மனிதனாய் வாழ்வோம்



புல்லாகிப் பூடாய் "புழுவாய் மரமாகி
பல்மிருகமாகி பறவையாய் பாம்பாகி
கல்லாய் மனிதராய் பேயாய் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய் தேவராய்
எல்லாப் பிறப்பும் பிறந்திழைத்தேன் எம்பெருமான்...

என்றுணர்த்திய எம் பரம் பொருளே!
உன்னை நினைத்து ஒரு கணம் கண் விழித்திருக்க
இல்லை சுதந்திரம் என்றென்னும் வேளைதனில்
கண்ணில் நீர் பெருகுதே!

கல்லாய் மனிதனானாய்
சிலர் மனங்களை கல்லாய் படைத்தாயோ!
எல்லாப் பிறப்பும் பிறந்திழைத்தோ
எம் பெருமானே உன் முன்றலில்
கண்விழிக்க கருணையில்லையோ!

எனதருமை உறவுகளே!
பாடல் பெற்ற தலம்
ஈழத்து ஈச்சரங்களில் ஒன்று- அதை
எள்ளி நகைத்திட எட்டி காலால் மிதித்திட
என் செய்தான் சிவன் உமை!
ஐயகோ! உருவங்களில் வேறுபடலாம்
ஆழ்மனதில் தெய்வங்கள் ஒன்றல்லோ!

இனத்தின் பெயரால் மதத்தின் பெயரால்
மொழியில் பெயரால்
இழை இழையாய் எம் இனத்தைப்
பிரிக்க நினைக்கும் சக்திகளின்
சதி வலையில் சிக்கித் கொண்டால்
சரிந்து போவது மதம் அல்ல
தமிழனின் ஒற்றுமை என்பதை
உரம் போட்டுக் கொள்வோம் மனதில்

ஒரு சகாப்தத்திற்கு முன்
மண் மீட்புக்காய் போராடினோமே!
எங்கே போனது மதம்
ஒரு வாரத்திற்கு முன்
ஒன்று கூடி- காணாமல் போன
எம் உறவுகளைத் தேடி
கண்ணீரில் முக்குளித்தோமே- அப்போது
எங்கே போனது மதம்
நிலமீட்புக்காய் வீதிகளில்
இன்றும் தவம் கிடக்கிறோமே அதில் புகுந்ததா மதம்

இல்லையே! இல்லையே! எதிலும் இல்லையே மதம்
இப்போது எங்கிருந்து வந்தது!

ஆம்! இருக்கிறது எம் ஒற்றுமையைக் குலைக்கும் சதி
இந்தச் சகதியில் கால் வைத்து விட்டால்
கழுவப்படுவது கால்கள் அல்ல
எம் இனத்தில் ஒற்றுமையும்தான்.

என்னினமே என்சனமே!
ஏகன் அநேகன் என்பதன் பொருள் தேடும்
ஏகன்-ஒருவன், அநேகன்- பலராகிறான்
ஒரு இறைவன் பலராகிறான், புரிந்து கொள்ளுங்கள்

மனித மனங்களைப் புண்படுத்தி
போதனை செய்வதில் பயனேதுமில்லை
ஒரு சிறு பொறி இந்த உலகையே அழிக்கவல்லது
அந்தப் பொறியாய் நாம் இருப்பதை விட
வெறும் மண்ணாய் இருப்பதே மேல்

அன்பைச் செலுத்தவே மதங்கள்; அழிவையல்ல
ஆதலால் ஒன்று படுவோம்
வெடித்த சிறுபொறியை அணைக்க நீரூற்றுவோம்
இல்லையேல் அழிந்து போவது
தமிழினமும் தமிழும்தான்.

மாவை.நா.கஜேந்திரன்

# வலி.வடக்கில் பொதுமக்களின் 20 ஏக்கர் காணி கையளிப்பு





(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு பகுதியில் மக்களின் 20 ஏக்கர் காணி இராணுவத்தினரால் பொது மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று யாழ்.தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில், தெல்லிப்பழை பிரதேச செயலாளர் சிவசிறி தலைமையில் இடம்பெற்றது.


இதன்போது, யாழ்.மாவட்ட கட்டளைத்தளபதி தர்சன ஹெட்டியாராச்சி காணி விடுவிப்பதற்கான ஆவணத்தை யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகனிடம் வழங்கி வைத்தார்.

கடந்த 30 வருட யுத்தத்தின் பின்னர் வலி.வடக்கில் பலாலி வடக்கு மற்றும் ஏனைய பகுதிகள் இராணுவத்தினரால் விடுவிக்கப்படாது என தெரிவிக்கப்பட்ட நிலையில் நேற்று பலாலி வடக்கு உட்பட மயிலிட்டித்துறை பகுதியில் உள்ள 3 கிராம சேவையாளர் பிரிவில் காணி விடுவிக்கப்பட்டது.

அந்தவகையில், வலி.வடக்கு, பலாலி கிழக்கு, ஜே/253 கிராம உத்தியோகத்தர் பிரிவில் 1 ஏக்கரும் 120 குழியும், ஜே/251 கிராம உத்தியோகத்தர் பிரிவில் 3 ஏக்கரும், ஜே/246 கிராம சேவையாளர் பிரிவில் 13 ஏக்கரும் 155.6 குழியும், அதன் பாதையுமாக மொத்தம் 19.7 ஏக்கர் காணியும் விடுவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினரால் 30 ஏக்கர் காணி விடுவிக்கப்படுமென தெரிவிக்கப்பட்ட நிலையில் 20 ஏக்கர் காணியே விடுவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (2-101)

# அபிநந்தன் வர்த்தமானனுக்கு அஹிம்ஸா புரஸ்கார் விருது



இந்திய விமானப்படை வீரர் அபிநந்தனுக்கு மகாவீர் ஜெயந்தியன்று 'பகவான் மகாவீர் அஹிம்சா புரஸ்கார் விருது' வழங்கப்படும் என அகில பாரத ஜெயின் திகம்பர் சமிதி அறிவித்துள்ளது.

அகில பாரத ஜெயின் திகம்பர் சமிதி என்ற தொண்டு நிறுவனம் நாட்டின் பல பகுதிகளில் கிளைகளை வைத்து சமூக சேவைகளில் ஈடுபட்டு வருகின்றது.

இந்த அமைப்பின் சார்பில் இந்த ஆண்டு முதல் ஆண்டுதோறும் 'பகவான் மகாவீர் அஹிம்சா புரஸ்கார் விருது' வழங்க நிர்வாகிகள் தீர்மானித்திருந்தனர்.

இந்த ஆண்டுக்கான இந்திய விமானப்படை வீரர் அபிநந்தனுக்கு மகாவீர் ஜெயந்தி தினத்தன்று 'பகவான் மகாவீர் அஹிம்சா புரஸ்கார் விருது' வழங்கப்படும் என அகில பாரத ஜெயின் திகம்பர் சமிதியின் மகாராஷ்டிரா மாநில ஒருங்கிணைப்பாளர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளார்.

அதேநேரம், இவ்விருதை பெறுபவர் செய்த சாதனைப் பட்டயத்துடன் 2 இலட்சத்து 51 ஆயிரம் ரூபாய் ரொக்கப்பணம் அபிநந்தனுக்கு அளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# அவயவங்கள் மாற்று சிகிச்சை முப்பரிமாண தொழில்நுட்பம் அறிமுகம்

(கொழும்பு)

அவயவங்கள் மாற்றுச் சிகிச்சை செய்வதற்கு இலகுவாக புதிய முப்பரிமாண தொழில்நுட்பத்தைக் கொண்ட சிகிச்சைகள் அடுத்த மாதம் முதல் இலங்கையில் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

இதற்கிணங்க அவசர விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவாக சிகிச்சைகளை மேற்கொள்ளும் முதலாவது கட்ட செயற்பாடுகள் அடுத்த மாதம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

முப்பரிமாண தொழில்நுட்பத்துடன் சிகிச்சைகளை மேற்கொள்வதற்கான உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யவுள்ளதாகவும் அதுபோன்ற உபகரணங்களை இலங்கையில் உற்பத்தி செய்வதற்கு உத்தேசித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.



"மெடிகெயார் 2019 தேசிய சுகாதார கண்காட்சி" கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. அக்கண்காட்சியை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர்,

திடீர் விபத்துக்குள்ளாகும் நோயாளிகளுக்கு கால் அல்லது தலைகளில் காயங்கள் ஏற்பட்டிருந்தால் அதற்கு விசேடமான சிகிச்சைகள் மூலம் அந்த அவயவங்களை முன்னர் இருந்தது போல் அமைப்பதற்கு முடியும் என்றும் இத்தகைய சிகிச்சைகள் மருத்துவர்களுக்கு வசதியாக அமையும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். வைத்தியத்துறையில் புதிய கண்டுபிடிப்புகளை மேற்கொள்வதுடன் இத்தகைய கண்காட்சிகள் மூலம் அதனை மக்களுக்கு தெளிவுபடுத்த முடியும் என்றும் தெரிவித்தார். (2-7)

# பதுளையில் உலாவி வரும் அடையாளம் தெரியாத மனிதர்கள்

(பதுளை)

ஹாலிஎல பிரதேசத்திற்குட்பட்ட சில தோட்டங்களில் அடையாளம் தெரியாத சில மனிதர்கள் உலாவி வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இரவு வேளைகளிலும் பகல் வேளைகளிலும் அவர்கள் மக்களை அச்சுறுத்தி வருவதாக எமது செய்தி தொடர்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மாதம் 23 ஆம் திகதி முதல் இந்த சம்பவம் இடம்பெற்று வரும் நிலையில், சில பகுதிகளில் திருட்டு சம்பவங்களும் இடம்பெற்றுள்ளதாக மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

குறிப்பாக ரொசட், உனுகல்லை ஆகிய தோட்டங்களிலேயே இந்த சம்பவங்கள் அதிகளவில் இடம்பெற்று வரும் நிலையில், அந்த பகுதியில் அச்சமடைந்த பெண்ணொருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் எமது செய்தி தொடர்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், குறித்த பகுதிக்கு பெருந்தோட்ட கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஸ் தலைமையிலான குழுவொன்று சென்று மக்களிடம் கலந்துரையாடியுள்ளது.

அத்துடன் சம்பவம் தொடர்பில், ஹாலிஎல பொலிஸார் குறித்த பகுதிகளில் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-7)

# காலி மீன்பிடித்துறைமுகம் பிரான்ஸ் அரசின் நிதியில் நவீனமயம்

(காலி)

இலங்கையின் பிரதான துறைமுகங்களில் ஒன்றான காலி மீன்பிடித் துறைமுகம் நவீனமயப்படுத்தப்படவுள்ளது.

இதன் கீழ் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய ஏல விற்பனை நிலையமும், விற்பனைக் கூடமும் நிர்மாணிக்கப்படும்.

இவற்றுக்கு அப்பால் தங்குமிட வசதிகளுடன் கூடிய புதிய கட்டடத் தொகுதி நிர்மாணிக்கப்படவுள்ளது.

இந்த வேலைகளுக்காக 22 கோடி ரூபா செலவிடப்படும். பிரான்ஸ் அரசாங்கம் நிதியுதவி வழங்கவுள்ளது. (2-7)

# பண வவுச்சர்களில் படங்களை பொறிப்பதற்கு மேலதிகமாக பணம் செலவிடப்படவில்லை

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

மாணவர்களுக்கு வழங்கப்பட்ட பண வவுச்சர்களில் அரசியல்வாதிகளின் படங்களை பொறிப்பதற்கு ஒரு ரூபாய் கூட மேலதிகமாகச் செலவிடப்படவில்லை. இதுதொடர்பாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் முற்றிலும் அடிப்படையற்றதாகும் எனக் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

மேலும் பண வவுச்சர்களை அச்சிட செலவிடப்பட்ட தொகையில் அரைவாசிக்கும் அதிகம் அரசியல்வாதிகளின் படங்களை அதில் பொறிப்பதற்கு செலவிடப்பட்டுள்ளதாகவும் குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டிருந்தது. வவுச்சர்களை சாதாரண அச்சகத்தில் அச்சிட்டு வழங்குவதில்லை. பாதுகாப்பு முறைமைகளை உள்ளடக்கியே மேற்கொள்ளப்படுகின்றது. அதனால் தான் விலை சற்று அதிகமாக இருக்கின்றது எனவும் குறிப்பிட்டார். (2-7)

# சிவநகர் மாதிரிக்கிராம வீடமைப்புப்பணிகள் ஆரம்பம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி சிவநகர் மாதிரிக் கிராமத்திற்கான வீடமைப்புத் திட்ட வேலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

தேசிய வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கலாசாரத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸவினால் முன்னெடுக்கப்படும் "கிராமத்திற்குக் கிராமம் "வீட்டுக்கு- வீடு" எனும் வீடமைப்புத் திட்டத்தினூடாக, பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் கோரிக்கைக்கமைவாக கிளிநொச்சி மாவட்டத்தில் 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியில் விசேடமாக முன்னெடுக்கப்பட்டுள்ள மாதிரிக் கிராம வேலைத்திட்டத்தின் மூலம் கிளிநொச்சி சிவநகர் கிராமத்தில் அமையப் பெறவுள்ள 28 வீடுகளை உள்ளடக்கிய மாதிரிக் கிராமத்திற்கான வீடமைப்புப் பணிகள் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினூடாக கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளில் வீடமைப்புத் திட்டப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. மற்றும் சில பகுதிகளில் வீடுகள் முழுமையாகப் பூர்த்தியாக்கப்பட்டு



ஓரிரு தினங்களில், மக்களிடம் கையளிக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

உருத்திரபுரம் சிவநகர் கிராமத்தில், தேசிய வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கலாசாரத் துறை அமைச்சின் மாதிரிக் கிராம வீடமைப்புத் திட்டத்தின் மூலம் அமைக்கப்படவுள்ள 28 வீடுகளுக்குமான அத்திபாரம் இட்டு வீடுகள் அமைப்பதற்கான ஆரம்பகட்ட நிகழ்வுகள் நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர் க.கணேசலிங்கம் தலைமையில் சம்பிரதாய முறைப்படி நடைபெற்றன.

இந்நிகழ்வில், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட திட்ட முகாமையாளர் த.சுபாஸ்கரன், கிராம அலுவலர் சு.சாரதாம்பாள், சமுர்த்தி உத்தியோகத்தர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் சமூக செயற்பாட்டாளர் சுஜீவன், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உருத்திரபுரம் பிரதேச அமைப்பாளர் பா.எழில்வேந்தன், பொது அமைப்புக்களைச் சேர்ந்தோர், வீட்டுத் திட்டப் பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (2)

# 'வையகம் நோக்கிய வனிதையர் குரல்' கிளிநொச்சியில் பெண்கள் எழுச்சிநாள்

இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் கிளிநொச்சி மாவட்ட மகளிர் அணியின் ஏற்பாட்டில் 2019ஆம் ஆண்டுக்கான பெண்கள் எழுச்சி நாள் "வையகம் நோக்கிய வனிதையர் குரல்" எனும் தொனிப்பொருளில் எதிர்வரும் 8 ஆம் திகதி, வெள்ளிக்கிழமை, பி.ப. ஒரு மணிக்கு கரைச்சி பிரதேசசபையின் மாநாட்டு மண்டபத்தில், கரைச்சி பிரதேச சபை உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் கிளிநொச்சி மாவட்ட மகளிர் அணியின் செயலாளருமான திருமதி. கலைவாணி சிறீகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக சாவகச்சேரி நகர சபைத் தவிசாளர் திருமதி. சிவமங்கை இராமநாதன் பருத்தித்துறை பிரதேச சபையின் உப தவிசாளர் திருமதி. மதினி நெல்சன், சிறப்பு விருந்தினர்களாக சட்டத்தரணி திருமதி. விஜயராணி சதீஸ்குமார், சட்டத்தரணி செல்வி.தர்சா இராசமகேந்திரன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக கிளி/கிளி நொச்சி மகாவித்தியாலய அதிபர் திருமதி.ஜெயந்தி தனபாலசிங்கம், கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரியின் அதிபர் செல்வி. அன்ரனி சாந்தா மரியாம்பிள்ளை ஆகியோரும் கலந்து கொள்வர்.

குறித்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டத்தில் பல்துறை வளர்ச்சி கண்டுள்ள பெண் சாதனையாளர்களும் பெண்அரசியல்ஆளுமைகளும் செயற்பாட்டாளர்களும் மதிப்பளிக்கப்படவுள்ளனர். எனவே இந் நிகழ்வில் பங்கு கொண்டு வலுச்சேர்க்குமாறு அனைவரையும் ஏற்பாட்டுக் குழுவினர் அழைக்கின்றனர். (2)

# போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கி வைப்பு



(குருமன்காடு)

கடந்த காலம் இடம் பெற்ற யுத்தத்தில் பாதிக்கப்பட்ட வவுனியா வடக்கு, கிளிநொச்சி கரைச்சி, கண்டாவளை ஆகிய பிரதேச செயலகங்களுக்குட்பட்ட 10 குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் மேல்மருவத்தூர் ஆதி பராசக்தியின் தேவஸ்தானத்தின் அனுசரணையில் எழுகை சுவிஸ் மற்றும் எழுகை இலங்கை ஊடாக வாழ்வாதார உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட்டது.

இதன்படி, முன்னாள் போராளிகள் குடும்பம், கணவனை இழந்த பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் தெரிவு செய்யப்பட்ட 10 குடும்பங்களுக்கு பால்மாடு, கோழி வளர்ப்பு, ஆடுவளர்ப்பு, விவசாய உதவி (விவசாயக் கிணறு), மருத்துவ உதவி, வீட்டுக்கூரை அமைத்துக் கொடுத்தல் போன்ற உதவித் திட்டங்கள் நேற்று முன்தினம் பரந்தன் எழுகை கௌரியோக அறிவாலயத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் சிரேஷ்ட ஊடகவியலாளர் நவரத்தினம் கபிலநாத், உருத்திரபுரம் சிவன்கோவில் பூசகர் மற்றும் எழுகை இலங்கை தலைவர் செ.கேசவன், செயலாளர் கோ.ரூபகாந், பொருளாளர் அ.யோக மலர், எழுகை கௌரியோக அறிவாலயத்தின் முதன்மை ஆசிரியர் தவரததினம் சிந்துசா உட்பட பயனாளிகளும் கலந்துகொண்டு குறித்த உதவித்திட்டத்தை வழங்கி நிகழ்வைச் சிறப்பித்தனர். (2-250)




# வெடிக்காத நிலையில் மோட்டார் ஷெல் தேடுதல் மேற்கொள்ள நீதிமன்றம் அனுமதி



(கிளிநொச்சி)

கிளிநொச்சி கண்ணகிபுரம் பகுதியில் வெடிக்காத நிலையில் குண்டு காணப்பட்டமை தொடர்பில் தகவல் வழங்கப்பட்ட தகவலைடுத்து. நீதிமன்ற அனுமதியுடன் தேடுதல் மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கிளிநொச்சி அக்கராயன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்ணகிபுரம் பகுதியில் அமைந்துள்ள வாய்க்கால் பகுதியில் இவ்வாறு மோட்டார் ஷெல் காணப்படுவதாக பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து குறித்த பகுதியில் உள்ள வெடி பொருட்களை அகற்ற நடவடிக்கை மேற்கொண்ட பொலிஸார் நீதிமன்ற அனுமதியை நாடியுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து அங்கு வேறு வெடிபொருட்களும் இருக்கலாம் எனும் சந்தேகத்தில் தேடுதல் மேற்கொள்வதற்கு மன்று அனுமதி வழங்கியுள்ளதாகவும், அதனடிப்படையில் தேடுதல் முன்னெடுக்கப்பட உள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (2)

## திருக்கேதீச்சர ஆலய வளாகத்தில்

# சிவராத்திரி பெருவிழாவை முன்னிட்டு 300 பொலிஸார் பாதுகாப்பு கடமையில்

(மன்னார்)

மஹா சிவராத்திரி பெருவிழாவை முன்னிட்டு மன்னார் பாடல் பெற்ற தலமான திருக்கேதீச்சர ஆலயத்திற்கு நாட்டின் பல பாகங்களில் இருந்து அடியார்கள் வருகை தந்துள்ள நிலையில் இம்மக்களின் நலன்கருதி ஆலய சூழலின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டும் சுமார் 300 இற்கு மேற்பட்ட பொலிஸார் மற்றும் போக்குவரத்து பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இலங்கை மற்றும் வெளிநாடுகளில் இருந்து வருகை தந்த பல ஆயிரக்கணக்கான பக்தர்களின் சிவராத்திரி நிகழ்வில் பங்கேற்று வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தனர்.

குறிப்பாக யாழ்ப்பாணம்,வவுனியா,முல்லைதீவு,கிளிநொச்சி பகுதிகளில் இருந்து அநேகமான பக்தர்களும் அதேவேளை சிங்கள பகுதிகளில் இருந்தும் அநேக பக்தர்கள் சிவராத்திரி நிகழ்வில் கலந்து கொள்ள வருகை தந்துள்ளனர்.

நேற்றுக் காலை தொடக்கம் பல்வேறுபட்ட சமய நிகழ்வுகள் பூஜைகள் இடம் பெற்றதுடன் பல்வேறு சொற்பொழிவுகள்,மதம் சார் நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன.

அதே நேரத்தில் குறித்த நிகழ்வு இடம் பெறும் பிரதேசம் முழுவதும் வவுனியா.மன்னார், பேசாலை, முருங்கன், தலைமன்னார் ஆகிய பகுதிகளில் இருந்து வரவழைக்கப்பட்ட சுமார் 300 இற்கு மேற்பட்ட பொலிஸார் மற்றும் போக்குவரத்து பொலிஸார் பாதுகாப்பிற்காக நிறுத்தப்பட்டுள்ளனர். (2-285)

# தமிழ் மாருதம் பண்பாட்டு பெருவிழா வவுனியாவில் இரு தினங்கள்

## காலை, மாலை அமர்வுகளாக நடைபெறும்

(வவுனியா)

கலை இலக்கியச் செயற்பாடுகளை மையமாகக்கொண்டு இயங்கி வரும் தமிழ் மாமன்றம் வருடாந்தம் நடத்தும் பண்பாட்டு பெருவிழாவான தமிழ் மாருதம், இவ்வாண்டு "தொலைத்தவை, தொலைத்துக்கொண்டிருப்பவை, தொலைக்கப்போவன" எனும் கருப்பொருளில், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு எனும் வன்னியின் மூன்று மாவட்டங்களையும் உள்ளடக்கி வன்னியின் பண்பாட்டுப் பெருவிழாவாக எதிர்வரும் 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் காலை மாலை என இரு அமர்வுகளாக வவுனியா நகரசபைக் கலாசார மண்டபத்தில் இடம்பெற உள்ளது.

இதில் முதலாம் நாள் அமர்வு காலை 8:30 மணிக்கு வவுனியா விபுலானந்தர் சிலை முன்பிருந்து வவுனியா நகரசபை கலாசார மண்டபம் சென்றடைந்து நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

மாலை அமர்வு பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகும். இரண்டாம் நாள் அமர்வு 10 ஆம் திகதி காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் அன்றைய மாலை அமர்வு பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். (2)

# அடிப்படை வசதிகளை ஏற்படுத்துமாறு காஞ்சுரமோட்டை மக்கள் கோரிக்கை

(கண்டாவளை)

வவுனியா வடக்கு காஞ்சுரமோட்டை பகுதியில் எந்தவித அடிப்படை வசதிகளுமின்றி கடந்த ஏழு மாதங்களுக்கு மேலாக வாழ்ந்து வரும் தமக்கு வசதிகளை ஏற்படுத்தித்தருமாறு மீள்குடியேறியுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா வடக்கு காஞ்சுரமோட்டை கிராமத்திலிருந்து 1980ஆம் ஆண்டுகளுக்கு பின்னர் ஏற்பட்ட யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து சென்ற 46 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் குறித்த பிரதேசத்தில மீள் குடியேறியுள்ளன.

இந்த மக்களின் தற்போதைய நிலை தொடர்பில் கேட்டறியும் பொருட்டு அண்மையில் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் மற்றும் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ப.சத்தியலிங்கம், ரி.லிங்கநாதன் ஆகியோர் குறித்த பிரதேசத்திற்கு சென்று மக்களுடன் கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது குறித்த பிரதேசத்தில் பல்வேறு அடிப்படை வசதிகள் தேவைப்படுவதாகவும் இங்கிருந்து இடம்பெயர்ந்து சென்ற 360 இற்கும் மேற்பட்ட குடும்பங்களை 46 வரையான குடும்பங்கள் தற்போது மீள்குடியேறியிருப்பதாகவும் இதில் 17 வரையான குடும்பங்கள் இந்தியாவின் தமிழகத்திலிருந்து தாயகம் திரும்பிய குடும்பங்களாகவும் இருப்பதாக குறிப்பிட்ட பிரதேச மக்கள் குடிநீர்.போக்குவரத்து போன்ற அடிப்படை வசதிகள் உடனடியாக ஏற்படுத்த வேண்டும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர். (2-315)

# பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு உலருணவு பொதிகள்

(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட பெண்தலைமைத்துவக் குடும்பங்களுக்கு சமூக வளங்களை ஒருங்கிணைக்கும் நிறுவனத்தினால் உலர் உணவுப்பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்திலுள்ள 15 கிராம அலுவலர் பிரிவுகளிலும் பெண்தலைமைத்துவக்குடும்பங்களின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனமான அமெரிக்க அம்கோர் நிறுவனத்தினால் சுமார் ஆயிரத்து 451 குடும்பங்களுக்கு இந்த உலர் உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.



இதற்கமைவாக கிளிநொச்சி கண்டாவளை, ஊரியான், முரசுமோட்டை ஆகியபகுதிகளில் நேற்று இந்த உலர் உணவுப்பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 9ஆயிரத்து 202 ரூபா பெறுமதியான அரிசி, கோதுமை மா, பருப்பு, சமையல் எண்ணெய், சீனி, உள்ளிட்ட பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

சுமார் 13.6 மில்லியன் ரூபா செலவில் இந்த ஆயிரத்து 451 குடும்பங்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-315)


# பாரதம்

## தணியட்டும் போர்ப் பதற்றம்!



இந்திய விமானப் படை விமானி விங் கொமாண்டர் அபிநந்தன் வர்த்தமானன், பாகிஸ்தானால் விடுவிக்கப் பட்டிருப்பது இந்தியா முழுமைக்கும் மகிழ்ச்சிக் கொண் டாட்டத்தை விதைத்திருக்கிறது.

இரு நாடுகளுக்கும் இடையில் அமைதி நிலவவும் நல்லெண்ணத்தின் அடையாளமாகவும் அபிநந்தனை விடுதலை செய்வதாகக் குறிப்பிட்டிருக்கிறார் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான். உண்மையில், சர்வதேச நாடுகள் கொடுத்த அழுத்தத்தைத் தொடர்ந்தே இம்முடிவை பாகிஸ்தான் எடுத்திருக்கிறது. எனினும், பாகிஸ்தானின் இந்த சமிக்ஞையை ஏற்று சமரச நடவடிக்கைகளுக்கு இந்தியா தயாராக வேண்டும்.



காஷ்மீர் மாநிலம் புல்வாமாவில் ஜெய்ஷ்-இ-முகம்மது அமைப்பு நடத்திய தற்கொலைப் படைத் தாக்குதலில் மத்திய ரிசர்வ் படையைச் சேர்ந்த 45 வீரர்கள் கொல்லப்பட்ட சம்பவத்துக்குப் பதிலடியாக, பாகிஸ்தானின் பாலகோட் பகுதியில் ஜெய்ஷ்-இ-முகம்மது முகாம்கள் மீது இந்திய விமானப் படை தாக்குதல் நடத்தின.

இந்திய வான் எல்லைக்குள் பாகிஸ்தான் விமானப் படை விமானங்களும் புகுந்தன. அவ்விமானங்களை விரட்டிச் சென்ற இந்தியப் போர் விமானங்களில், அபிநந்தன் ஓட்டிச் சென்ற விமானம் தாக்குதலுக்குள்ளானது. பாராசூட் மூலம் விமானத்திலிருந்து குதித்த அபிநந்தன், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் பாகிஸ்தான் இராணுவத்திடம் சிக்கி, போர்க் கைதியானார்.



இதற்கிடையே, மத்திய அரசைச் சேர்ந்த சிலரும் சில பா.ஜ.க. தலைவர்களும் தெரிவித்த காட்டமான கருத்துகளும் இரு நாடுகளின் ஊடகங்களும் வெறியூட்டும் வகையில் நடத்திய விவாதங்களும் போர்ப் பதற்றத்தை உருவாக்கின. போர் ஆதரவு முழக்கங்கள் பெரிய அளவில் எழுந்தன. இந்தியப் பகுதிகள் மீது பாகிஸ்தான் இராணுவத்தினர் பீரங்கிகளால் சுட்டதுடன், இந்திய இராணுவ நிலைகளைத் தாக்கவும் முற்பட்டது மேலும் பதற்றத்தை அதிகரித்தது. அணுகுண்டுகளைத் தயாரித்து கையிருப்பில் வைத்திருக்கும் இரு நாடுகளும் போரில் இறங்கத் தயாரானது உலக அரங்கிலும் பதற்றத்தையும் கவலையையும் ஏற்படுத்தியிருந்தன. இந்தச் சூழலில், அபிநந்தன் விடுதலை பதற்றத்தைப் பெருமளவில் தணித்திருக்கிறது. இந்தச் சூழலை இரு நாடுகளும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

த ஹிந்து ஆசிரியர் தலையங்கம்

## தீவிரவாத ஆதரிப்பை பாக்.நிறுத்த வேண்டும் அமெரிக்க வாழ் இந்தியர்கள் ஆர்ப்பாட்டம்

(நியூயோர்க்)

பாகிஸ்தான் தீவிரவாதத்தை ஆதரிப்பதை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று கோரி அமெரிக்க வாழ் இந்தியர்கள் நியூயோர்க்கில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

புல்வாமா தீவிரவாத தாக்குதலுக்கு பதிலடியாக, பாகிஸ்தானின் பாலகோட் அருகே உள்ள ஜெய்ஷ்-இ-முகமது தீவிரவாத பயிற்சி முகாம்கள் மீது இந்திய விமானப்படை விமானங்கள் கடந்த 26 ஆம் திகதி அதிகாலையில் குண்டு வீசி தாக்குதல் நடத்தின. இதில் 350 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக மத்திய அரசு கூறியுள்ளது.




பாகிஸ்தான் தொடர்ந்து, காஷ்மீர் எல்லையில் அத்துமீறி தாக்குதல் நடத்தி வரும் நிலையில், அதன் தீவிரவாத ஆதரிப்புக்கு உலக நாடுகள் கண்டனம் தெரிவித்து வருகின்றன. இந்நிலையில் அமெரிக்காவில் வாழும் இந்திய சமூகத்தினர் பாகிஸ்தானுக்கு எதிர்ப்பு தெரிவித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டம் நியூயோர்க்கில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. (7)

## நோபல் பரிசு பெற நான் தகுதியானவன் அல்லன்

### இம்ரான்கான் தெரிவிப்பு



நோபல் பரிசு பெற நான் தகுதியானவன் இல்லை என்று பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் தெரிவித்துள்ளார்.

இந்தியா- பாகிஸ்தான் எல்லையில் கடந்த வாரம் விமானத் தாக்குதலில் தமிழக விமானி அபிநந்தன் பாகிஸ்தான் இராணுவத்தால் சிறைபிடிக்கப்பட்டார். விமானி அபிநந்தனை இந்தியாவுக்கு பத்திரமாக அழைத்து வர வேண்டும் என்று உலகம் முழுவதும் குரல்கள் எழுந்தன. இதுதொடர்பான ஹேஷ்டேகுகள் டுவிட்டரில் ட்ரெண்டாகின.

இருநாடுகள் இடையே பதற்றம் சூழ்ந்த நிலையில், "அமைதி மற்றும் நல்லெண்ண அடிப்படையில் இந்திய விமானப்படை விமானி அபிநந்தன் விடுவிக்கப்படுவார்" என்று பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் அறிவித்தார். இம்ரான் கானின் அறிவிப்புக்கு அனைத்துத் தரப்பிடமிருந்தும் பாராட்டுகள் குவிந்தன. பாகிஸ்தான் மட்டுமல்லாது இந்தியாவில் எதிர்க்கட்சித் தலைவர்களும் பொதுமக்களும் இம்ரான் கானின் முன்னெடுப்பைப் பாராட்டி வருகின்றனர்.

இந்நிலையில், பாகிஸ்தானில் டுவிட்டரில் அதுதொடர்பான ஹேஷ்டேகுகள் தேசிய அளவில் ட்ரெண்டாகி வருகின்றன. குறிப்பாக #Nobel PeacePrize For ImranKhan, #PakistanLeads With Peace ஆகிய ஹேஷ்டேகுகள் பரவலாகப் பதிவிடப்பட்டன.

இந்த நிலையில் இம்ரான்கான் தனது டுவிட்டர் பக்கத்தில் "நோபல் பரிசு பெற நான் தகுதியானவன் இல்லை. காஷ்மீர் மக்களது விருப்பப்படி அமைதி மற்றும் துணை கண்டத்தில் வளர்ச்சி யார் ஏற்படுத்துகிறார்களோ அவரே நோபல் பரிசு பெற தகுதி பெற்றவர்" என்று பதிவிட்டுள்ளார். (7)

## வீரர்களின் துணிச்சலுக்கு ஆதாரம் கேட்கிறார்கள்

### -எதிர்க்கட்சிகள் மீது பிரதமர் மோடி தாக்கு-

(டில்லி)

தீவிரவாதிகளை ஒழித்துக்கட்டும் பணியில் நமது வீரர்கள் பரபரப்பாக இயங்குகிறார்கள். ஆனால், எதிர்க்கட்சிகளோ வீரர்களின் துணிச்சலுக்கும் வீரத்துக்கும் ஆதாரங்கள் கேட்கிறது என்று பிரதமர் மோடி காட்டமாக தெரிவித்தார்.

புல்வாமா தாக்குதலுக்குப் பதிலடியாக பாகிஸ்தானின் பாலகோட் பகுதியில் இந்திய விமானப் படையினர் தாக்குதல்நடத்தி, ஜெய்ஷ் இ முகமது தீவிரவாத முகாம்களையும் ஏராளமான தீவிரவாதிகளையும்அழித்து விட்டுத்திரும்பினர்.

ஆனால், இந்தத் தாக்குதல்உண்மையில்லை என்று பல சர்வதேச ஊடகங்கள் தெரிவித்ததால், தாக்குதலுக்கான ஆதாரங்களை வெளியிட வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியுள்ளன. இதைக் குறிப்பிட்டு பிரதமர் மோடி தெரிவித்தார்.



பிஹார் மாநிலம் பாட்னாவில் உள்ள காந்தி மைதானத்தில் பா.ஜ.க. சார்பில் சங்கல்ப் பேரணி நேற்று நடந்தது. இதில் பங்கேற்ற பிரதமர் மோடி உரையாற்றியதாவது.

"தீவிரவாதிகளை ஒழித்துக்கட்டும் பணியில் நமது வீரர்கள் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், எதிர்க்கட்சிகளோ நமது வீரர்களின் வீரத்துக்கும் துணிச்சலுக்கும் ஆதாரங்களைக் கேட்கின்றன.

பாகிஸ்தான் மீது நமது விமானப்படையினர் நடத்திய தாக்குதல் குறித்து ஆதாரங்களை எதிர்க்கட்சிகள் கேட்பது, பாகிஸ்தானை மட்டுமே மகிழ்ச்சிப்படுத்தும்.

தேசம் முழுமையும் ஒரே குரலில்பேசும்போது, 21எதிர்க்கட்சிகள் டில்லியில் கூடி, எங்களைக் கண்டித் தார்கள். விமானத்தாக்குதல்நடத்திய வீரர்களின் துணிச்சலுக்கு ஆதாரங் களை வெளியிட வேண்டும் என்றார்கள்.

எதிர்க்கட்சிகள் எனக்கு எதிராக மிகப்பெரிய சதி செய்கின்றன. நான் தீவிரவாதத்தை ஒழித்துக்கட்ட முயலும்போது, எதிர்க்கட்சிகள் என்னை ஒழிக்க சதி செய்கிறார்கள்.

எல்லையில் எதிரிகளுடன் நமது வீரர்கள் போரிட்டுக் கொண்டிருக்கும் போது, இங்கு உள்நாட்டில் சிலர் பாகிஸ்தானிடம் கனிவுடன் கோரிக்கை வைக்கிறார்கள். இது புதிய இந்தியா. வீரர்களைப் பலிகொடுத்து விட்டு வேடிக்கை பார்க்க மாட்டோம். அமைதியாக இருக்க மாட்டோம்.

பிஹார் மாநிலத்தில் முதல்வர் நிதிஷ் குமார், துணை முதல்வர் சுஷில் குமார்,மோடி ஆகியோர் மக்களுக்குத் தேவையான பல திட்டங்களைச் செய்து வருகின்றனர். அவர்களுக்குத் தேவையான உதவிகளை மத்திய அரசு அளிக்கும்.

பிஹார் மாநிலத்தில் வீதி அமைப்பு, ரயில்வே, விமானப் போக்குவரத்து, அடிப்படைக் கட்டமைப்பு ஆகியவற்றை வலுப்படுத்த மத்திய அரசு தீவிரம் காட்டி வருகிறது. இந்தியாவில் இருந்து ஹஜ் புனிதப் பயணம் செல்வோரின் எண்ணிக்கையை அதிகரித்து வழங்கிய சவுதி இளவரசர் முகமது பின் சல்மானுக்கு எனது நன்றியைத் தெரிவிக்கிறேன் என பிரதமர் மோடி மேலும் தெரிவித்தார். (7)

## திரைப்படமாகின்றது அபிநந்தனின் கதை



(புல்வாமா)

காஷ்மீரின் புல்வாமாத் தாக்குதலை தொடர்ந்து இந்திய- பாகிஸ்தான் முறுகல் தீவிரமடைந்தது. இரு நாடுகளும் மாறி மாறி தாக்குதல் நடத்த, இறுதியில் காஷ்மீர் எல்லைக்குள் பாகிஸ்தான் விமானங்கள் புகுந்தன. அதனை, இந்திய விமானப் படை வீரர்கள் விரட்டியடித்தனர். அப்போது மிக்ரக விமானத்தில் சென்ற விமானப் படை வீரர் அபிநந்தன்வர்த்தமானன், பாகிஸ்தான் இராணுவத்திடம் சிக்கி பெரும் போராட்டத்துக்குப் பின் மீண்டு வந்தார்.

கடந்த சில நாட்களாக உணர்ச்சிபூர்வமாக நடந்தேறிய இந்த சம்பவங்கள், உலகளவில் பேசு பொருளாக காணப்படுகின்றன். இதனை அடிப்படையாகக் கொண்டு திரைப்படமாக்கும் முயற்சிகள் இடம்பெறுகின்றன. பொலிவுட் திரைப்பட தயாரிப்பாளர்கள் இப்பணியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளதாகவும் பெயர் மற்றும் நடிகர் தேர்வு இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (7)

## புகலிடக் கோ... அமெரிக்காவி...



(வோஷிங்டன்)

அமெரிக்காவிடம் புகலிடம் கோரிக்... இருந்து பிரி...

## பால... அரசி...

### அமித்ஷ...

(புல்வாம...

புல்வாம... கோட் பகுதி... விமானப்பட... லுக்கு பயன்... தேசியத் தலை... கட்சி கேள்வ...


புல்வாம... ஸ்தானின் ... னப்படை அ... தாக்குதலில்... லப்பட்டதாக...

இந்த தா... வெளியிட்ட... பாலகோட் த... கள் கொல்... ஆனால், எ... அதேபோல... போதுள்ள... தெளிவாகக்...

இந்நில... ஒரு நிகழ்ச்... தலைவர் அ... பாகிஸ்தானி... திகள் 250... பட்டனர்" எ...

மேலும்... அமைப்பின்... தரர் வெளிய... னப்படை தீ...

## இயற்பியலு... ஸொரெஸ்...



(மொஸ்...

இயற்பி... கடந்த 200... எல்ஃபெரொ...

தனது 8... ழமை கால... கட்சி தெரி...

அமைதி... சோவியத் ... (Mikhail G...

அதற்கு... முதல் ரஷ்ய... டத்தக்கது...

# வெளிநாடு

## கோரிக்கையாளர்கள் விவகாரம்; ாவிடம் உருக்கமான கோரிக்கை



ு கோரிச்சென்ற நிலையில் தங்களிடம் ருந்து பிரிக்கப்பட்ட பிள்ளைகளை மீண்டும் தங்களோடு இணைக்குமாறு புகலிடம் கோரிச் சென்றுள்ள பெற்றோர் அந்நாட்டு அரசாங்கத்திடம் உருக்கமாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

மத்திய அமெரிக்க நாடுகளிலிருந்து கடந்த ஆண்டு அமெரிக்காவுக்குக் புகலிடம் கோரிச் சென்றபோது கைது செய்யப்பட்ட குடும்பங்களிலிருந்த பிள்ளைகள், பெற்றோரிடமிருந்து பிரிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், மீண்டும் மெக்ஸிக்கோ எல்லையைக் கடந்து அமெரிக்காவிற்குள் நுழைந்த பெருமளவானோர் தமக்கு அகதி அந்தஸ்து வழங்குமாறும் தம்மிடமிருந்து பிரிக்கப்பட்ட தமது பிள்ளைகளைத் தம்முடன் மீண்டும் இணைக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மெக்ஸிக்கோ எல்லையைக் கடந்து அமெரிக்காவிற்குள் நுழைந்த பலர் அங்கு அமெரிக்க சுங்கத்தினர் மற்றும் எல்லைப் பாதுகாப்பு படையினரைச் சந்தித்து இந்தக் கோரிக்கையை முன்வைத்ததாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இவ்வாறு வருகைதந்த குடியேற்றவாசிகள் அகதி அந்தஸ்து பெறுவதற்காகவும் பிள்ளைகளைத் தம்முடன் இணைத்துக்கொள்வதற்காகவும் சட்ட நிறுவனங்களிலுள்ள சட்டத்தரணிகளை நாடியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. தங்களிடமிருந்து பிரிக்கப்பட்ட பிள்ளைகளை விரைவில் மீண்டும் தங்களிடம் ஒப்படைக்குமாறும் அவர்கள் அமெரிக்க அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (7)

## ாலகோட் தீவிரவாத முகாம் தாக்குதலை அரசியலுக்கு பயன்படுத்தவில்லையா?

### மித்ஷாவிடம் காங்கிரஸ் கேள்வி

(புல்வாமா)

புல்வாமா தாக்குதலுக்கு பதிலடியாக பாலகோட் பகுதியில் தீவிரவாதிகள் மீது இந்திய ானப்படை நடத்திய தாக்குதலை அரசிய க்கு பயன்படுத்தவில்லையா? என்று பா.ஜ.க. சியத் தலைவர் அமித்ஷாவுக்கு காங்கிரஸ் சி கேள்வி எழுப்பியுள்ளது.

புல்வாமா தாக்குதலுக்குப் பதிலடியாக பாகி ானின் பாலகோட் பகுதியில் இந்திய விமா படை அதிரடித் தாக்குதல் நடத்தியது. இந்த க்குதலில் ஏராளமான தீவிரவாதிகள் கொல் பட்டதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதல் நடந்த அன்று அறிக்கை ளியிட்ட மத்திய வெளியுறவுத்துறையும், லகோட் தாக்குதலில் ஏராளமான தீவிரவாதி கொல்லப்பட்டனர் என்று தெரிவித்தது. னால் எண்ணிக்கையைத் தெரிவிக்கவில்லை. தேபோல விமானப் படை தளபதியும் இப் ாதுள்ள நிலையில் எண்ணிக்கையை ளிவாகக் கூற இயலாது என்று தெரிவித்தார்.

இந்நிலையில் அகமதாபாத்தில் நேற்று நிகழ்ச்சியில் பேசிய பா.ஜ.க. தேசியத் லைவர் அமித்ஷா, "பாலகோட் தாக்குதலில் ிஸ்தானின் ஜெய்ஷ் இ முகமது தீவிரவா ள் 250 இற்கும் மேற்பட்டோர் கொல்லப் ்னர்" என்று தெரிவித்தார்.

மேலும் ஜெய்ஷ் இ முகமது தீவிரவாத மைப்பின் தலைவர் மசூத் அசாரின் சகோ வெளியிட்ட ஆடியோவிலும் இந்திய விமா படை தீவிரவாதிகள் தங்கி இருந்த இடத்



தில் தாக்குதல் நடத்தியது உண்மைதான் என்று தெரிவித்தார்.

இந்த சூழலில் பா.ஜ.க. தேசியத் தலைவர் அமித்ஷாவின் பேச்சை காங்கிரஸ் தலைவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

காங்கிரஸ் மூத்த தலைவர் மணிஷ் திவாரி டுவிட்டரில் கூறுகையில், "ஏர்மார்ஷல் கபூர் கூறுகையில், பாலகோட் தாக்குதலில் கொல்லப்பட்ட தீவிரவாதிகள் எண்ணிக்கையை உடனடியாக கூறுவது கடினம். முகாம்கள் மீது தாக்குதல் நடத்தினோம் என்றார். ஆனால், அமித்ஷா 250 தீவிரவாதிகள் விமானப்படைத் தாக்குதலில் கொல்லப்பட்டதாகக் கூறுகிறார். விமானப் படைத் தாக்குதலை அரசியலுக்கு பயன்படுத்தவில்லையா?" எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

முன்னாள் மத்திய அமைச்சரும் காங்கிரஸ் மூத்த தலைவருமான கபில் சிபல் டுவிட்டரில் கூறுகையில், "பிரதமர் மோடி, சர்வதேச ஊடகங்களான, நியூயோர்க் ரைம்ஸ், லண்டனைச் சேர்ந்த ஜேன் தகவல் குழுமம், வோஷிங்டன் போஸ்ட், டெய்லி டெலிகிராப், ரொய்டர்ஸ், தி கார்டியன் ஆகிய பத்திரிகைகள் பாலகோட் தாக்குதலில் தீவிர வாதிகள் பலியாகவில்லை என்று செய்தி வெளியிட்டுள்ளன. தீவிரவாதத்தை அரசியலாக்குகிறீர்கள்" எனத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் நிதி அமைச்சர் ப.சிதம்பரம் டுவிட்டரில் கூறுகையில், "இந்திய விமானப் படையின் வீர நடவடிக்கையைப் பாராட்டிய முதல் மனிதர் ராகுல் காந்தி என்பதைப் பிரதமர் மோடி மறந்து விட்டார்.

விமானப்படை துணை மார்ஷல், பாலகோட் தாக்குதலில் தீவிரவாதிகள் உயிர்ப் பலி குறித்து கருத்துத் தெரிவிக்க மறுத்துவிட்டார் ஆனால், வெளியுறவுத் துறை அமைச்சகமோ, மக்களோ அல்லது இராணு வத்தினரோ யாரும் உயிரிழக்கவில்லை என்கிறது. ஆனால், 300 முதல் 350 உயிரிழப்புகள் ஏற்பட்டது என யார் வெளியிட்டார்கள்? இந்தியக் குடிமகன் என்ற முறையில் என்னுடைய அரசை நான் நம்புகிறேன். ஆனால் உலகம் நம்ப வேண்டுமே? அதற்கான முயற்சியை அரசு எடுக்க வேண்டும் என்று சிலர் சொன்னதில் என்ன தவறு?" எனக் கேள்வி எழுப்பியுள்ளார். (7)

## ற்பியலுக்கான நோபல் பரிசு வென்ற ாரெஸ் எல்ஃபெரொவ் காலமானார்



(மொஸ்கோ)

இயற்பியலுக்கான நோபல் பரிசினை த 2000ஆம் ஆண்டு வென்ற ஸொரெஸ் ஃபெரொவ் (Zhores Alferov) காலமானார். தனது 88 வயதில் அவர் கடந்த சனிக்கி ம காலமானதாக ரஷ்யக் கம்யூனிஸ்ட் தெரிவித்துள்ளது.

அமைதிக்கான நோபல் பரிசை முன்னைய வியத் தலைவர் மிக்காய்ல் கோர்பச்சாவ் khail Gorbachev) 1990இல் வென்றார். அதற்கு பின்னர் நோபல் பரிசினை வென்ற ல் ரஷ்யர் எல்ஃபெரொவ் என்பது குறிப்பி க்கது. (7)

### பாகிஸ்தான் தாக்குதலின் எதிரொலி

## ஜம்மு-காஷ்மீர் எல்லைப் பகுதியில் பதுங்கு குழிகள் அமைக்க அனுமதி

(இஸ்லாமாபாத்)

ஜம்மு-காஷ்மீரின் எல்லைப் பகுதியில் 400 பதுங்கு குழிகளை அமைத்துக் கொள்ள இந்திய மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

பாகிஸ்தானைச் சேர்ந்த தீவிரவாத அமைப்புகளின் தாக்குதல் மற்றும் பாகிஸ்தான் இராணுவத்தின் எல்லை தாண்டிய அத்துமீறிய துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் காரணமாக இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையே பதற்றமான சூழ்நிலை நிலவி வருகின்றது.




இதன் காரணமாக ஜம்மு-காஷ்மீரில் உள்ள இந்திய எல்லைப் பகுதிகளில் உச்சகட்ட பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதேநேரம் பாதுகாப்பு நடவடிக்கைகளை கருத்திற் கொண்டு எல்லைப் பகுதியில் அமைந்துள்ள பூஞ்ச் மற்றும் ரஜௌரி மாவட்டங்களில் மொத்தம் 400 பதுங்கு குழிகள் அமைத்துக்கொள்ள பாதுகாப்புப் படையினருக்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இதையடுத்து இந்த 400 பதுங்குகுழிகளும் அடுத்த ஒரு மாதத்துக்குள் அமைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)

## அல்கொய்தா ஆதரவாளர்கள் தாக்குதல்; சிரியப் படையினர் 35 பேர் உயிரிழப்பு



(டமாஸ்கஸ்)

சிரியாவில் அல் கொய்தா ஆதரவாளர்களான பயங்கரவாதிகள் அரசுப்படைகள் மீது நேற்று முன்தினம் நடத்திய தாக்குதலில் 35 வீரர்கள் உயிரிழந்தனர்.

சிரியா நாட்டில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத் ஆட்சிக்கு எதிரான கிளர்ச்சிப் படையினர் சில பகுதிகளை கைப்பற்றி, போட்டி அரசாங்கம் ஒன்றை நடத்தி வருகின்றனர். இவர்கள் மீது சிரியா இராணுவம் அதிரடியாக தாக்குதல் நடத்தி வருகிறது. இராணுவத்துக்கு ஆதரவாக ரஷ்ய நாட்டின் விமானப்படைகளும் கிளர்ச்சியாளர்கள் முகாம் மீது வான்வழித் தாக்குதல்களை நடத்துகிறது.

மேலும், சிரியாவின் பல பகுதிகளில் ஆயுதமேந்திய பயங்கரவாதக் குழுக்கள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன.

இந்நிலையில், இங்குள்ள இட்லிப் மாகாணத்தில் பயங்கரவாதிகள் அரசுப்படைகள் மீது நேற்று நடத்திய தாக்குதலில் 35 வீரர்கள் உயிரிழந்தனர். இந்த தாக்குதலுக்கு அல் கொய்தா ஆதரவாளர்களான அன்சர் அல்-தவ்ஹித் ஜிஹாதி படை என்னும் பயங்கரவாத இயக்கம் பொறுப்பேற்றுள்ளது. இருதரப்பினருக்கும் இடையில் நடந்த மோதலில் 5 பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டதாக சிரிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (7)

## ஆப்கானில் கனமழை; 20 பேர் உயிரிழப்பு



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் வெள்ளத்தில் சிக்கி இதுவரை சிறுவர்கள் உட்பட 20 பேர் பலியாகிவிட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆப்கானிஸ்தானின் தெற்கு பகுதியில் உள்ள காந்தஹார் மாகாணத்தில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் இடைவிடாது கனமழை கொட்டி வருகிறது. தொடர் கனமழையால் நீர்நிலைகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு ஊர்களுக்குள் தண்ணீர் புகுந்தது.

அர்கன்டாப், டாமான், ஸ்பின் போல்டாக், டாண்ட் ஆகிய மாவட்டங்கள் வெள்ளத்தில் தத்தளிக்கின்றன. 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் வெள்ளத்தில் மூழ்கிவிடடன. வெள்ளத்தில் சிக்கி இதுவரை சிறுவர்கள் உட்பட 20 பேர் பலியாகிவிட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் 10 பேர் மாயமாகி இருக்கிறார்கள். அவர்களின் கதி என்ன? என்பது தெரியவில்லை. இந்த தகவலை ஐ.நாவின் மனிதாபிமான விவகாரங்களின் ஒருங்கிணைப்பு குழு தெரிவித்துள்ளது. (7)

## ஆப்கான் இராணுவம் தாக்குதல் தலிபான்கள் 17 பேர் உயிரிழப்பு!



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் இராணுவம் நடத்திய தாக்குதலில் தலிபான் பயங்கரவாதிகள் 17 பேர் கொல்லப்பட்டனர்.

ஆப்கானிஸ்தானின் ஹெல்மண்ட் மாகாணத்தின் ஷொராப் பகுதியில் உள்ள இராணுவ முகாமில் தலிபான் பயங்கரவாதிகள் கடந்த சனிக்கிழமை நுழைந்து தாக்குதல் நடத்தினர். இதில் இராணுவ தளத்தில் இருந்த 40 பேர் பலியாகினர். மேலும் பலர் படுகாயம் அடைந்தனர்.

இந்நிலையில், ஹெல்மண்ட் மாகாணத்தில் தலிபான் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கு பதிலடியாக ஆப்கான் இராணுவத்தினர் நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் தலிபான் இயக்கத்தை சேர்ந்த 2 சிரேஷ்ட தளபதிகள் உட்பட 17 பேர் பலியாகினர் என இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். (7)

### மக்களின் வாக்குகளுக்கு எதிராகச் செயற்படுவது

# தேசத் துரோகம்!



## அமைச்சர் சஜித் காட்டம்

(புத்தளம்)

பொதுமக்கள் வழங்கிய வாக்குகளுக்கு எதிராகச் செயற்படுவது தேசத்துரோகம் என அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

புத்தளம், கொட்டுக்கச்சி பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 173 ஆவது வீடமைப்புத் திட்டத்தை நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மக்களின் விருப்பத்திற்கு, மக்களின் அபிலாஷைகளுக்கு எதிராகச் செயற்படுவோர் தேசத்துரோகிகள். சிறந்த நாட்டை உருவாக்குவதற்காக நீங்கள் அளித்த வாக்குகளுக்கு நாம் கடனாளிகள்.

எனவே நாம் உங்களுக்கு எப்போதும் கடனாளிகள். அமைச்சுப் பதவி முதல் ஜனாதிபதி, பிரதமர் பதவிவரை அனைத்தும் மக்கள் வழங்கியது. அதற்கான கடனைச் செலுத்த வேண்டும்.

இன்று மீண்டும் ராஜபக்ஷ என்ற குடும்ப ஆட்சியை நிலைநிறுத்த சிலர் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அப்படி அவர்கள் தெரிவானால் மாவட்டம் தோறும் சொகுசு மாளிகைகள் உருவாகும். உங்களிடம் இருந்து பெறப்படும் வரியின் மூலமே அபிவிருத்திகள் நடைபெறுகின்றன. எனவே நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டும் ஆழமாகச் சிந்தித்தும் நாம் முடிவுகளை எடுக்க வேண்டும்" என சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவித்தார். (இ-7)

# நிறைவேற்று அதிகாரத்தை நீக்க ஐ.தே.க.காத்திரமான தீர்மானம்



## அமைச்சர் ஹாஷிம் தெரிவிப்பு

(கொழும்பு)

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவது குறித்து காத்திரமான தீர்மானம் ஒன்றை எடுப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி எப்போதும் தயாராகவேயுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் அமைச்சருமான கபீர் ஹாஷிம் தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியினரால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள 20 ஆவது திருத்தச் சட்ட மூலம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கடந்த யுத்த காலத்தில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியொருவர் நாட்டுக்கு முக்கியமான காலப் பகுதியில் அதனை நீக்குவது தொடர்பில் கருத்துத் தெரிவித்தவர்கள் தற்பொழுது அது அவசியமில்லாத காலப் பகுதியில் நீக்கக் கூடாது என்ற கருத்தில் உறுதியாக நிற்கின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சி யுத்த காலத்தில் ஜனாதிபதி முறைமைக்கு ஆதரவாகவே செயற்பட்டது. தற்போதைய சூழ்நிலையில் அது குறித்து பொருத்தமான ஒரு தீர்மானத்தை எமது கட்சி எடுக்கும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பங்களாதேஷ் கடற்படை கப்பல் கொழும்பு துறைமுகம் வருகை



(கொழும்பு)

பங்களாதேஷ் கடற்படை கப்பல் ஒன்று நான்கு நாள் விஜயம் மெற்கொண்டு கொழும்பு துறைமுகத்திற்கு நேற்று முன்தினம் வருகை தந்துள்ளது.

"தலேஸ்வரி" என்றழைக்கப்படும் இக் கப்பலுக்கு இலங்கை கடற்படையினரால் வரவேற்பளிக்கப்பட்டது.

நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தின் போது, கப்பல் குழுவினர் நாட்டிலுள்ள பிரபலமான இடங்களைப் பார்வையிடுவதற்கும் விளையாட்டு மற்றும் கலாசார நிகழ்வுகளில் பங்குகொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

"தலேஸ்வரி" கப்பலானது 1920 தொன் நிறையுடைய 81 மீற்றர் நீளமான கப்பல் ஆகும். இக் கப்பல் பங்களாதேஷின் 183 ஆவது படைக் குழுவினால் நிர்வகிக்கப்படுகிறது.

இக் கப்பல் நாளை தனது உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பவுள்ளது. (இ-7)

### "அமெரிக்காவிடமிருந்து 1000 துப்பாக்கிகள்"

# அதிரடிப்படைக்கு அதிநவீன ஆயுதங்கள் கொள்வனவு!

(கொழும்பு)

விசேட அதிரடிப்படைக்கு, அதி நவீன ஆயுதங்கள் புதிதாக கொள்வனவு செய்து வழங்கப்படவுள்ளதாக விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி எம்.ஆர். லதீப் தெரிவித்துள்ளார்.

பாதாள உலகக் குழுக்களின் தலைவர்கள் மற்றும் போதைப்பொருள் குற்றவாளிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடும் போது விசேட அதிரடிப்படையினர் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் வகையில் நவீன ஆய்துங்கள் வழங்கப்படவுள்ளன.

விசேட அதிரடிப்படையினருக்குத் தேவையான பெருமளவு ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கையில் பாதுகாப்பு அமைச்சு ஈடுபட்டுள்ளது.

வெளிநாட்டில் இருந்து இந்த ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

இதுபற்றி சில நாடுகளுடன் பேசியுள்ளோம். எனினும், கலந்துரையாடிய நாடுகளில் சீனா உள்ளடங்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, விசேட அதிரடிப்படையினரின் தேவைக்காக 1000 துப்பாக்கிகள், அமெரிக்காவிடம் இருந்து வாங்கப்படவுள்ளதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

இவ்வாறு கொள்வனவு செய்யப்படவுள்ள ஆயுதங்களில் எம்- 16 துப்பாக்கிகள்-500, எம்.பி-5 உப இயந்திரத் துப்பாக்கிகள்- 250, கைத்துப்பாக்கிகள்-250 என்பன அடங்கியுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

### தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# ஆறுவது சினம்

எனக்குத் தெரிந்த ஒரு பெரியவர் ஆன்மீகத்திலே மிகவும் ஈடுபாடு அவருக்கு!

அதேநேரத்திலே அரசாங்கத்திலே பொறுப்பான உத்தியோகம் அவருக்கு!

இரண்டு பக்கமும் குறையில்லாத அளவுக்கு கவனித்துக் கொண்டிருந்தார். எல்லாவற்றிலும் அவர் மிகவும் கெட்டிக்காரர். அவரால் முடியாத காரியம் என்று ஒன்று உண்டு என்றால்... அது பேசாமல் இருக்கின்றதுதான்! ஆமாம்! அவருக்கு எப்பவும் எதைப் பற்றி யாவது யாரிடமாவது பேசிக்கொண்டே இருக்க வேண்டும்.

மௌனமாக இருப்பது அவரைப் பொறுத்தவரைக்கும் மிகவும் கஷ்டமான காரியம்! அப்பேர்ப்பட்ட அவர் என்ன செய்வார் என்றால்...வாரத்திற்கு ஒரு நாள் மௌன விரதமிருப்பார்.அதுவும் அலுவலகத்திலேயே! வழக்கமாக புதன்கிழமையன்று அப்படியிருப்பார். வேலை செய்கின்ற பணியாளர்களிடம் பேசவே மாட்டார். ஆனால் அலுவலக வேலையெல்லாம் ஒழுங்காக நடக்கும்!

"ஏங்க மௌனமாக இருப்பதுதான் உங்களுக்கு மிகவும் கஷ்டமாச்சே! அப்படி இருக்கின்ற பொழுது எதற்கு மௌன விரதம்?" என்று அவரைப் பார்த்து ஒரு நாள் கேட்டேன்?

"நமக்கு எது கடினமான செயலோ அதைச் செய்வதுதான் பெருமை!" என்று அவர் பதில் சொன்னார். அவருக்குக் கீழே அந்த அலுவலகத்திலே வேலை செய்கின்ற இன்னொருவரையும் எனக்குத் தெரியும்.

அவர் சொன்னார்! "இதோ பாருங்கள்! எங்கள் உத்தியோகத்தர் அவருக்குக் கடினமான ஒரு காரியத்தை ஒவ்வொரு புதன்கிழமையும் செய்கின்றார்!"

அதேமாதிரி எங்களுக்கு கடினமான ஒரு காரியத்தையும் அதே புதன்கிழமையன்றைக்கு முடித்துக் கொள்கின்றோம்!" என்றார்.

"என்னங்க அது" என்று கேட்டேன்" வேறு ஒன்றுமில்லை.. நிறைய பைல்களில் அன்றைக்குத்தான் அவரிடம் கையெழுத்து வாங்குவோம்! சம்பள பில் உட்பட! வாய் பேசாமல் போட்டு விடுவார். ஏனைய நாள் என்றால் ஆயிரம் கேள்வி கேட்டுக் கொண்டிருப்பார்!" என்றார். இவரும் பெருமைப்பட்டுக் கொண்டார். ஏன்னென்றால் அவர் ஒரு கடினமான செயலை அன்றைக்கு முடித்துவிடுகின்றார் அல்லவா!

ஒரு பையன் இருந்தான். ஒளிவு மறைவு இல்லாத சுபாவம் அவனுக்கு! அவனிடம் என்ன குறை என்றால்... அவசரப்பட்டு சிந்திக்காமல் உணர்ச்சி வேகத்திலே எதையாவது செய்துவிடுவார். பட்ரென்று கோபம் வந்துவிடும்.

ஒரு நாள் அரவிந்தர் அந்தப் பையனைப் பார்த்தார். "தம்பி! நீ மிகவும் புத்திசாலிதான்! அதிலே ஒன்றும் சந்தேகம் இல்லை" உன்னாலே எல்லாம் முடியும். அந்த அளவுக்கு வலு இருக்கின்றது உன்னிடம்! இருந்தாலும் நான் இப்பொழுது உன்னிடம் ஒரு கேள்வி கேட்கப் போகின்றேன்! என்றார்.

"கேளுங்கள் என்றான் பையன்"

"உன்னை மாதிரி பலசாலியாக உள்ள பையனுக்கு கடினமான செயல் எது? அடிக்கு அடி குடுக்கின்றதா? அதாவது உன்னை ஒருத்தன் அவமதித்துவிட்டால் உடனே அவன் முகத்திலே ஒரு குத்து விடுவது கடினமான செயலா?" இல்லை... அந்த நேரத்திலே உன் கையை கெட்டியாக மூடிக் கொண்டு கால் சட்டைப் பைக்குள்ளே வைத்துக் கொள்கின்றது கடினமான செயலா? என்று கேட்டார் அரவிந்தர்.

"என்னைப் பொறுத்த வரைக்கும் உடனே அவன் முகத்திலே ஒரு குத்து விடுவது மிகவும் சுலபம். அந்த நேரத்திலே கையை மூடிக் கொண்டு சும்மா இருக்கின்றது மிகவும் கஷ்டம்!" என்றான் பையன்.

"உன்னை மாதிரி வீரமுள்ள பையனுக்கு எது பெருமை?

சுலபமான காரியத்தைச் செய்வதா, கடினமான காரியத்தைச் செய்வதா? என்று கேட்டார் இவர்.

பையன் கொஞ்சம் தயங்கினான். யோசித்தான்.

"கடினமான செயலை செய்வது தான் பெருமை!" என்றான்.

"மிகவும் நல்லது! இன்னொரு சந்தர்ப்பம் வருகின்ற பொழுது நீ அது மாதிரி நடந்து கொள்!" என்று சொல்லிவிட்டு அவர் போய்விட்டார்.

கொஞ்ச நாள் கழித்து ஒரு நாள்,

அந்தப் பையன் அரவிந்தரைத் தேடி வந்தான். நியாயமான பெருமையுடன் அவர் முன்னாள் நின்றான்.

"என்னால் அதிக கடினமான செயலை செய்ய முடிந்தது!" என்றான்.

"என்ன நடந்தது?" என்று விசாரித்தார்.

பையன் சொன்னான்.

"ஐயா! என்னுடன் வேலை செய்கின்ற பையன் ஒருத்தன் மிகவும் முன் கோபக்காரன் என்று பேர் வாங்கியவன். அவன் கோபத்திலே என்னை அடித்துவிட்டான். உடனே நான் திருப்பி அடித்து விடுவேன் என்றும் அவன் எதிர்பார்த்தான். அதற்குத் தகுந்த மாதிரி எச்சரிக்கையாக இருந்தான். அந்த சமயத்திலே எனக்கு நீங்கள் சொன்னது ஞாபகத்திற்கு வந்தது! அது நான் நினைத்ததைவிட கடினமாகத்தான் இருந்தது.

இருந்தாலும் நான் கையைக் கெட்டியாக மூடி கால் சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டேன். அப்படி செய்ததும் என்னுடைய கோபம் எல்லாம் போய்விட்டது!

அவனுக்காக நான் கோபப்படவில்லை. வருத்தப்பட ஆரம்பித்தேன்!

கொஞ்சநேரம் கழித்து அவனிடம் கைகுலுக்குவதற்காக என் கையை நீட்டினேன். அவனுக்கு மிகவும் ஆச்சரியமாகப் போய்விட்டது! அப்படியே என்னை கட்டிப் பிடித்துக் கொண்டான். அது மட்டுமில்லை...

"இப்பொழுது நீ என்னை என்ன வேண்டும் என்றாலும் செய்யலாம்; நான் என்றைக்கும் உன்னுடைய நண்பன்! என்றான்" அப்படி என்று அந்த பையன் சொன்னதும் அரவிந்தருக்கு மிகவும் மகிழ்ச்சி!

இந்தக் கதையை இன்றைக்கு உங்களிடம் சொல்வதற்கு முன்னாள் என் சிநேகிதன் ஒருத்தனிடம் சொன்னேன். அவன் கொஞ்சம் முன் கோபக்காரன். சொல்லி இரண்டு நாள் கழித்து அவனை சோதித்துப் பார்க்க வேண்டும் என்று எனக்கு ஒரு ஆசை.

அதனால் அவன் முன்னாடி போய் நின்று கொண்டு கோபம் வருவது மாதிரி பேசினேன். என்ன ஆச்சரியம்? அவன் தன்னுடைய பாண்ட் பொக்கெட்டில் கையை கெட்டியாக மூடி வைத்துக் கொண்டு வெளியே எடுக்கவே இல்லை. கன்னா பின்னா என்று திட்டினேன். அப்பவும் கையை எடுக்கவில்லை. சும்மாவாச்சும் கீன்னத்திலே பளார் என்று அறைந்து பார்த்தேன், அவன் அசைந்து கொடுக்வில்லை. எனக்கு மிகவும் பெருமையாக இருந்தது.

மறுநாள் அவனைத் தேடிப் போய் என்னுடைய பாராட்டை தெரிவித்துக் கொண்டேன். அவன் என்னைப் பார்த்தவுடன்...

"அன்றைக்கு ஏதோ உன்னுடைய நல்ல காலம். நீ என்னிடம் அறை வாங்காமல் தப்பித்துக் கொண்டாய். இன்றைக்கு வேணும் என்றால் அப்படி செய்து பாரேன்!" என்று சவால் விட்டான். "என்னடா விடயம்?" என்று கேட்டேன்!

"அன்றைக்கு லட்டு ஒன்று கையிலே வைத்து சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். நீ வந்து கொண்டிருந்ததைப் பார்த்ததும் அப்படியே பொக்கெட்டில் மறைத்துக் கொண்டேன். அந்த சமயம் பார்த்து நீ அறைந்து விட்டாய்! அதுதான் தப்பித்துக் கொண்டாய்" என்றான்.

"சரி வருகின்றேன் என்று சொல்லிவிட்டு உடனே புறப்பட்டு நான் வந்துவிட்டேன்!

# மாகந்துரே மதூஷ் குறித்து மேலும் சில தகவல்கள் கசிவு

(கொழும்பு)

700 கோடி ரூபாய் பெறுமதியான வைரம் மற்றும் இரத்தினக்கற்கள் கொள்ளையின் சூத்திரதாரிக்கும், தற்போது டுபாயில் தடுப்பிலுள்ள மாகந்துரே மதூஷுக்கும் இடையிலான தொடர்புகள் குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவர் பேலியகொட குற்ற விசாரணைப் பிரிவினால் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில தினங்களில் கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அவர் குறித்த விபரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

தற்போது டுபாயில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மாகந்துரே மதூஷின் கட்டளைகளுக்கு அமைவாகவே இந்தக் கொள்ளை இடம்பெற்றுள்ளது.

இந்தக் கொள்ளையைப் புரிந்தவர் மொரட்டுவையைச் சேர்ந்தவர் என்றும் அவர் நாட்டின் பல்வேறு இடங்களில் இடம்பெற்ற கொள்ளைகளுடன் தொடர்புடையவர் என்றும் தெரியவந்துள்ளது.

அவர் எட்டு வருடங்களுக்கு முன்னர் சிறையில் இருந்தபோது கிடைத்த தொடர்புகளைக் கொண்டு, மாகந்துரே மதூஷின் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருப்பதாக கூறப்படுகிறது.

இதன்படி மாகந்துரே மதூஷின் திட்டங்களுக்கு அமைய இலங்கையில் இருந்து பல கொள்ளைகளை அவர் புரிந்துள்ளார்.

தற்போது தலைமறைவாகியுள்ள அவரை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. (இ-7)

# தென் அமெரிக்காவில் சூறாவளி 25 பேர் உயிரிழப்பு!

தென் அமெரிக்கவின் அலபாமா மாநிலத்தில் ஏற்பட்ட சூறாவளியில் குழந்தைகள் உட்பட குறைந்தது 25 பேர் உயிரிழந்துள்ளனர் என மாநில அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் அலபாமா பகுதியை கடுமையான சூறாவளி தாக்கியிருந்தது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் மேலும் உயிரிழந்தோரின் எண்ணிக்கை அதிகரிக்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. சூறாவளி தாக்கியதை அடுத்து இரவு கடும் இருட்டிலும் மீட்புப் பணியாளர்கள் பாதிக்கப்பட்டோரை மீட்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இடிபாடுகளுக்குள் பலர் சிக்கியிருக்க கூடுமென அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. அலாபாமாவில் உண்டான சூறாவளியினால் வீடுகள் வர்த்தகத் தளங்கள் உட்படப்பல் வேறு உடைமைகள் சேதமடைந்துள்ளன.

அசாதாரண காலநிலை மாற்றத்தை தொடர்ந்து தென் அமெரிக்காவின் ஜோர்ஜியா மற்றும் அலபாமா மாநிலங்களுக்கு ஞாயிற்றுக்கிழமை மாலை சூறாவளி எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இதேவேளை கடந்த பெப்ரவரி 23 ஆம் திகதி அலபாமாவிற்கு விடுக்கப்பட்ட அவசரகால நிலை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது என ஆளுநர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (7)

## போதைப்பொருள் மீட்பு

# பங்களாதேஷ் சென்றுள்ள பொலிஸ் விசாரணைக்குழு

(டாக்கா)

விசேட பொலிஸ் விசாரணைக்குழுவொன்று பங்களாதேஷுக்குச் சென்றுள்ளது.

தெஹிவளையில் கடந்த டிசெம்பர் மாதம் பெருந்தொகையான போதைப் பொருள் கைப்பற்றப்பட்டமை தொடர்பான மேலதிக விசாரணைகளுக்காகவே இந்த குழு பங்களாதேஷுக்குச் சென்றுள்ளதாகப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் அதிகாரியொருவரும் பொலிஸ் பொறுப்பதிகாரி ஒருவருமே இவ்வாறு அங்கு சென்றுள்ளனர்.

குறித்த போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய பங்களாதேஷ் பிரஜைகள் ஐவர் பங்களாதேஷில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் தொடர்பாக அந்நாட்டு பொலிஸார் விசாரணைகளை நடத்தியுள்ளதுடன், அங்கு சென்றுள்ள விசேட குழு, தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளிடம் விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளனர்.

5 நாட்கள் பங்களாதேஷில் தங்கவுள்ள பொலிஸ் விசேட குழு, அந்நாட்டின் பொலிஸ்மா அதிபர் மற்றும் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் தலைவரையும் சந்திக்கவுள்ளது. (இ-7)

# நிஸ்ஸங்கவின் உருவப்படம் சு.கவின் தலைமையகத்தில்



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஸ்தாபிப்பதில் முன்னணி வகித்த முன்னாள் செனட் சபை உறுப்பினர் சட்டத்தரணி எச்.ஸ்ரீ. நிஸ்ஸங்கவின் உருவப் படம் நேற்று திரை நீக்கம் செய்யப்பட்டது.

தேசிய அபிலாஷைகளுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட சிரேஷ்ட தலைவர்களுள் ஒருவரான அரச சட்டத்தரணி எச்.ஸ்ரீ. நிஸ்ஸங்கவின் சிரார்த்த தினம் பெப்ரவரி 26 ஆம் திகதியாகும். அதனை முன்னிட்டு அவரின் உருவப்படம் ஒன்று ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டதுடன், ஜனாதிபதி அதற்கு மலரஞ்சலி செலுத்தினார்.

இதேநேரம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் புனரமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கட்சி தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற காலி மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி செயற்குழு கூட்டத்திலும் ஜனாதிபதி கலந்துகொண்டார். (இ-7)

# ஆயிரம் ரூபாய் கோரியவர்களின் அடிவயிற்றில் அடித்த முதலாளிமார்

## ஞாபகப்படுத்தி ஆர்ப்பாட்டம்




(ஹற்றன்)

ஆயிரம் ரூபாவை நாளாந்த சம்பளமாக பெற்றுத் தருவதாகக் கூறித் தொழிலாளர்களின் அடிவயிற்றில் தொழிற்சங்கங்களும் முதலாளிமார் சம்மேளனமும் அடித்தது.

இதனை ஞாபகப்படுத்தி இந்த நம்பிக்கைத் துரோகச் செயலைக் கண்டித்தும் எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தில் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை இன்றைய பொருளாதார நிலையில் தொழிலாளர்களின் நிலையுணர்ந்து உயர்த்த அரசுக்கு அழுத்தம் பிரயோகித்து ஹற்றன்நகரில்ஜே.வி.பி. மற்றும் அதன் தொழிற்சங்கப் பிரிவான அகில இலங்கை தோட்டத் தொழிலாளர்கள் சங்கம் இணைந்து மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நேற்று முன்தினம் நடத்தின. (இ-7)

# சின்னத்திரை நடிகைகள் உட்பட 17 பேர் போதைப்பொருளுடன் களியாட்ட விடுதியில் கைது!

(மாத்தறை)

சின்னத்திரை நடிகைகள் உட்பட 17 பேர் போதைப் பொருட்களுடன் மாத்தறை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தறை, பொல்ஹேனவிலுள்ள களியாட்ட விடுதியொன்றில் வைத்தே குறித்த 17 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து கொக்கெய்ன் போதைப் பொருள் மற்றும் போதை மாத்திரைகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் சின்னத்திரை நடிகைகள் 3 பேர் அடங்குவதாகவும் ஏனையவர்கள் ஆண்களெனவும் பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. இச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (இ-7)

# நிர்வாகத் தெரிவு


(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பிரம்படி சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் அண்மையில் தலைவர் இ.செல்வராஜா தலைமையில் நடைபெற்றது.

இதில் ஓய்வுபெற்ற கணக்காளர் இ.செல்வராஜா தலைவராகவும் ஓய்வுபெற்ற வைத்தியசாலை உத்தியோகத்தர் மு.ஈழத்தமிழ்மணி செயலாளராகவும் ஓய்வு பெற்ற பல்கலை. உத்தியோகத்தர் சி. ஜெயக்குமார் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். (5)

# இரண்டு பேருந்துகள் நேருக்கு நேர் மோதின

## பல்கலை.மாணவர்கள் 15 பேர் காயம்



(பதுளை)


பதுளை - இரத்தினபுரி பிரதான வீதியில் பெல்மடுல்ல பகுதியில் இரண்டு பேருந்துகள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் 15 பேர் காயமடைந்துள்ளனர்.

தனியார் பேருந்து ஒன்றும், சப்ரகமுவ பல்கலைக் கழகத்திற்கு மாணவர்களை ஏற்றிச் சென்ற பேருந்துமே நேற்று முன்தினம் இவ்வாறு விபத்திற்குள்ளாகியுள்ளன.

விபத்தில் பல்கலைக் கழக மாணவர்களே சிறு காயங்களுக்கு உள்ளான நிலையில், அவர்கள் பெல்மடுல்லை வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று அங்கிருந்து வெளியேறியதாகத் தெரியவருகிறது. (இ-7)

## பாராளுமன்றத்தில் சொத்துக்களுக்கு

# சேதம் விளைவித்த அனைவருக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல்



## அமைச்சர் கிரியெல்ல உறுதி

(கண்டி)

பாராளுமன்றத்தில்பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்த அனைத்து உறுப்பினர்களுக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்வோம் என அமைச்சரும் சபை முதல்வருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.


கண்டி கலகெதர தேர்தல் தொகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இல்லாமலாக்குவது மற்றும் புதிய தேர்தல் முறைமை தொடர்பில் கட்சிகளுக்கு மத்தியில் இன்னும் இணக்கப்பாடு இல்லாமல் இருக்கின்றது. அதிகாரப் பரவலாக்கம் தொடர்பில் கட்சிகளுக்கிடையில் இணக்கப்பாடு இருப்பது. வழிநடத்தல் குழுவில் வெளிப்பட்டுள்ளது. அது தொடர்பான பிரேரணைகளை அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து சமர்ப்பிக்கும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பெண் அதிபருக்கு தொலைபேசியில் அச்சுறுத்தல் விடுத்த ஆளுநர் கீர்த்தி

(கொழும்பு)

தென் மாகாண ஆளுநர் கீர்த்தி தென்னகோன் மீது காலி சவுத்லென்ட் மகளிர் பாடசாலையின் பெண் அதிபர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.



ஆளுநர் தொலைபேசியில் தம்மை தூற்றி அச்சுறுத்தியதாக அவர் குறித்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

நான்கு மாணவிகளை பாடசாலையில் இணைத்துக் கொள்ளாமை தொடர்பில் ஆளுநர் தம்மை இவ்வாறு அச்சுறுத்தியதாக அவர் முறைப்பாடு செய்துள்ளார். (இ-7)

## மோ.சைக்கிள்கள் மோதி விபத்து



(சாவகச்சேரி)

சாவகச்சேரி -அரசடிச் சந்திப் பகுதியில் நேற்றுத் திங்கட்கிழமை காலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் காயமடைந்திருப்பதுடன், மோட்டார் சைக்கிள்களும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

தமோதரம் பிள்ளை வீதியில்இருந்து ஏ-9 வீதிக்கு சென்ற மோட்டார் சைக்கிளுடன்,ஏ-9 வீதியால்கொடிகாமம் நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் மோதியதில் இவ் விபத்து சம்பவித்துள்ளது. (இ-30)

# தனி இராச்சியம் அமைப்பதே தமிழ்க் கூட்டமைப்பின் திட்டம்

## வாசுதேவ கண்டுபிடிப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் இணைந்து ஜனநாயக நீரோட்டத்தில் செல்வதாக தெரிவிக்கின்ற போதும் தனி இராச்சியம் அமைக்கும் திட்டத்திலே இன்னும் உள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

சோசலிச மக்கள் முன்னணியினர் கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர். சம்பந்தன், வடமாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் போன்றவர்களின் தூண்டுதலிலே கண்காணிப்பாளர் ஒருவரை நியமிக்கவேண்டும் என்ற கோரிக்கையை மனித உரிமை பேரவையில் தெரிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

ஐக்கிய நாடுகளின் கண்காணிப்பு அதிகாரி ஒருவரை நியமிப்பதானது எமது நாட்டின் சுயாட்சி, இறையாண்மையில் தலையிடும் செயலாகும். அதற்கு நாங்கள் ஒரு போதும் இடமளிக்க மாட்டோம்.



தமிழ் மக்களுக்கு பிரச்சினை இருக்கின்றது என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். அரசாங்கம் ஆட்சிக்கு வரும்போது தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும் என்று வாக்குறுதி அளித்திருந்தது.

அதனை அரசாங்கம் நிறைவேற்ற தவறியுள்ளது. அதற்காக இந்த பிரச்சினையை தீர்க்க நாட்டின் இறையாண்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வெளிநாட்டு தலையீடுகளை அனுமதிக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## கே.டி.லால்காந்தவிடம் விளக்கம் கோரப்படும்

### ஜே.வி.பி.செயலர் ரில்வின்



(பதுளை)

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தமது கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் கே.டி.லால்காந்த பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னர் அவருடன் கலந்துரையாட எதிர்பார்த்துள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

பதுளையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதில் வழங்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வாகன விபத்தை ஏற்படுத்தியமை தொடர்பில் கே.டி லால்காந்த கடந்த முதலாம் திகதி கைது செய்யப்பட்டு எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

விபத்து ஏற்படும் போது அவர் மதுபோதையில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.(இ-7)

## வரவு - செலவுத் திட்டத்திற்கு எதிராகவே வாக்களிப்போம்

### பந்துல திட்டவட்டம்

அரசாங்கத்தினால் இன்று சமர்ப்பிக்கப்படவுள்ள 2019 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களிக்கத் தீர்மானித்துள்ளதாக மகிந்த அணி பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அரசாங்கத்தின் செயற்பாடுகளால் வீழ்ச்சியடைந்துள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை மீளவும் கட்டியெழுப்பும் வகையிலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.



அத்தகைய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதன் ஊடாக மாத்திரமே மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும்.

அத்தகைய தீர்வுகள் எவையுமற்ற, வரிச்சுமையை மாத்திரம் அதிகரித்துள்ள இந்த புதிய வரவு- செலவுத்திட்டத்திற்கு எதிராக நாங்கள் வாக்களிப்போம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வரவு-செலவுத்திட்டம் தொடர்பில் கருத்து வெளியிடும் வகையில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பந்துல மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## ரத்கம வர்த்தகர்கள் கொலை

## கைதான பொலிஸ் அதிகாரியை தடுத்து வைத்து விசாரிக்க அனுமதி

(ரத்கம)

காலி - ரத்கம வர்த்தகர்கள் கொலையையடுத்து தலைமறைவாகியிருந்த நிலையில், கைது செய்யப்பட்ட தென்மாகாண விசேட சுற்றி வளைப்பு பிரிவின் பொலிஸ் அதிகாரியை தடுத்து வைத்து விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அவர் காலி நீதவான் முன் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே, நீதவான் குறித்த அனுமதியை வழங்கியுள்ளார்.

தலைமறைவாகியிருந்த நிலையில், குறித்த பொலிஸ் அதிகாரி அண்மையில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் சரணடைந்த போது, கைது செய்யப்பட்டார்.

இதேவேளை, குறித்த வர்த்தகர்கள் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில், நேற்று முன்தினம் வனவளத்துறை அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந் நிலையில் அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு அமைய, குறித்தவர்த்தகர்களுடைய தொலைபேசிகள் இரண்டு திக்வெல்ல பிரதேசத்தில் உள்ள வனப்பகுதியின் நீர்நிலை ஒன்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. (இ-7)

## இலங்கை - பங்களாதேஷ் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கும் - பங்களாதேஷிற்கும் இடையிலான உத்தேச சுதந்திர வர்த்தக உடன்படிக்கை எதிர் காலத்தில் பொருளாதார ஒத்துழைப்பு வலுப்பெற வழிவகுக்குமென இலங்கை, பங்களாதேஷ் வர்த்தகப் பேரவையின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள ரேணுகா ஜயமான்ன தெரிவித்துள்ளார்.

இந்தப் பேரவையின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இலங்கையும் பங்களா தேஷும் 45 வருட கால இராஜதந்திர உறவுகளைப் பேணியுள்ளன. இது பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்த வழிவகுத்துள்ளது என ரேணுகா ஜயமான்ன மேலும் தெரிவித்தார்.(இ-7)

## “ஒரு வாக்கு 5000 ரூபாவுக்கு விற்பனை”

## கட்சிகளின் நிதியறிக்கைகள் தேர்தல்கள் ஆணைக்குழு இணையத்தில் வெளியீடு

(கொழும்பு)

அனைத்து அரசியல் கட்சிகளின் நிதியறிக்கைகள் தேர்தல்கள் திணைக்களத்தால் வெளியிடப்படவுள்ளது.

கட்சிகளின் நிதியறிக்கைகள் யாப்பு மற்றும் விஞ்ஞாபனங்கள் என்பன தேர்தல்கள் திணைக்கள இணையத்தளத்தில் அடுத்த வாரம் முதல் பதிவிடப்படவுள்ளன.

இந்தத் தகவல்களை தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் மகிந்த தேசப்பிரிய நீர்கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் போது தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான அறிவித்தல்கள் அனைத்துக்கட்சிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கட்சிகளின் நிதியறிக்கைகள் மார்ச் 31 ஆம் திகதி 2018 இல் முடிவடைந்த அடிப்படையில் வெளியிடப்படவுள்ளன.

இலங்கை போன்ற நாடுகளில் நிதி முகாமைத்துவம் அவசியமானது என்று குறிப்பிட்டுள்ள மகிந்த தேசப்பிரிய, இலங்கையின் வாக்காளர்கள் தமது வாக்குகளை இலகுவாக விற்பனை செய்து வருவதாகவும் தெரிவித்தார்.

அண்மைக்காலத்தில் ஒரு வாக்குசீட்டு 5000 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

நடைமுறையில் அதிக பணம் இருக்குமானால் உள்ளூராட்சி தேர்தல்களில் வெற்றி பெறுவது பெரிய காரியமல்ல என்றும் தேசப்பிரிய தெரிவித்தார். (இ-7)

## போதைப்பொருள் வர்த்தகர்களை உள்ளே வைத்துக்கொண்டு வெளியில் தேடும் அரசு-அநுர

(கொழும்பு)

போதைப்பொருள் வர்த்தகர்களை அரசாங்கத்திற்குள் வைத்துக் கொண்டு, வெளியில் தேடுவதாக, ஜே.வி.பி.யின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அக்கரப்பத்தனை பசுமலை பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றை அடுத்து ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

20ஆவது திருத்த சட்டம் நிறைவேற்றப்பட்டால், நாடாளுமன்ற ஆட்சிக்கால நிறைவுக்கு முன்பாகவே பொது தேர்தல் ஒன்றை நடத்த வாய்ப்புள்ளதாக தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தின் ஆட்சிக்காலம் எதிர்வரும் 2020 செப்டம்பர் மாதம் 2 ஆம் திகதியே நிறைவடையவுள்ளது.



இந்நிலையில், 20 ஆவது திருத்த சட்டம் குறித்து அறிவற்றவர்கள், ஜே.வி.பியின் நடவடிக்கை மீது குறை கூறி வருகின்றனர் என அவர் தெரிவித்தார்.

20ஆவது அரசியலைப்பு திருத்த சட்டம் ஒன்றை கொண்டு வரும் அதே சமயத்தில், இதனூடாக அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையில் மாற்றம் ஒன்று கொண்டு வரப்படும் என்றால் அதனை மக்கள் விடுதலை முன்னணி முன்னின்று ஆதரிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

186



“வண்ணார்பண்ணை வெஸ்லியன் மிஷன் ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் அமைக்கப் பட்ட யாழ்ப்பாண இலக்கியச் சங்கம் (1852) முதலாவதாக இருந்திருக்கக் கூடும்சமூகம் முழுவதற்கும் அறிவைப் பரப்புவதற்கான வசதி களை அளிப்பதே இச்சங்கத் தின் குறிக்கோளாக இருந்தது. வண்ணார்பண்ணையில் 12, ஏப்ரல் 1898 இல் சைவப்பிரகாச வித்தியாலயத்தைச் சேர்ந்த தமிழ் அறிஞர்களால் உருவாக்கப்பட்ட தமிழ்ச் சங்கம் வேறொரு முக்கிய அமைப்பாக இருந்தது”

## தமிழரின் விழிப்புணர்வும் எழுச்சியும் சமயம், பண்பாடு, மொழி சமூகம், பொருளாதாரம் (கி.பி. 1850-கி.பி. 1900)

ஒரு சைவ ஆங்கிலப் பாடசாலையையும் ஒரு பத்திரிகையையும் நிறுவவேண்டுமென்ற நாவலரின் கனவை நாம் மீண்டும் கவனத்திற்கு எடுப்பது பயனுள்ளதாகும். நாவலர் தனது நாட்குறிப்பில் இந்தத் திட்டங்களையிட்டுக் குறித்திருந்தார் எனக் கைலாசபிள்ளை தனது நூலில் குறிப் பிடுகின்றார். இப்போது அது சைவ பரிபாலன சபையின் ஆதரவில் நிச்சயமாக நிறைவேறியிருந்தன.

இச்சபை தனது நோக்கங்களான சமயம், கலாசாரம், கல்வி ஆகிய குறிக்கோள்களுடன் சமூகத்தை ஒட்டுமொத்தமாக உள்ளடக்கிய சமுதாய, அரசியல் நலன்களையும் பின்னர் தன்னுடன் இணைத்துக்கொண்டது.

தமிழ்ச் சமூகமானது தனது முந்தைய சமய, கலாசார அக்கறைகளிலிருந்து இப்போது சமூக, அரசியல் சுயவுணர்வு சார்ந்த எண்ணங்களில் கவனத்தைத் திருப்பலாயிற்று.

தமிழ் உயர் மட்டத்தினர் இந்த மாற்றத்திற்கு இசையத் தொடங்கியமை சமூகத்தில் நிகழ்ந்ததொரு முக்கியமான திருப்பத்தைக் காட்டுகின்றது. இச்சபை சைவசமயத்தைச் சேராதவர்கள் மற்றும் சமூகத்தின் பெரும் பகுதியினர் எல்லோரிடமும் சமய எல்லைகளைக் கடந்து தனது திட்டங்களை நிறைவேற்றுவதற்கான நிதியைத் திரட்டும் வேண்டுகோளை தமிழ்ச் சமூகம் முழுவதையுமே தழுவுமளவுக்கு விடுவித்தது.

பத்தொன்பதாவது நூற்றாண்டின் இறுதியிலிருந்து கிறிஸ்தவ உயர் மட்டத்தினரும் கிறிஸ்தவ தமிழ்ச் சமூகமும் இந்து சைவத் தமிழர்களுடன் இணைந்து தமிழ்க் கல்வியையும் தமிழ் அரசியலையும் முன்னெடுப்பதற்காக தமது ஆதரவை அளித்தனர் என்பதையும் இந்நிகழ்வு குறிக்கின்றது.

உதாரணமாகப் பெரும் எண்ணிக்கையிலான செல்வாக்கு மிக்க இந்துக்கள், தாமும் பல்வேறு நிறுவனங்களில் அங்கத்தவர்களாகச் சேர்ந்து அதன்வழி சபையின் கொள்கை உருவாக்கத்திலும் நிர்வாகத்திலும் பங்குகொள்ள வேண்டுமென்ற அவர்களின் கோரிக்கை அதிகரித்ததன் காரணமாக 9, ஒக்டோபர் 1898 இல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபத்தில் சைவபரிபாலன சபை கூட்டமொன்றை நடத்தியது.

இது மேற்கொண்ட விடயங்களின் வெற்றி, தோல்வி இந்து சமுத்திரத்தில் மட்டுமன்றி, சாதி, மத பேதமின்றி ஒரு தேசியம் என்ற வகையில் தமிழர் அனைவர் மீதும் பிரதிபலிக்கவே செய்யும்.

சபைக்கு ஆற்றவேண்டிய கடமையுணர்வு இந்துக்களுக்கு இருப்பது மட்டுமன்றி பல கிறிஸ்தவ கனவான்களுடைய ஆதரவையும் பெற்றிருப்பதை அறிந்து நாம் மகிழ்ச்சி அடைகின்றோம். அவர்கள் சபை இது வரை ஆற்றிய சேவையை பரந்த மனப்பான்மையுடனும் தேசிய கண்ணோட்டத்துடனும் பார்க்கின்றனர்.

சுருக்கமாக இக்கூற்று தமிழர்களை இந்துக்களாக (இதன் வழி கிறிஸ்தவர்களையும் அவர்களது மதத்தையும் புறந்தள்ளி) மட்டுமே கருதாது. தேசிய கண்ணோட்டத்தோடு எல்லாத் தமிழரையும் தன்னுள் ஒன்றிணைத்துக் கொண்டதாகவே கருத்திற் கொள்கின்றது.

முன்னர் காணப்படாத ஒரு பரந்த தளத்தை அடிப்படையாகக் கொண்ட தமிழுணர்வை சபையானது மேம்படுத்திப் பிரதிபலித்தது என்று கூறலாம். தமிழத்துவம் என்ற இந்த உணர்வே இலங்கைத் தமிழ்த் தேசியவாதம் தோன்றுவதற்கு ஊக்கசக்தியாகச் செயற்பட்டது.

சைவபரிபாலன சபை இப் பரந்த கண்ணோட்டத்தை உருவாக்கியதும் மேலும் அதிகமான மக்கள் இதன் செயற்பாடுகளில் பங்கெடுக்கும் வண்ணம் தீபகற்பத்திலும் ஏனைய தமிழ்ப் பிரதேசங்களிலும் சபையின் கிளைகள் நிறுவப்பட்டன.

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலையில் சைவபரிபாலன சபையின் கிளையொன்று அமைக்கப்பட்டதையும் அதேபோன்று 1893 இல் கொழும்பில் ஒரு கிளை அமைக்கப்பட்டதையும் இந்து ஒகன் தெரிவிக்கின்றது.

எனவே சைவபரிபாலன சபை·அதன் ஆரம்பத்திலிருந்தே தமிழர் மத்தியில் மிகவும் பிரதானமானதும் வலிமை மிக்கதுமான சக்தியாகியிருந்தது தெளிவாகின்றது.

சமயம், கலாசாரம், கல்வி, சமூகம்; பொருளாதாரம் ஆகிய விடயங்களில் அது முழுத் தமிழர் சமூகத்தினதும் சார்பில் ஈடுபட்டு தமிழ்த் தேசியவாதம் உருவாவதில் முக்கியமான பங்கை வகித்தது.


மேற்குறிப்பிட்ட இந்த அமைப்புக்களை விட தமிழிலக்கியத்தை முன்னெடுப்பதற்கும் அறிவைப் பரப்புவதற்கும் மக்களை அறிவு ரீதியாகவும் ஒழுக்க ரீதியாகவும் தூண்டுவதற்கும் வேறு இலக்கிய அமைப்புக்களும் உருவாக்கப்பட்டன. இவ்வகையில் வண்ணார்பண்ணை வெஸ்லியன் மிஷன் ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் அமைக்கப்பட்ட யாழ்ப்பாண இலக்கியச் சங்கம் (1852) முதலாவதாக இருந்திருக்கக் கூடும்.

சமூகம் முழுவதற்கும் அறிவைப் பரப்புவதற்கான வசதிகளை அளிப்பதே இச்சங்கத்தின் குறிக்கோளாக இருந்தது. வண்ணார்பண்ணையில் 12, ஏப்ரல் 1898 இல் சைவப் பிரகாச வித்தியாலயத்தைச் சேர்ந்த தமிழ் அறிஞர்களால் உருவாக்கப்பட்ட தமிழ்ச் சங்கம் வேறொரு முக்கிய அமைப்பாக இருந்தது.

(தொடரும்)

# கேரளக் கஞ்சாவுடன் ரத்கமவில் இருவர் கைது





(ரத்கம)

ரத்கம பிரதேசத்தில் கடற்படை அதிகாரிகள் மற்றும் பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது 1.76 கிலோ கிராம் கேரளக் கஞ்சாவுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் 30 மற்றும் 21 வயதுடைய தொடந்துவ மற்றும் முகத்துவாரம் பகுதியைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

அத்துடன் அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டதுடன், இது தொடர்பான விசாரணைகளை ரத்கம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)


# அபிநந்தன் உடலில் பாகிஸ்தான் அதிகாரிகள் உளவறியும் கருவிகள் எதையும் பொருத்தவில்லை

## மருத்துவ அறிக்கையில் தகவல்

(டில்லி)

அபிநந்தன் உடலில் பாகிஸ்தான் அதிகாரிகள் உளவறியும் கருவிகளை பொருத்தி அனுப்பினார்களா? என்ற கேள்விக்கு அவருக்கு எடுக்கப்பட்ட எம்.ஆர்.ஐ. ஸ்கான் மூலம் பதில் கிடைத்துள்ளது. பாகிஸ்தானில் கைது செய்யப்பட்ட இந்திய விமானி அபிநந்தன் இந்திய அதிகாரிகளிடம் உரிய முறையில் ஒப்படைக்கப்பட்டார்.

இந்திய விமானப்படை தளபதி தனோவாவை சந்தித்து பாகிஸ்தானில் தனக்கு நேர்ந்தது பற்றி விங் கொமாண்டர் அபிநந்தன் விளக்கம் அளித்தார். அதைத் தொடர்ந்து, டில்லி இராணுவ வைத்தியசாலையில் பரிசோதனைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.



டில்லி இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள அபிநந்தனை பாதுகாப்புத்துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் சந்தித்து நலம் விசாரித்தார். அவரது குடும்பத்தினரையும் சந்தித்துப் பேசினார்.

இதற்கிடையில், பாகிஸ்தானிடம் சிக்கிய விமானப் படை வீரர் அபிநந்தன், தன்மீது அந்நாட்டு இராணுவத்தினர் உடல்ரீதியாக தாக்குதல் நடத்தவில்லை. ஆனால், மனரீதியாக நான் மிகவும் துன்புறுத்தப்பட்டேன் என தெரிவித்ததாக செய்திகள் வந்தன.

பாகிஸ்தான் உளவுத் துறையினர் அபிநந்தனின் உடலில் உளவு பார்க்கும் கருவி ஏதேனும் பொருத்தி அனுப்பியிருக்கலாம் என்ற யூகச்செய்திகளும் சில ஊடகங்களில் வெளியாகின.

இந்நிலையில் டில்லி இராணுவ வைத்தியசாலையில் அவருக்கு எடுக்கப்பட்ட எம்.ஆர்.ஐ. ஸ்கான் முடிவுகளின்படி அபிநந்தனின் உடலில் உளவு பார்க்கும் கருவி ஏதும் பொருத்தப்படவில்லை. ஆனால், அவரது முதுகுத்தண்டு எலும்பின் கீழ்ப் பகுதியில் ஒரு காயம் ஏற்பட்டுள்ளதாக வைத்திய சாலை வட்டாரங்கள் நேற்று தெரிவித்துள்ளன. (7)



யா/மட்டுவில் கமலாசினி மகா வித்தியாலய மாணவர்கள் 20 பேருக்கு பாதணிகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் அதிபர் ஐ.தேவராஜன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மீசாலை வடக்கைச் சேர்ந்த சிவதர்மசுந்தரம் பால்ராஜ் என்பவரினால் வழங்கப்பட்ட பாதணிகளை அவரது சகோதரன் சிவதர்மசுந்தரம் கிசோ வழங்கினார்.

# அநுராதபுரம் வைத்தியசாலையில் 64 இலட்சம் ரூபாய் கொள்ளை

## மூன்று பொலிஸ் குழுக்கள் நியமனம்

(அநுராதபுரம்)

அநுராதபுரம்பொது வைத்தியசாலையில் சுமார் 64 இலட்சம் ரூபாய் கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்காக மூன்று பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

வைத்தியசாலை வளாகத்தில் பாதுகாப்பு கமராக்கள் பொருத்தப்படாமை, விசாரணைகளுக்கு பாதிப்பாக அமைந்துள்ளதாக உயர் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம்பொது வைத்தியசாலையின் நிர்வாகக் கட்டடத்தில் இருந்த பாதுகாப்பு பெட்டகம் உடைக்கப்பட்டு அதிலிருந்து சுமார் 64 இலட்சம் ரூபாய் கொள்ளையிடப்பட்-டிருந்தது.

இந்தக் கொள்ளை சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றுள்ளதோடு, பின்னர் கொள்ளையர்கள் அந்தக் கட்டடத்தில் இருந்த சில ஆவணங்களையும் தீயிட்டு எரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1661

### கயல்

அன்பை உள்ளே வைத்துக்கொண்டு எதிரியைப் போலத் தெரியும் ஒரே உறவு அப்பா



### சேகர்

இங்கு யாருமே அடுத்தவர்களின் பரிதாபத்திற்கு ஆசைப்பட்டு அழுவதில்லை... பிடித்தவர்களின் மீதான பாசத்திற்கு கட்டுப்பட்டே அழுகிறார்கள்



### அன்பு

யாரோ ஒருவரின் நிராகரிப்புக்காக வருந்தாதீர்கள்... துணிக்கடைகளில் பல மனிதர்களால் நிராகரிக்கப்பட்ட ஓர் ஆடை யாரோ ஒருவரால் விரும்பி அணியப்படுகிறது



### ராணி

சிலருக்கு சில நேரங்களுக்காக மட்டுமே சில மனிதர்கள் தேவைப்படுகிறார்கள்



### முகிலன்

கோபப்படுவது உண்மையான அன்பு அதற்காக பிரிவது என்றால் அது விலகுவதற்கான முன் ஏற்பாடு



### கேசவன்

அம்மாவின் வயிற்று கருவறை பாக்கியமும் அப்பாவின் மார்பின் கருவறை பாக்கியமும் வாழ்நாளில் என்றுமே தீர்க்க முடியாத கடன்கள்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தேசிய உடை அணியக்கூடிய ஒருவரே ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்படுவார்

## குமார வெல்கம திட்டவட்டம்



(களுத்துறை)

எதிர்வரும் காலங்களில் ஜனாதிபதித் தேர்தலொன்று நாட்டில் நடத்தப்படுமாயின் அதில் தேசிய உடை அணியக்கூடிய ஒருவரே நிச்சயம் தெரிவு செய்யப்படுவாரென ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

களுத்துறைப் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே குமார வெல்கம மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் அஞ்சுவதாகவும் இதற்குக் காரணம் அரசாங்கத்தின் மீது மக்கள் விரக்தியில் உள்ளனர். இந்நிலையில் தேர்தலை நடத்தினால் தோல்வியை சந்திக்க நேரிடும் என்ற அச்சம் அரசுக்கு ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# காணாமல் போனோருக்கான பணியக பிராந்திய கிளை மாத்தறையில் திறப்பு

(மாத்தறை)

காணாமல் போனோருக்கான பணியகத்தின் முதலாவது பிராந்திய கிளைச் செயலகம், மாத்தறையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அளித்த வாக்குறுதிக்கு அமைய, நிலைமாறு கால நீதிப்பொறிமுறைகளை உருவாக்கும் செயற்றிட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு, காணாமல் போனோருக்கான செயலகத்தை உருவாக்கியது.

இந்தச் செயலகம், வடக்கு, கிழக்கின் எட்டு மாவட்டங்களிலும், தென்பகுதியிலுமாக, மொத்தம் 12 கிளைச் செயலகங்களை அமைக்கவுள்ளதாக அதன் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்தார். இந்த நிலையில் முதலாவது கிளைச் செயலகம் மாத்தறையில் திறந்து வைக்கப்பட்டது. இதனை சபாநாயகர் கரு ஜயசூரிய திறந்து வைத்தார்.

அதேவேளை, இன்னொரு கிளைச்செயலகம், மன்னாரில் இந்த மாதம் திறந்து வைக்கப்படவுள்ளது.

காணாமல் போனோருக்கான செயலகம் உருவாக்கப்பட்டு ஒரு ஆண்டு கடந்தும், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு காணவில்லை என்று குற்றச்சாட்டுகள் சுமத்தப்படும் நிலையில், இந்தக் கிளைச் செயலகங்கள் அமைக்கப்படும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (இ-7)

# 118 நாடுகளில், இலங்கைக்கு முதலிடத்தை பெற்றுக்கொடுத்த 5 வயதுச் சிறுவன்; சிறந்த சித்திர கலைஞராகக் கௌரவிப்பு





(கொழும்பு)

உலகிலேயே சிறந்த சித்திர கலைஞராக இலங்கையைச் சேர்ந்த 5 வயதுச் சிறுவன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பத்தரமுல்லை, பெலவத்தையில் அமைந்துள்ள பாடசாலையொன்றில் கற்கும் தினுக டி சில்வா என்ற மாணவனே இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

உலக உணவு தினத்தை முன்னிட்டு கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் நடத்தப்பட்ட சித்திர போட்டியில் இலங்கையைச் சேர்ந்த குறித்த சிறுவன் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

ஐக்கிய நாடுகள் உணவு தொடர்பான அமைப்பினால் ஒவ்வொரு வருடமும் இந்த போட்டி நடத்தப்படுகின்றது. "எங்கள் செயற்பாடு எங்கள் எதிர்காலம்" 2030 ஆம் ஆண்டில் பசியை வெற்றி கொள்ள உலகை உருவாக்குதல் என்ற தலைப்பில் இந்த சித்திரப் போட்டி நடத்தப்பட்டது.

கடந்த வருடம் இடம்பெற்ற இந்த போட்டியில் 118 நாடுகளில் இருந்து 8000 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன.

இதில், 5 - 8 வயதுக்கு உட்பட 118 நாடுகளின் போட்டியாளர்களில் இலங்கைச் சிறுவன் முதலிடத்தைப் பெற்றுள்ளார். பழங்கள், மரக்கறிகள் மற்றும் விதை வகைகள், முகில்கள் ஊடாக பூமிக்கு விழுவதனை வெளிப்படுத்தும் வகையில், இலங்கைச் சிறுவன் படத்தை வரைந்திருந்தமை முக்கிய அம்சமாகும்.

குறித்த சிறுவன் முழு இலங்கைக்கும் பெருமை தேடித் தந்துள்ளதாக கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட இலங்கை - மாலைதீவு தூதுவர் தெரிவித்துள்ளார்.

இந்த வெற்றியை சிறிதும் எதிர்பார்க்கவில்லை எனவும், தங்களுக்கு இது மிகப்பெரிய பெருமைக்குரிய விடயம் எனவும் சிறுவனின் தாயார் தெரிவித்துள்ளார். (இ-7)

# இடைக்கால அறிக்கையின் பரிந்துரைகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டும்

## சாலிய பீரிஸ் கோரிக்கை



(கொழும்பு)

காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தில், இடைக்கால அறிக்கையின் பரிந்துரைகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

காணாமலாக்கப்பட்டோருக்கான பணியகத்தின் தலைவர் கலாநிதி சாலிய பீரிஸ் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயத்தில் இடைக்கால நிவாரண நடவடிக்கைகள் தொடர்பாக, பணியகத்தின் இடைக்கால அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது.

கடத்தல்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய குற்றங்களுடன் தொடர்புபட்ட குற்றவியல் நடவடிக்கைகளில் சந்தேக நபர்களாக பெயரிடப்பட்ட அரசாங்க அதிகாரிகளை பணியில் இருந்து இடைநிறுத்துவது தொடர்பான பரிந்துரைகள் அந்த அறிக்கையில் முன்வைக்கப்பட்டிருந்தன.

ஒரு நாடு என்ற வகையில், உண்மை, நீதியை வழங்குதல், காணாமல் போனோரின் குடும்பங்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுத்தல் எமது கடமையாகும்.

அந்தவகையில் இந்த இடைக்கால அறிக்கையிலுள்ள பரிந்துரைகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

காணாமல் போனோருக்கான பணியகம் உருவாக்கப்பட்டு ஆறு மாதங்களில், கடந்த 2018 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம், இடைக்கால அறிக்கையை ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# செய்தித்துளிகள்

## 20வது திருத்தத்திற்கு ஒருபோதும் ஆதரவளிக்க மாட்டோம்-நாமல்



(கொழும்பு)

ஜே.வி.பி.யின் தனிப்பட்ட விருப்புக்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக கொண்டுவரப்படும் 20 ஆவது அரசியலமைப்பு திருத்தத்திற்கு நாம் ஒருபோதும் ஆதரவளிக்கப் போவதில்லை என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஆனால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் ஏனைய கட்சிகளின் தலைவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து 20 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டால், அதற்கு ஆதரவளிக்க நாம் தயாராகவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## மனைவியை மண்வெட்டியால் கொடூரமாக தாக்கிய கணவன்

(வெலிகம)

மனைவியை மண்வெட்டியால் தாக்கிய கணவன் தொடர்பில் வெலிகம பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்த பெண், காலி கராபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கணவனுக்கும் மனைவிக்கும் இடையே ஏற்பட்ட வாய்த்தகராறு அதிகரித்த நிலையில், வீட்டுக்குப் பின்னால் இருந்த மண்வெட்டியால் மனைவியைக் கணவன் கொடூரமாகத் தாக்கியுள்ளார்.

தாக்குதலை மேற்கொண்ட நபர், அப்பகுதியிலிருந்து தப்பிச் சென்றுள்ள நிலையில், பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## மதூஷிடம் வாக்குமூலம் பெறும் வாய்ப்பைக் கோரியுள்ள சி.ஐ.டி



(கொழும்பு)


டுபாய் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மாகந்துரே மதூஷ் உள்ளிட்ட 31 பேரிடமும் வாக்குமூலத்தைப் பெறுவதற்கான சந்தர்ப்பம் ஒன்றை வழங்குமாறு குற்றப்புலனாய்வுப் பிரிவினர் சர்வதேச பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இலங்கையில் அமைந்துள்ள சர்வதேச பொலிஸ் அலுவலகம் ஊடாக டுபாயிலுள்ள சர்வதேச பொலிஸ் அலுவலகத்துக்கு இந்தக் கோரிக்கை அனுப்பப்பட்டுள்ளது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 85 | 120 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 200 | 200 |
| தக்காளி | 60 | 60 | 30 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 100 | 80 | 80 |
| கோவா | 60 | 40 | 50 | 60 |
| கரட் | 100 | 80 | 80 | 140 |
| பூசணி | 50 | 25 | 30 | 40 |
| புடோல் | 80 | 50 | 70 | 80 |
| வாழைக்காய் | 80 | 70 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 60 | 80 | 90 | 80 |
| பெரிய வெங்காயம் | 80 | 70 | 60 | 80 |
| பாகற்காய் | 140 | 120 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 40 | 80 |
| பயற்றங்காய் | 160 | 200 | 80 | 120 |
| லீக்ஸ் | 100 | 100 | 70 | 120 |
| பீற்றூட் | 60 | 60 | 30 | 60 |
| கறிமிளகாய் | 100 | 120 | 95 | 120 |
| முருங்கைக்காய் | 450 | 500 | 300 | 400 |
| போஞ்சி | 140 | 100 | 70 | 120 |
| கத்தரிதம்புள்ள | 100 | 70 | 60 | 100 |
| கீரை-1பிடி | 40 | 30 | 20 | 30 |
| தேசிக்காய் | 100 | 80 | 55 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 150 | 140 | 100 | 120 |
| வெங்காயப்பூ | 100 | 70 | 80 | 120 |
| முள்ளங்கி | 60 | 50 | 30 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 20 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 15 | 30 |
| ஈரப்பலா | 50 | — | 100 | 80 |




# காடுகளைப் பாதுகாப்போம்



அது ஒரு அடர்ந்த காடு, அந்த காட்டிலே எல்லா மிருகங்களும் அமைதியாக வாழ்ந்து கொண்டிருந்தன. புலி, சிங்கம் போன்றவைகள் கூட அதனதன் இடங்களில் வாழ்ந்து வந்து கொண்டிருந்தன.

கொஞ்ச நாட்களாக மனிதர்கள் கூட்டம் கூட்டமாக காட்டுக்குள் வருவதும் போவதுமாக இருந்து கொண்டிருந்தனர். இதனால் அமைதியாக இருந்த காடு இவர்களின் வருகையால் நிம்மதி இழந்து தவித்துக்கொண்டிருந்தது.

இது இப்படி இருக்க ஒவ்வொரு விலங்குகள் கூட்டத்திலும் நிறைய விலங்குகள் காணாமல் போகத் தொடங்கின. மான் கூட்டத்திலும், வரிக்குதிரை கூட்டத்திலும், ஏன் யானைகள் கூட சத்தமில்லாமல் காணாமல் போயின. இந்த விலங்குகளின் எலும்புகள் கூட அந்த காட்டில் காணப்படவில்லை.

அங்குள்ள சாதுவான விலங்குகள் அனைத்தும் சிங்கத்தின் மீது சந்தேகம் கொண்டன. சிங்கம்தான் அத்தனை விலங்குகளையும் தன்னுடைய குகைக்குள் கொண்டு போய் அடித்துச் சாப்பிட்டு விடுகின்றது என முடிவு செய்தன. இதனால் எப்படியாவது சிங்கத்திடம் விலங்குகளை கொல்வதை கைவிட வேண்டும் என்று கேட்பதற்கு முடிவு செய்தன. ஆனால் எப்படி கேட்பது? புலியாரை பார்க்கச் சென்றன. புலியார் சிங்கத்தின் அளவுக்கு பலசாலிதான் என்றாலும் இரண்டும் ஒன்றை ஒன்று சந்தித்துக் கொள்வதோ, மோதிக்கொள்வதோ இல்லை, அவைகள் தனித்தனியாக தங்கள் பாதையில் சென்று கொண்டிருந்தன.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் புலியாரிடம் சென்ற மான் கூட்டங்கள் சிங்கம் தங்கள் இனத்தவரைக் கொன்று குவித்துக்கொண்டுள்ளது, அதை எப்படியாவது நிறுத்த வேண்டும் என்று கேட்டன. புலியார் அவர்களைப் பார்த்து இப்படிச் சொன்னது...சிங்கமும் சரி நானும் சரி, எங்களுக்கு பசிக்கும் போது தவிர பிற உயிர்களை மறந்தும் கொல்ல மாட்டோம், இது வேறு யாரோ செய்யும் சதி, அநாவசியமாய் சிங்கத்தின் மீது சந்தேகம் கொள்ளாதீர்கள் என்று அறிவுரை சொன்னது. ஆனால் மான்களோ, மற்றவைகளோ அதை கேட்கும் மன நிலையில் இல்லை. ஆகவே சிங்கத்தை ஒழிக்க வேறு உபாயம் செய்யலாம் என்று முடிவு செய்து அங்கிருந்து சென்றன.

இது இப்படி இருக்க நரியார் சிங்கத்திடம் சென்று சாது விலங்குகள் யாவும் உம்மை ஒழிப்பதற்கு முயற்சிகள் செய்து கொண்டுள்ளன என்று கூறியது. சிங்கத்திற்கு ஒன்றும் புரியவில்லை, நான் என்ன தவறு செய்தேன்? என்று கேட்க நரியார் அவைகளின் இனங்கள், காட்டில் குறைந்து வருவதால் அவைகள் உங்களை சந்தேகப்படுகின்றன. சொன்னவுடன் சிங்கம் சற்று யோசித்து, இதற்கு நான் சீக்கிரம் தீர்வு காண்கிறேன் என்று மனதுக்குள் முடிவு செய்தது.

முதலில் நம் காட்டின் எல்லையை சுற்றி வர வேண்டும் என்று முடிவு செய்த சிங்கம் காட்டு எல்லை முழுவதும் சுற்றி வர ஆரம்பித்தது. சுற்றி வரும்பொழுது ஒரு சில இடங்களில் பெரிய பெரிய குழிகள் வெட்டப்பட்டிருப்பதையும் அந்த குழிகளின் அருகில் வரி வரியாய் வண்டித்தடங்களும் இருந்தன. மனித வாடைகளும் தென்பட்டன.

சிங்கத்திற்கு உண்மை புரியத் தொடங்கியது. இது மனிதர்களின் வேலை, இது தெரியாமல் என் மீது சந்தேகம் கொண்ட விலங்குகளை நினைத்து சிரித்துக் கொண்டது. மறுநாள் அனைத்து விலங்குகளையும் வர சொல்லி அவைகளை கூட்டிச்சென்று, அந்த இடங்களைக் கண்பித்தது.

இப்பொழுது என்ன செய்யலாம், மனிதர்களை இப்படியே விட்டால் எல்லா விலங்குகளையும் வேட்டையாடிக்கொண்டே இருப்பார்கள், அதேநேரத்தில் மனிதர்களை நாம் ஒன்றும் செய்ய முடியாது. அவர்கள் நம்மை விட பலசாலிகள், இவ்வாறு பல யோசனைகளுடன் கலந்தாலோசித்துக்கொண்டிருந்தன.

நரியார் மெல்ல முன் வந்து நான் ஒரு யோசனை சொல்கிறேன் என்றது.

அனைத்து விலங்குகளும் நரியைப் பார்க்க, நம்முடைய சிங்கம், புலி, கரடி, இவைகள், காட்டு எல்லையை விட்டு ஊர் எல்லைக்குள் நுழைய வேண்டும். சாதாரண விலங்குகள் நாம் சென்றோமென்றால்,. மக்கள் நம்மை அடித்துக் கொன்று விடுவார்கள், சிங்கம், புலி, கரடி போன்றவைகளுக்கு மனிதன் பயப்படுவான்.

மக்கள் காட்டுக்கு வேலி போட வேண்டும் என்று அரசாங்கத்தை வற்புறுத்த ஆரம்பிப்பார்கள், அரசாங்கம் அப்படி செய்ய வரும் போது இந்த கூட்டம் ஓடிப் போகலாம்.

அனைத்து விலங்குகளும் ஆமோதிக்க, மறுநாள் காலையில் ஊர் தெற்கு எல்லையில், நடந்து கொண்டிருந்த பலர் சிங்கத்தை பார்த்து விழுந்தடித்து ஓடினர்.


அதுபோல, வடக்கு ஊர் எல்லையில் புலி ஒன்று நின்று கொண்டிருப்பதை பார்த்த மக்கள் பயந்தடித்து ஓட ஆரம்பித்தனர். கிழக்கு எல்லையில் கரடியும் மேற்கு எல்லையில் யானைக்கூட்டமும் மக்களை பயமுறுத்த, மக்கள் அரசாங்கத்தை நோக்கி எங்களுக்கு பாதுகாப்பு கொடுங்கள் என்று கேட்க ஆரம்பித்து விட்டனர்.

வன பாதுகாவலர்களும் விலங்குகள் நல ஆர்வலர்களும், மனிதன் காட்டுக்குள் சென்று விலங்குகளை கொல்வதால் தான் இந்த பிரச்சினை வருகிறது என்று அரசாங்கத்திற்கு கடிதம் எழுதினர்.

அரசாங்கம் காட்டு எல்லைகளை வரையறை செய்ய ஆரம்பித்தது. அப்பொழுதுதான் தெரிந்தது, இந்த வேட்டைக்காரர்கள் கூட்டம் பெரிய பெரிய குழிகள் வெட்டி விலங்குகளை பிடிப்பதை கண்டு பிடித்தது. உடனே அவர்களை கைது செய்து எல்லைகளுக்கு பாதுகாப்பு போட்டு பலப்படுத்தியது.

இப்பொழுதெல்லாம் மனிதர்களும் விலங்குகளும் அவரவர் எல்லைக்குள் நிம்மதியாகவும் பாதுகாப்பாகவும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

## ஆனை ஆனை



ஆனை ஆனை அழகர் ஆனை
அழகரும் சொக்கரும் ஏறும் ஆனை
கட்டிக்கரும்பை முறிக்கும் ஆனை
காவேரி தண்ணீரை கலக்கும் ஆனை
குட்டி ஆனைக்குக் கொம்பு முளைச்சுதாம்
பட்டணமெல்லாம் பறந்தோடிப் போச்சுதாம்!

## பழமொழியும் விளக்கமும்

• பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க!

**பொருள்:-**

மணமான பின், பதினாறு குழந்தைகளைப் பெற்று வளமான வாழ்க்கை வாழ வேண்டும் என ஆசீர்வாதம் செய்வார்கள்.

**உண்மையான பொருள்:-**

வாழ்க்கையில் 16 வகையான செல்வங்களான உடலில் நோயின்மை, நல்ல கல்வி, தீதற்ற செல்வம், நிறைந்த தானியம்,ஒப்பற்ற அழகு, அழியாப் புகழ், சிறந்த பெருமை, சீரான இளமை, நுண்ணிய அறிவு, குழந்தைச் செல்வம், நல்ல வலிமை, மனத்தில் துணிவு, நீண்ட வாழ்நாள் (ஆயுள்), எடுத்த காரியத்தில் வெற்றி, நல்ல ஊழ் (விதி) மற்றும் இன்ப நுகர்ச்சி பெற்று வளமாக வாழுங்கள் என்று பொருள்.

• ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே!

**பொருள்:-**

நன்மை நடப்பதும், தீமை நடப்பதும் பெண்கள் கையில் தான் இருக்கிறது.

**உண்மையான பொருள்:-**

நன்மை நடப்பதும் தீமை அழிவதும் பெண்ணால் தான் நிகழ்கிறது என்று அர்த்தம் கொள்ள வேண்டும்.

தூய்மையான இதயம் கொண்டவர்கள் யாருடைய நம்பிக்கையையும் குலைக்கமாட்டார்கள்.

~ பகவான் இராமகிருஷ்ணர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சம்பந்தப்பட்டவர்களை சட்டத்தின்முன் நிறுத்துங்கள்

மன்னார் திருக்கேதீச்சரத்தில் அமைக்கப்பட்டிருந்த சிவராத்திரி வளைவை அடித்து உடைத்த சம்பவம் சைவமக்களை மட்டுமல்ல நீதி உணர்ந்த கத்தோலிக்க மக்களின் இதயங்களையும் நோகடித்துவிட்டது.

விரதங்களில் மிகவும் உன்னதமான விரதமாக சைவமக்கள் போற்றுகின்ற சிவராத்திரி விரத காலத்தில் சிவராத்திரி வளைவு அடித்து உடைத்து வீழ்த்தப்பட்டமையை அபச்சாரமாகப் பார்க்கின்ற நிலைமை சைவ மக்களை மேலும் வருத்தியுள்ளது.

சைவத் தமிழ் மக்கள் எந்தக் காலத்திலும் சமய பேதத்தை கொண்டிருந்தவர்கள் அல்ல.

இலங்கை சிவபூமி என்று போற்றப்பட்ட மண். ஈழத்தின் ஆதிச்சமயம் சைவ சமயம். இலங்கை வேந்தன் இராவணன் மிகச் சிறந்த சிவபக்தன்.

இவ்வாறான ஆதாரங்கள் பல இருப்பதனால் சைவ சமயத்துக்கே முன்னுரிமை வழங்கப்படவேண்டும் என்று சைவ சமயத்தவர்கள் ஒருபோதும் கேட்டதில்லை.

சைவ சமயம் என்பது பிற உயிர்க்குத் தீங்கு இழைக்காதது. எல்லாச் சமயங்களையும் மதிக்க வல்லது.

அதனால்தான் மன்னாரில் மடுமாதாவையும் மானிப்பாயில் அந்தோனியாரையும் அல்லைப்பிட்டியில் மாதாவையும் சைவ மக்கள் வழிபடுகின்றனர்.

தவிர, திருவாசகத்தின் பெருமையுணர்ந்த கத்தோலிக்க மதகுருமாரின் உன்னதப் பணியும் மறப்பதற்குரியதல்ல.

நிலைமை இதுவாக இருக்கையில், மன்னார் திருக்கேதீச்சரத்தில் தமிழர்களின் தொன்மையை சான்றுப்படுத்தும் பாடல் பெற்ற திருக்கேதீச்சரத் தலம் தனித்து சைவ மக்களின் வரலாற்றுப் பெருமையை எடுத்துக் காட்டுகின்ற சான்றாதாரம் மட்டுமல்ல. அது இலங்கை மண்ணில் தமிழ் மக்களின் பூர்வீகத்தை உறுதிப்படுத்தும் தலம்.

ஆக,மன்னார்திருக்கேதீச்சரத்தின்பெருமையை நிலைநிறுத்த கத்தோலிக்க மக்களும் பாடுபட வேண்டும்.

இதைக்கூறுவதற்குள் இரண்டு வலுவான கருத்துக்கள் உண்டு.

ஒன்று திருக்கேதீச்சரத் தலம் இந்த மண்ணை தமிழன் ஆண்டதற்கான தொன்மைச்சான்றாதாரம்.

இரண்டாவது இன்று கத்தோலிக்க மக்களாக இருக்கக்கூடியவர்களின் மூதாதையர்கள் சைவ சமயத்தவர்கள். அவர்கள் நம்பிக்கையோடு வழிபட்ட தலம் திருக்கேதீச்சரம்.

அதாவது அந்நியராட்சியில் சில பல காரணங்களால் கத்தோலிக்க மதத்தை தழுவியிருந்தாலும் நம் முந்தையர்கள் வழிபட்ட ஆலயத்துக்கு உரிய மதிப்பை செலுத்துவதென்பது நம் மூதாதையர்களுக்குச் செலுத்துகின்ற மரியாதையாகும்.

எனினும் மன்னார் திருக்கேதீச்சரத்தில் சிவராத்திரி வளைவை அடித்து உடைத்த செயல் என்பது ஒட்டுமொத்த கத்தோலிக்க மக்கள் சார்ந்த விடயமல்ல.

அது ஒரு சிறுகுழுமத்தின் செயல். அவர்களின் செயல் கத்தோலிக்க மக்களுக்கும் பெரும் வேதனையைக் கொடுத்துள்ளதென்பது மறுக்க முடியாத உண்மை.

அதேநேரம் எல்லாச் சமயங்களையும் மதிக்கின்ற - போற்றுகின்ற பெருந்தன்மை மிக்க கத்தோலிக்க மதகுருமார் பலர் நம் மத்தியில் உள்ளனர்.

எனவே ஒரு சில கத்தோலிக்க மதகுருமாரின் சைவசமய எதிர்ப்பை எவரும் பொதுமைப்படுத்திவிடக்கூடாது.

ஆகையால் சிவராத்திரி வளைவை அடித்து உடைத்து வீழ்த்துவதில் யார் சம்பந்தப்பட்டார்களோ அவர்களைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். அது ஒன்றுதான் மதவெறி பிடித்தவர்களின் ஈனச் செயல்களைத் தடுத்து நிறுத்தும்.

# சிவராத்திரி வளைவு உடைத்தமை சைவர்களை வேதனைக்கு உள்ளாக்கியுள்ளது

## சைவ மகா சபை கடும் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

திருக்கேதீச்சரம் சிவராத்திரி வளைவு உடைப்பு சைவத் தமிழர்களை கடும் வேதனைக்கும் விசனத்துக்கும் உள்ளாக்கியுள்ளது. உடனடியாக ஆயர் உள்ளிட்ட கிறிஸ்தவ மதத் தலைவர்களும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும் தலையிட்டு உடைத்த வளைவை மீள் நிர்மாணம் செய்து வழங்க வேண்டியது மத நல்லிணக்கத்திற்கான அத்தியாவசிய தேவைப்பாடாகும்.

சைவ மகா சபை ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில்மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பூர்வீக சைவ சமய வழிபாட்டு தலமும் தமிழர்களின் மரபுரிமை அடையாளமும் இலங்கை முழுதும் சைவர்கள் சிவராத்திரிக்கு ஒன்றுகூடும் உன்னத சிவத்தலத்தின் நாலா புறம் நந்திக் கொடிகளையும் இறை சிவனின் பதாகைகளையும் காட்சிப்படுத்தும் சைவத் தமிழர்களின் உரிமையை எவரும் கேள்விக்கு உள்ளாக்க முடியாது.

தமிழர் தாயகத்தின் இதர பகுதிகளில் சைவர்கள் எத்துணை பெருந்தன்மையுடன் ஒரு சில குடும்பம் வசித்தால் கூட அவர்களின் வழிபாட்டு உரிமைகளை மதிப்பதோடு வீதிதோறும் காட்சிப் படுத்தியுள்ள சொருபங்களை பெருமனதோடு கடந்து செல்வதை காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொண்டுள்ள சகோதரர்கள் இவர்களை பின்னால் இருந்து இயக்குபவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஆதலினால் இன்று ஏதிலிகளாக்கப்பட்டுள்ள மன்னார் சைவர்களின் வழிபாட்டு உரிமைக்கு ஏற்பட்டுள்ள பங்கம் நிவர்த்திக்கத் தவறும் பட்சத்தில் பூர்வீக சைவத் தமிழர்களின் மனக்காயம் வரலாற்றில் மனவடுவாக மாறும் அபாயம் தவிர்க்க முடியாதது ஆகிவிடும்.

ஆகவே சம்பந்தப்பட்ட தரப்புகள் உடனடியாக நல்லெண்ணத்தை செயலில் காட்டி சைவர்களின் உன்னத வழிபாட்டு நாளான சிவராத்திரியை சிறப்பாக அனுட்டிக்க உதவுமாறு சைவ மகா சபை வேண்டுகின்றது என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (3)

# ஜனாதிபதிக்கான ஒதுக்கீட்டை தடுக்க பிரதமர் ரணில் இணங்கமாட்டார்

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

2019ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ஜனாதிபதிக்கான ஒதுக்கீட்டை தடுக்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இணங்கமாட்டார் என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் ஒதுக்கீட்டை எதிர்க்கப் போவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ள நிலையில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட அவர், பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது இதனைத் தெரிவித்தார்.

அத்தோடு ஐக்கிய தேசிய கட்சி சார்பாக எந்தவொரு வேட்பாளர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டாலும், தமது தரப்பு வெற்றி பெறுவது நிச்சயம் எனவும் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு எதிர்வரும் நாட்களில் புதிதாக எந்தவொரு வாக்கும் அதிகரிக்கப்போவதில்லை எனவும் தெரிவித்தார். (3)

# மோ.சைக்கிள் - உழவு இயந்திரம் விபத்து ஒருவர் உயிரிழப்பு; மூவர் படுகாயம்

## பூநகரிப் பகுதியில் சம்பவம்

மன்னாரில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்ற மோட்டார்சைக்கிள், உழவு இயந்திரத்துடன் மோதியதில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மன்னாரில் இருந்து நேற்று முன்தினம் மதியம் மூன்றுமோட்டார்சைக்கிள்களில் 6 பேர் கொண்ட இளைஞர் குழு யாழ்ப்பாணம் நோக்கி பயணித்துள்ளது.

இதன்போது பூநகரி பகுதியில் உள்ள வளைவு ஒன்றில் வைத்து மேற்படி விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த மன்னார், அடம்பன் பகுதியை சேர்ந்த ஜக்சன் (வயது - 19) எனும் இளைஞன் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார்.

த.வினோத் (வயது-18) அடம்பன் மன்னார், இ.தனுசன் (வயது - 24) உடுப்புக்குளம் மன்னார், ந.கிருஸ்ணா (வயது - 23) உப்புக்குளம் மன்னார் ஆகிய 3 பேர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையின் அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். (3,10)

## இசை வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரியின் மேலைத்தேய இசைக் குழுவின் "THE PIONEER" இசை வெளியீட்டுவிழா நாளை 6 ஆம் திகதி 9 மணியளவில் Tamber மண்டபத்தில் நடைபெறும்.

இதில் சிறப்பு விருந்தினர்களாக க.தியாகராஜா, க. கணேசலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர். (5)

## ஞானச்சுடர் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் வெளியீடான ஞானச்சுடரின் மாசிமாத இதழ் 254 ஆவது வெளியீடாக வெளிவந்துள்ளது. (5)

# மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ. பிரதேசத்தில் பொற்பதி, நடுக் குடத்தனை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில பட்டாணிச்சூர் கிராமத்திலும் மன்னார் பிரதேசத்தில் நானாட்டான் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

# கேகாலை மாவட்டத்தில் 25 இலட்சம் தேயிலை

## கன்றுகளை வளர்க்கும் திட்டம்

(கொழும்பு)

கேகாலை மாவட்டத்தில் இந்த வருடத்தில் 25இலட்சம் தேயிலை கன்றுகளை வளர்ப்பதற்குத் திட்டமிடப்பட்டிருப்பதாக சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகாரசபையின் கேகாலை மாவட்ட முகாமையாளர் டபிள்யூ. எம்.பி.எஸ்.விஜேதுங்க தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தில் மாவட்டத்தில் 138 ஏக்கர் நிலப்பரப்பில் தேயிலை உற்பத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(2-7)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- உலக இயந்திரத்தின் சக்கரங்களில் இருந்து தப்பி ஓட நினைக்காதீர்கள். அதன் உள்ளே நின்றுகொண்டு கடமையை செய்து கர்மயோகத்தின் ரகசியத்தைக் கற்றுக் கொள்ளுங்கள்.
- சூழ்நிலைக்கு ஏற்ப வாழ்வை திருத்தி அமைத்துக் கொள்வதுதான் வெற்றிகரமான வாழ்விற்குரிய முழுமையான ரகசியம்.
- பிரதிபலன் எதையும் எதிர்பார்க்காமல், உலகிற்குச் செலுத்தும் ஒவ்வொரு நல்லெண்ணமும், நமது கர்மச்சங்கிலி இணைக்கும் கண்ணி ஒன்றை உடைத்து எறிகிறது. இதனால் பிறவித்தளை அறுபடுகிறது.
- எப்போதும் புனிதமான நல்ல எண்ணங்களைச் சிந்தியுங்கள். பிறருக்குப் பயன்படும் நல்ல விடயங்களைப் பேசுங்கள். நல்ல பணிகளில் ஈடுபட்டு உலகிற்கு நன்மை செய்யுங்கள்.
- சிந்தனை, சொல், செயல் மூன்றும் ஒன்றாக விளங்கினால் உலகையே ஆட்டி வைக்க முடியும்

### விக்ரம்-ராஜன்-கங்கு வெற்றிக் கிண்ணம்

# விக்கெட் வேட்டை நடத்திய அலன்குமார்

# சென்றலைட்ஸ் அணி சம்பியன்








கொக்குவில் வளர்மதி விளையாட்டுக்கழகம், விக்ரம் - ராஜன் - கங்கு ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக, யாழ்.மாவட்டத்திலிருந்து அழைக்கப்பட்ட ஆறு விளையாட்டுக்கழகங்களுக்கிடையில் அணிக்கு 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தி வருகின்றது.

வழமையான அழைக்கப்பட்ட 4 அணிகளுக்கிடையில் நடைபெறும் இந்தச் சுற்றுப்போட்டியானது, 2019 ஆம் ஆண்டு ஆறு அணிகளாக மாற்றப்பட்டன. அந்த வகையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யூனியன்ஸ், வட்டுக் கோட்டை ஓல்ட்கோல்ட்ஸ், கொக்குவில் மத்திய சன சமூக நிலையம், சென்றலைட்ஸ் அணி மற்றும் ஜொலிஸ்ரார்ஸ் அணிகள் இந்தச் சுற்றுப்போட்டியில் பங்குபற்றின.

இந்தச் சுற்றுப்போட்டியில், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணியும், 2018 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியும் சம்பியனாகியிருந்தன.

முதற்சுற்று ஆட்டங்கள் நடைபெற்று, தொடர்ந்து அரையிறுதியாட்டங்கள் இடம்பெற்றன. முதலாவது அரையிறுதியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் 3 ஓட்டங்களால் ஓல்ட்கோல்ட்ஸ் அணியை வென்றது.

இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் அணி, 32 ஓட்டங்களால் யூனியன்ஸ் அணியை வென்றது. இறுதிப்போட்டி கடந்த 3 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை 40 ஓவர்களைக் கொண்ட போட்டியாக நடை பெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற சென்றலைட்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட முடிவு செய்தது.

துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி. தொடக்கத்தை சரியாக நிலைப்படுத்தி, 2 விக்கெட் இழப்பிற்கு 100 ஓட்டங்களைக் கடந்தது. அதன் பிறகு அலன்குமார் வீசிய இரண்டு ஓவர்களில், கே.சி.சி.சி.அணியின் சரிவு ஆரம்பமாகியது. தொடர்ச்சியாக விக்கெட்டுகளை இழந்து, 125 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுகளை இழந்து மோசமாக தடுமாறியது.

9 ஆவது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த பிரதாபன் - பிரதீஸ் ஜோடி அணியை காப்பாற்றியது. இவர்கள் இருவரும் 70 ஓட்டங்களை இணைப்பாட்டமாக கடந்து, அணிக்கு வலுச்சேர்த்தனர்.

கே.சி.சி.சி. அணி 40 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 200 ஓட்டங்களை எடுத்தது. துடுப்பாட்டத்தில் பிரதீஸன் ஆட்டமிழக்காமல் 33, ஜெயரூபன் 33, சத்தியன் மற்றும் பிரதாபன் தலா 32 ஓட்டங்களையும் பானுஜன் 31 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென்றலைட்ஸ் அணி சார்பாக, அலன்குமார் 8 ஓவர்கள் பந்துவீசி 30 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளையும், தசோபன் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

201 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலளித்தாடிய சென்றலைட்ஸ் அணி, தொடக்கம் முதல் சிறப்பாக ஆடியது. இரண்டாவது விக்கெட் இணைப்பாட்டமாக ஜெனோசன் - பிரியலக்சன் இணைப்பாட்டம் அணிக்கும் மிகுந்த வலுச்சேர்த்தது. இதன் பயனாக 36 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. ஜெனோசன் 48 ஓட்டங்களையும் பிரியலக்சன் 47 ஓட்டங்களையும் செல்ரன் 26 ஓட்டங்களையும் நிரோஜன் ஆட்டமிழக்காமல் 20 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் கே.சி.சி.சி. அணி சார்பாக, பிரதீஸ் 2 விக்கெட்டுகளையும் துஸியந்தன் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

சுற்றுப்போட்டியில் 130 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்து 9 விக்கெட்டுகளைக் கைப்பற்றியிருந்த, கே.சி.சி.சி.அணியின் ரி.சத்தியன் தொடர் ஆட்டநாயகனாகவும் அதிக விக்கெட்டுகளைக் கைப்பற்றிய வீரராகவும் தெரிவு செய்யப்பட்டார்.

இறுதிப்போட்டியில் 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றி சென்றலைட்ஸ் அணியின் வெற்றிக்கு காரணமாகவிருந்த அலன்குமார் இறுதிப் போட்டியின் ஆட்டநாயகனாகவும் அதிக சிக்ஸர்கள் அடித்த வீரராக ஓல்ட்கோல்ட்ஸ் அணியின் மதுசனும் அதிகபட்ச தனிநபர் ஓட்டம் பெற்ற வீரராக 91 ஓட்டங்களை ஆட்டமொன்றில் பெற்ற யூனியன்ஸ் அணியின் மோகன்ராஜூம் தெரிவு செய்யப்பட்டனர். (க-26)

## அரையிறுதிக்குள் நுழைந்தது இளவாலை யங்ஹென்றிஸ்



யாழ்ப்பாணம் லீக்கின் 75 ஆவது ஆண்டு நிறைவையொட்டி, யாழ். மாவட்டத்திலுள்ள லீக்குகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையில் கால்ப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடத்தி வருகின்றது.

இந்தச் சுற்றுப் போட்டியின் முதற்சுற்று ஆட்டங்கள் தற்போது லீக் முறையில் நடைபெற்று காலிறுதியாட்டங்கள் நடைபெறுகின்றன.

கடந்த 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு நடைபெற்ற மூன்றாவது காலிறுதியாட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் யங்ஹென்றிஸ் அணி, 03:00 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்குள் நுழைந்தது. (க-26)







வலிகாமம் கல்விவலய பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

நடைபெற்ற இச் சுற்றுப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் 20 வயதிற்குட்பட்ட பெண்கள் அணி சம்பியன் பட்டத்தை வென்றதுடன் 20 வயதிற்குட்பட்ட ஆண்கள் அணி, 18 வயதிற்குட்பட்ட பெண்கள் அணி 2 ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டது. (கு)

## மொரட்டுவ தபாலக அணியை வீழ்த்தி சம்பியனாகியது யாழ். தபாலக அணி





யாழ்ப்பாணம் தபாலக அணிக்கும் மொரட்டுவ தபாலக அணிக்கும் இடையிலான சிநேகபூர்வ மென்பந்து இருபது-20 துடுப்பாட்டப் போட்டி கடந்த 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அரியாலை காசிப்பிள்ளை விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாண தபாலக அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்து 189 ஓட்டங்களைப் பெற்றது.

யாழ்.தபாலக அணி சார்பாக சயந்தன் 43, நர்மிதன் 36, கோகுலன் 30 ஓட்டங்களைப்பெற்றுக்கொண்டனர்.

190 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மொரட்டுவ தபாலக அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 34 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது.

இதன்மூலம் 156 ஓட்டங்கள் வித்தியாசத்தில் யாழ்.தபாலக அணி அபார வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை வென்றது. யாழ். தபாலக அணி சார்பாக லதீசன் 6 விக்கெட்டுக்களையும் மாலவன் 2 விக் கெட்டுகளைப் பெற்றுக் கொண்டனர். (க)

## வரும் 19ஆம் திகதி வடக்கு, கிழக்...

சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்தது.

இந்த சந்திப்பில் கிழக்கு மாகாண வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் அ.அமலநாயகி, அம்பாறை மாவட்ட இணைப்பாளர் ரி.செல்வராணி, திருகோணமலை மாவட்ட இணைப்பாளர் எஸ்.சரோஜாதேவி ஆகியோர் கலந்துகொண்டு கருத்துகளை வெளியிட்டனர்.

இந்த போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கிழக்கு, தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள், தொழில்நுட்ப கல்லூரி, ஆசிரிய பயிற்சி கல்லூரி, ஆசிரிய சங்கங்கள், பாடசாலை மாணவர்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், ஊடக சங்கங்கள், சமயத் தலைவர்கள், இளைஞர் கழகங்கள், விளையாட்டு கழகங்கள், மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள், வர்த்தக சங்கங்கள், அரசியல் கட்சி உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் அன்றையதினம் வர்த்தக சங்கத்தினர் வடக்கு, கிழக்கில் தமது வர்த்தக நிலையங்களை மூடியும் அரச மற்றும் தனியார் போக்குவரத்து சங்கத்தினர் தமது போக்குவரத்து சேவைகளை நிறுத்தியும் பூரண ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அரசியல் கட்சிகள் தமது அரசியல் வேறுபாடுகளை களைந்து இந்த போராட்டத்தில் பங்கேற்குமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் கிழக்கு மாகாணத்தில் உள்ள மூவின மக்களும் தமது நியாயமான கோரிக்கைக்கு ஆதரவு வழங்குமாறும் அச்சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

இதேவேளை சர்வதேச நாடுகளுக்கு நல்லிணக்க செயற்பாடுகளில் ஈடுபடுவதாக காட்டிக்கொண்டு இலங்கை அரசாங்கம், கடத்தல்களில் ஈடுபடுபவர்களை பாதுகாக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுவதுடன் இனவழிப்பு செயற்பாடுகளுக்கு துணைபோவதாக காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்துள்ளனர். (3-9)

## புதிய பட்ஜெட்...

செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த வரவு - செலவுத்திட்டத்தில், பொதுமக்களுக்கான பல சலுகைகள் வழங்கப்படுமென்றும், குறிப்பாக மானியங்கள் குறித்த அறிவிப்புகள் வெளியாகலாம் என்றும் நம்பப்படுகின்றது.

நிதி அமைச்சர் மங்கள சமரவீரவால் முன்வைக்கப்படும் வரவு செலவுத் திட்டத்திலும், பாதுகாப்பு அமைச்சுக்கே கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

மேலும் இன்று வரவு-செலவுத்திட்ட உரை மாத்திரமே இடம்பெறுவதுடன், 6ஆம் திகதி முதல் 12ஆம் திகதிவரை இரண்டாம் வாசிப்புமீதான விவாதம் நடைபெற்று மாலை 5.00 மணிக்கு வாக்கெடுப்பு நடைபெறும்.

பின்னர், 13ஆம் திகதி முதல், ஏப்ரல் 4ஆம் திகதி வரையிலான 19 நாட்கள் அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதம் நடைபெற்று, 5ஆம் திகதி வரவு - செலவுத்திட்டம் மீதான வாக்கெடுப்பு நடை பெறும்.

வரவு - செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படும் தினத்தில், பார்வையாளர் கலரி மூடப்பட்டிருப்பதுடன், முன்கூட்டியே அனுமதி பெற்றவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)

## முள்ளிவாய்க்...

25 இலக்கத் தகடுகள் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளன.

சிவராத்திரி வழிபாட்டுக்காக நேற்று முன்தினம் முள்ளிவாய்க்கால் மேற்கு பகுதியில் ஆலய வளாகம் ஒன்றில் பொதுமக்கள் சிரமதானப்பணியில் ஈடுபட்டனர். இதன்போது, ஆலய வளாகத்தில் இருந்து விடுதலைப் புலிகளின் ஒருதொகை இலக்கத் தகடுகள் மீட்கப்பட்டன.

மீட்கப்பட்ட இலக்கத் தகடுகள் விடுதலைப் புலிகளின் வெவ்வேறு படையணிகளை குறிப்பவையாக இருக்கின்றன. இதனால், அந்த ஆலயப்பகுதி இறுதி யுத்த சமயத்தில் விடுதலைப்புலிகளின் மருத்துவமனையாக இருந்திருக்கலாமென்றும் கருதப்படுகிறது.

இலக்கத்தகடு மீட்கப்பட்ட விடயம் முல்லைத்தீவு பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, பொலிஸார் அவற்றை மீட்டனர். (3,281)

## உடைத்த வளை...

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் வருடாந்த சிவராத்திரி திருவிழாவை முன்னிட்டு திருக்கேதீஸ்வரம் ஆலயத்திற்குள் செல்லும் வரவேற்பு வளைவு அமைக்கும் பணி கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இடம் பெற்றபோது இரு மதத்தினருக்கிடையில் இடம் பெற்ற முரண்பாடுகளைத் தொடர்ந்து அங்கு பதற்ற நிலை ஏற்பட்டதோடு,குறித்த வரவேற்பு வளைவுஉடைத்துசேதப்படுத்தப்பட்டது.

இந்த நிலையில்,குறித்த வளைவு உடைக்கப்பட்டமை தொடர்பாக திருக்கேதீஸ்வர ஆலய நிர்வாகத்தினர் மன்னார் பொலிஸ் ஊடாக மன்னார் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தனர்.

குறித்த வழக்கு நேற்று திங்கட்கிழமை மதியம் மன்னார் நீதிமன்றத்தில் மன்னார் பதில் நீதவான் இ.கயஸ்பெல்டானோ தலைமையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட பதில் நீதவான் இ.கயஸ்பெல்டானோ அகற்றப்பட்ட குறித்த வரவேற்பு வளைவினை தற்காலிகமாக மீண்டும் அமைத்து எதிர்வரும் நான்கு நாட்களுக்கு வைக்குமாறு திருக்கேதீஸ்வர ஆலய நிர்வாகத்திற்கு அனுமதி வழங்கினார். (3-285)

# முல்லைத்தீவு மாட்டத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் உயிரிழப்பு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த மூன்று மாதங்களில் ஆயிரத்திற்கு மேற்பட்ட கால்நடைகள் உயிரிழந்துள்ளதாக பண்ணையாளர் கள் தெரிவித்துள்ளார்கள்.

கொக்குளாய், கொக்குத்தொடுவாய், நாயாறு, குமுழமுனை, தண்ணிமுறிப்பு, ஒதியமலை வரையான எல்லைப்பகுதிகளில் முப்பதாயிரத்திற்கு மேற்பட்ட கால்நடைகள் காணப்படுகின்றன. பல பண்ணையாளர்கள் கால்நடைகளை வளர்க்கமுடியாத சூழலில் காணப்படுகின்றார்கள்.

குறிப்பாக எருமை மாடுகள் மற்றும் நாட்டு மாடுகள், கிளாறி இனமாடுகள் என பண்ணையாளர்கள் பட்டியாக வளர்த்து வருகின்றார்கள் கொக்குளாய் கடல்நீர் ஏரியும் மற்றும் கோட்டைக்கேணி, எரிஞ்சகாடு, நாயாற்று வெளி மற்றும் ஆண்டான்குளம், குமுழமுனை, தண்ணிமுறிப்பு, ஒதியமலை போன்ற பிரதேசங்களில் வயல் செய்கை காலங்களில் வளர்கப்பட்ட பட்டி மாடுகள் தற்போது நெற்செய்கை அறுவடையின் பின்னர் தொடர்ச்சியாக இறந்து வருவதாக பண்ணையாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.

மேலும் இந்நிலையில் கால்நடைகள் நாள்தோறும் இறந்து கொண்டு செல்வதால் தங்கள் வாழ்வாதாரம்பாதிக்கப்பட்டுள்ளதாக கவலை தெரிவித்துள்ளார்கள். (3-281)

## வடக்கு மாகாண...

மாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பணித்துள்ளார்.

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் எதிர்கால செயற்பாடுகள் மற்றும் சவால்கள் தொடர்பாக நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

பொலிஸ் திணைக்களத்தின் அனைத்து பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் மூத்த அதிகாரிகள் இந்த கலந்துரையாடலில் பங்குபற்றியதுடன், ஒவ்வொரு பிரிவினதும் செயற்பாடுகள் பற்றி அவர்கள் விளக்கமளித்தனர்.

இதுதொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பொலிஸ் திணைக்களத்திற்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் தான் பொலிஸ் திணைக்களத்திடம் எதிர்பார்ப்பதுபட்டம், பதவி, கட்சி என்ற எவ்வித வேறுபாடுகளும் இன்றி அனைவருக்கும் ஒன்று போல் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொலிஸ் சேவையாகும்.

எனது அரசியல் வாழ்க்கையில் குற்றவாளிகள் பற்றி பேசுவதற்கு நான் எந்தவொரு பொலிஸ் நிலையத்திற்கும் தொலைபேசி அழைப்பை மேற்கொண்டதில்லை.

மக்கள் நேய சேவையை வழங்கும் அதேநேரம் குற்றவாளிகளுக்கு எதிராக உரிய நடவடிக்கையை எடுத்து நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களை உரிய முறையில் மேற்கொள்வதற்கு பொலிஸ் சேவையில் உள்ள அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

மேலும் பொலிஸ் திணைக்களத்தின் பௌதீக வளங்களை அபிவிருத்தி செய்து அதன் முன்னேற்றத்திற்காக நடவடிக்கை எடுப்பது போன்று நாளாந்தம் பொலிஸ் நிலையங்களுக்கு கிடைக்கும் முறைப்பாடுகளின் எண்ணிக்கையை குறைப்பதற்கு விஞ்ஞானபூர்வமாக தயாரிக்கப்பட்ட முறைமையொன்று அவசியமாகும்.

இதற்காக நிபுணர்களின் உதவியை பெற்று உரிய முறைமையொன்றை தயாரிக்க வேண்டும். முன்னைய முறைப்பாடுகள் பற்றி ஆராய்ந்து குறுங்கால, இடைக்கால மற்றும் நீண்ட கால நிகழ்ச்சித்திட்டங்களின் அடிப்படையில் அந்த திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியும்.

அபிவிருத்தியடைந்த நாடொன்றின் பண்பு பொலிஸ் நிலையம் அல்லது சிறைக்கூடங்களை அதிகரிப்பதன்றி குற்றங்களை தவிர்ப்பதற்காக எடுக்கப்பட வேண்டிய சமூக மாற்றம் பற்றி கவனம் செலுத்துவதாகும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

கொள்கை ரீதியான தீர்மானமொன்று இல்லாமல் பொலிஸ் நிலையங்களை தாபிப்பதன் மூலம் ஏற்படும் பௌதீக வளம் தொடர்பான பிரச்சினைகள் பற்றியும் ஜனாதிபதி கவனம் செலுத்தியதுடன், எதிர்காலத்தில் பொலிஸ் நிலையங்களை தாபிக்கும் போது ஒரு குழுவொன்றின் ஊடாக அது பற்றி தீர்மானம் மேற்கொள்வதை கொள்கை சார்ந்த விடயமாக நடைமுறைப்படுத்துமாறும் பணிப்புரை விடுத்தார்.

இதன் போது அப்பிரதேசத்தின் மக்கள் தொகை, கிடைக்கும் முறைப்பாடுகள் உள்ளிட்ட ஏனைய பின்னணிகள் பற்றி கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் பொலிஸ் நிலையங்களுக்கு தமிழ் மொழி பேசக்கூடிய பொலிஸ் அதிகாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் பற்றியும் கேட்டறிந்த ஜனாதிபதி, இந்த விடயத்தை மேலும் பலப்படுத்துமாறும் பணிப்புரை விடுத்தார்.

கணனி குற்றங்களை ஒழிப்பதற்காக பொலிஸ் அதிகாரிகளை பயிற்றுவித்தல் உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகளின் பயிற்சி நடவடிக்கைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டதுடன், வடக்கில் நிர்மாணிக்கப்படவுள்ள பொலிஸ் பயிற்சி நிலையத்தின் நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்துமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

இதே நேரம் கொழும்புக்கு வெளியே பிரதான வைத்திய சாலைகளில்பொலிஸ்அதிகாரிகளுக்கு தனியான விடுதித் தொகுதிகளை அமைக்கும் நிகழ்ச்சித்திட்டம் பற்றியும் ஜனாதிபதி கவனம் செலுத்தினார்.

மேலும் தூரப் பிரதேசங்களில் இருந்து கடமை நிமித்தம் கொழும்புக்கு வரும் பெண் பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகளின் வசதிகளை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் பற்றியும் ஜனாதிபதி அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

பொலித்தீன் தடையை நடைமுறைப்படுத்தல் உள்ளிட்ட சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் பொலிஸ் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புகள் பற்றியும் ஜனாதிபதி குறிப்பிட்டதுடன், தூரப்பிரதேச பேருந்து வண்டிகளில் இடம்பெறும் கப்பம் வாங்கும் விடயம் பற்றியும் குறிப்பிட்டார். அது பற்றி துரிதமாக கவனம் செலுத்தி நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துமாறும் பொலிஸ் திணைக்களத்திற்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

திருப்தியாக தனது மக்கள் சேவையை வழங்குவதற்காக பொலிஸ் திணைக்களத்தின் கீழ் வகுப்பு அதிகாரிகளின் அனைத்து பிரச்சினைகளுக்கும் கட்டம் கட்டமாக தீர்வுகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (3)

## இனப் படுகொலைக்கு நீதி கோரி...

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்கான நீதியை வலியுறுத்தி ஜெனிவாவில் பாரிய கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவையின் 40ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் நடைபெற்று வருகிற நிலையில் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

போரக்குற்றத்திற்கு நிலையான நீதி வேண்டும் என்றும், சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் தொடர்பாக 10 ஆண்டுகள் கடந்த நிலையில் எந்த தீர்வும் எட்டப்படாத நிலையில், ஜெனிவா கூட்டத்தொடரில் ஐ.நா. அழுத்தம் வழங்குமாறு கோரி இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஜெனிவா தொடருந்து நிலையத்தில் இருந்து ஐ.நா. மனித உரிமை ஆணையகம் முன்றல் வரை இந்த கண்டன ஆர்ப்பாட்டப் பேரணி இடம்பெற்றது.

மேலும் அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்ட பிரச்சினை, மீள்குடியேற்றம் தொடர்பான பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் தமிழ் அமைப்புக்கள் ஊடாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு வழங்கிவைக்கப்படவுள்ளது.

கனடா, லண்டன், ஐரோப்பிய நாடுகளில் இருந்து தமிழ் சமூகத்தினர் என ஆயிரக்கணக்கில் போராட்டத்தில் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (3)

கொவிசெத
திகதி 2019.03.04
சீட்டிழுப்பு இலக்கம் 2053
ஆங்கில எழுத்து Q
வெல்லப்பட்ட இலக்கங்கள் 58 66 69 75
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2019/03/04
சீட்டிழுப்பு இலக்கம் 3868
ஆங்கில எழுத்து W
வெல்லப்பட்ட இலக்கங்கள் 3 9 5 5 6 2
தேசிய லொத்தர் சபை

சுபிரி வாசனா
திகதி 2019/03/04
சீட்டிழுப்பு இலக்கம் 1409
இலக்கம் 08
வெற்றி இலக்கம் 02 09 44 63
16 36
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 2019/03/04
சீட்டிழுப்பு இலக்கம் 0352
F 05
வெற்றி இலக்கங்கள் 02 25 46 67

## விற்பனைக்கு

கோப்பாய்ச் சந்திக்கு அண்மையில் 1 1/2 பரப்பு சுற்று மதிலுடன் கூடிய வெறும் காணி மற்றும் 1 1/2 பரப்பு காணிக்குள் வீடும் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:
**021 222 7119, 077 570 4278**

## ஆங்கில வகுப்பு

தரம் 02. 03. 04. 05. 06. 07. 08. 09. 10 ஆம் O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில் புரிபவர்களுக்குமான English Spoken With Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும். (7738)

தொடர்புகளுக்கு : 076 707 0069 **M.Suren**

## விரைவு பொதிகள் சேவை

**விசேட விலை குறைப்பு**

(C-5632)

UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS

0768226240 V2 TRAVELS

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

## காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.
தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்) (7692)

## வீடு விற்பனைக்கு

வண்ணார்பண்ணை பகுதியில் அமைதியான வாழிடச் சூழலில் இரண்டு பரப்புக் காணியுடன் கூடிய வீடு உடனடியாக விற்பனைக்கு உண்டு. தரகர்கள் தேவையில்லை. நேரடித் தொடர்பு:
**077 666 8909** (7747)

## பணியாளர் தேவை

01. வரவேற்பாளர் - பெண்
02. சாரதிகள் - 6வீல், 10வீல் டிப்பர்

தொடர்புகளுக்கு:
**077 037 6150** (7742)

## காணி விற்பனைக்கு

இயக்கச்சி ஏ9 வீதிக்கு அருகாமையில் தென்னங்கன்றுகளுடன் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 076 525 9073, 076 400 6418 (7748)

## வேலைவாய்ப்பு

**நீங்களும் ஒரு Businessman ஆகலாம்...**

ஐரோப்பிய மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் அதிகூடிய வருமானத்தை ஈட்டித்தரக்கூடிய ஒரு தொழில்துறையாக திகழ்கின்ற வியாபாரத்துறையில் நீங்களும் கால்பதிக்க சிறந்ததொரு வாய்ப்பு. அது மாத்திரமின்றி வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புக்காக செல்லவிருக்கும் மாணவர்கள் எமது நிறுவனத்தின் சான்றிதழை இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் காரியாலயத்தில் அத்தாட்சிப்படுத்த முடியும் என்பதனையும் அறியப்படுத்துகின்றோம். மேலதிக விபரங்களுக்கு உடன் அழையுங்கள். **077 123 7797** (7735)

## நெல்லியடிப் பகுதி...

நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று திங்கட்கிழமை மாலை நெல்லியடி மகாத்மா வீதியில் மாவாப் பாக்குடன் ஒருவர் நடமாடுவதாக நெல்லியடி பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து அப்பகுதிக்கு சென்ற பொலிஸார் மாவாப் பாக்குடன் நின்ற இளைஞரை கைது செய்ததுடன் அவரிடமிருந்து மூன்று மாவா பாக்கு பை கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (3-60)

## படையினர் வசமு...

பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராய்ச்சியிடம் இந்த கோரிக்கையை அவர் விடுத்துள்ளார்.

யாழ்.மாவட்ட பாதுகாப்புப் படைகளின் தலைமையகத்திற்கு நேற்று திங்கட்கிழமை விஜயம் மேற்கொண்ட ஆளுநர், யாழ். கட்டளைத் தளபதியுடனான கலந்துரையாடலிலேயே இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

இக்கலந்துரையாடலின் போது யாழ். மாவட்டத்தின் தற்போதைய பாதுகாப்பு நிலைமைகள் மற்றும் நல்லிணக்க ரீதியில் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்படும் மனிதாபிமான செயற்பாடுகள் குறித்து ஆளுநருக்கு கட்டளைத் தளபதி விளக்கமளித்தார்.

மேலும், ஜனாதிபதியின் நல்லிணக்க செயற்பாடுகளுக்கமைவாக மேலதிகமாக தற்போது பாதுகாப்பு படையினரிடம் இருக்கும் தனியார் காணிகளை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, பாதுகாப்பு கேந்திரஸ்தானத்தில் அக்காணிகள் இருக்கும் பட்சத்தில் காணி உரிமையாளர்களுடன் கலந்துரையாடி அவற்றிற்கு மாற்றீடான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் யாழ்.மாவட்டத்தில் காணப்படும் குறித்த காணிப் பிரச்சினைகளை விரைவில் முடிவிற்கு கொண்டு வருமாறும் ஆளுநர் கட்டளைத் தளபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (3)

## திருக்...

மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் நேற்று நடைபெற்ற சிவராத்திரி தினத்திற்கு இலங்கையின் பல பாகங்களில் இருந்து பல இலட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தனர். (03-315)






இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.03.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.